பேசும் படம்

நவம்பர் 1952 ★ 12 அணா

ஆரம்ப தேதியை எதிர்பாருங்கள்
மின்மினி
MINMINI
தமிழ்ப்படம்
கதை வசனம்
சிரஞ்சீவி
யோகமங்களம்.....
விஜயகுமார்..மேனகா.
எஸ். கிருஷ்ணசாமி...
கிருஷ்ணசர்மா......
மற்றும் பலர்
R.A.L. டென்னகூன்
புரொடக்ஷன்ஸ்
ஸ்டூடியோ
வாஹினி
MUTHU

ஜெயந்தி புரொடக்ஷன்ஸ்
முதல் தயாரிப்பு
பொன்வயல்
கதை: கல்கியின் "பொய்மான் கரடு"
டைரக்ஷன்: ஏ. டி. கே.
ஸ்டுடியோ: வாஹினி
G.H.RAO
பூரண உரிமையாளர்கள்: மதறாஸ் பிக்சர்ஸ் சர்க்யூட் மதறாஸ் 14

m211,N42.P
N52.11.3
89672

படம் 11
காட்சி 3

பேசும் படம்

★ நவம்பர் 1952 ★

பொருளடக்கம்

1.	தலையங்கம்	... 5
2.	ஸ்டூடியோ விஜயம்	... 7
3.	பி. கே. ஸரஸ்வதி – மூவர்ணப் படம்	... 18
4.	'சௌகார்' ஜானகி – மூவர்ணப் படம்	... 19
5.	'பராசக்தி' கணேசன் இம்மாத நக்ஷத்திரம்	... 21
6.	பிரபா சகோதரிகள் வாழ்க்கைச் சித்திரம்	... 22
7.	மாப்பிள்ளை–திரைக் கதை	... 30
8.	செய்திப் படங்கள்	... 36
9.	வெளி வரவிருக்கும் படக் காட்சிகள்	... 44
10.	பொன்வயல் – இருவர்ணப் பட அனுபந்தம்	49
11.	செய்திச் சுருள்	... 53
12.	கேள்வி – பதில்	... 58
13.	நான் ரஸித்த காட்சி	... 62
14.	தபால் பெட்டி	... 67

PESUM PADAM, Tamil Monthly Magazine: Printed and Published by T. V. Ramanath, at RAMANATH PRESS, 188, Royapettah High Road, Madras - 14. (Phone: 86001) Proprietors: RAMANATH PUBLICATIONS. Managing Editor: T. V. Ramanath. Sole Agents for Ceylon: Mohan & Co., Ltd., 66, First Cross Street, Colombo. Sole Agent for Malaya: P. Sivaguru, 27, Scott Road, Kuala Lumpur and 8, China Street, Penang.

Editorial & Publication Offices:
188, Royapettah High Road, Madras - 14

MEMBER: AUDIT BUREAU OF CIRCULATIONS LTD.

பழந்தமிழ்ப் பண்பாட்டை
விளக்கும்
பண்புமிக்க
கலை ஓவியம்
மாடர்ன்
தியேட்டர்ஸ்
வளையாபதி
டைரக்ஷன் · T.R. சுந்தரம் & மஸ்தான்
வசனம் · பாரதிதாஸன்
சென்னை பிரபாத், கெயிட்டி
மற்றும்
ஸரஸ்வதீ,
தமிழ் நாடெங்கும்...

'பேசும் படம்' பேசுகிறது

விஜயதசமியும் தீபாவளியும்

விஜயதசமியும் தீபாவளியும் சினிமாக்காரர்களின் முக்கியமான இரண்டு பண்டிகைகள். மற்ற எத்தனையோ பண்டிகைகள் இருந்தாலும் இவையிரண்டும்தான் சினிமா உலகத்தில் பிரதானம் வகிக்கின்றன.

விஜயதசமியன்றுதான் பல பட முதலாளிகள் தங்கள் புதுப் படத்துக்கு ஆரம்ப பூஜை நடத்துகிறார்கள். அதேபோல புதுப் படங்களும் அநேகமாகத் தீபாவளியன்றுதான் வெளியிடப்படும்.

இதர பண்டிகை தினங்களில் ஆங்காங்கு சில படங்களுக்குப் பூஜை நடப்பதும், சில படங்கள் வெளியிடப் படுவதும் உண்டு. ஆனாலும் விஜயதசமியும் தீபாவளியும் பெற்றுள்ள மகிமையே தனிதான்.

சென்ற வருஷ விஜயதசமியில் சென்னையில் மட்டும் சுமார் ஒன்றரை டஜன் படங்களுக்கு ஆரம்ப விழா நடந்தது. சென்ற தீபாவளியில் இரண்டு படங்கள் திரையிடப்பட்டன. ஆனால் இந்த வருஷம் விஜயதசமியில் இங்கொன்றும் அங்கொன்றுமாக மொத்தம் சுமார் அரை டஜன் படங்களுக்குத்தான் பூஜை போடப்பட்டது. ஆனால் இந்த வருஷம் தீபாவளியின் போது நான்கு படங்கள் வெளியிடப்பட்டன.

சமீபத்தில் சில பெரிய ஸ்டூடியோக்களில் ஆள் குறைப்பு நடந்தது. சில படங்களே விஜயதசமியன்று ஆரம்பிக்கப்பட்டன. நான்கு படங்களே தீபாவளிக்கு வெளிவந்தன. இந்த விஷயங்களையெல்லாம் மனதில் கொண்டு கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால் என்ன தெரிகிறது? "படவுலகில் மந்த நிலைமை பரவலாச்சுது" என்று ஓர் அன்பர் பாடியதுதான் ஞாபகத்துக்கு வருகிறது. இந்த நிலைமைக்கு என்ன காரணம்?

வெளிவந்த படங்கள் ஒன்றன் பின் ஒன்றாக, மகுடி நின்ற பாம்பு போலப் பெட்டியில் சுருண்டு விட்டன. பல படங்கள் வெளிவரவே பயப்படுகின்றன. சில பாதியில் நின்று விட்டன பயத்தால்!

முன்போலப் படம் பார்ப்பதற்கு ஜனங்களிடம் மனம் இல்லையா, அல்லது பணம் இல்லையா? படங்களின் தரம் குறைந்து விட்டதா? ஜனங்கள் பார்க்கும் அவகாசமே இல்லாதபடி அதிகமான படங்கள் வெளிவந்து விட்டனவா? அல்

லது கட்டணங்கள் அதிகரித்து விட்டனவா? இதிலே என்ன காரணத்தினுல் நமது சினிமாத் தொழிலுக்கு இன்றைய மந்த நிலை ஏற்பட்டது?

மேலே குறிப்பிட்ட பல காரணங்களில் முதலிரண்டும் இந்த மந்த நிலைக்கு ஓரளவு காரணங்கள் என்று கூறலாம். ஜனங்களிடம் பணப் புழக்கம் வெகுவாகக் குறைந்து விட்டது. படங்களின் தரமும் ஓரளவு குறைந்து விட்டதும் உண்மை, ஆனுல் இதெல்லாவற்றைக் காட்டிலும் ஒரு முக்கியமான காரணமும் இருக்கிறது. ராஜாஜி போன்ற தலைவர்கள் இடைவிடாமல் "படம் பார்க்காதே!" என்று செய்து வரும் பிரசாரம்தான் அது.

ஜனங்களிடம் பணம் இல்லாததாலும், தலைவர்கள் பிரசாரத்தாலும், படங்களின் தரம் குறைந்ததாலும் இன்று நமது சினிமாத் தொழில் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதை நிவர்த்திக்க வேண்டாமா? இப்படியே இத்தொழிலை அழிய விட்டுவிட முடியுமா? இத்தொழிலில் வாழும் லக்ஷக் கணக்கான குடும்பங்களின் கதி என்ன ஆகும்?

இந்த மந்த நிலை மறைய வேண்டுமானுல் நாம் உடனே செய்யவேண்டிய சில காரியங்கள் இருக்கின்றன. அதைச் செய்தால்தான் நமது சினிமாத் தொழில் அழியாமல் காப்பாற்றப்படும்.

சென்ற விஜயதசமியில் சுமார் ஒன்றரை டஜன் படங்கள் ஆரம்பமாகியிருக்க, இந்த வருஷம் மட்டும் ஏன் சில படங்களே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன? இந்த வருஷம் தீபாவளியில் வெளியிடப்பட்ட படங்களில் இரண்டொன்று தான் நல்ல வசூலைப்பெற்று வருகிறதையே காரணமாகக் காட்டலாம். இந்த அச்சத்தால் தான் படமுதலாளிகள் புதுப் படம் தயாரிக்க தயங்குகிருர்கள். பல லக்ஷங்களைப்போட்டுப் படம் தயாரித்த பிறகு அந்தப் படம் "டப்பா"வாகி விட்டால் எப்பேர்ப்பட்ட பெரிய தலைகளும் மிகவும் கஷ்டப்படத்தான் வேண்டி ஏற்படும். ஆகவேதான் இந்தத் தயக்கம்.

முதலில் தயாரிப்புச் செலவைக் கால்வாசியாகக் குறைத்து, கட்டணங்களையும் பாதியாக்க வேண்டும். கொள்ளை லாப ஆசைக்குப் பதில் நியாயமான லாபத்தில் மட்டும் அக்கறை காட்ட வேண்டும். அதே போல்ப் படங்களின் தரத்திலும் பூரண கவனம் செலுத்தி, சிறந்த படங்களாகவே தயாரிக்க வேண்டும். தலைவர்களின் பிரசாரமும் நிற்கவேண்டும்.

இதற்கான முயற்சிகளில் இத்தொழில் சம்பந்தப்பட்ட அனைவரும் ஈடுபடாவிட்டால், இந்த விஜயதசமி தீபாவளிகளேதான் மீண்டும் வந்து கொண்டிருக்கும் என்பதை வற்புறுத்த விரும்புகிறேம்.



ஆர்.ஏ.எல். டென்னகூன் புரொடக்ஷன்ஸார் வாஹினியிலே 'மின்மினி'யை துரிதமாக முடித்து வருகின்றனர்,

ஸ்டுடியோ விஜயம்

நமது விசேஷ காமிரா நிபுணர் ஸ்டுடியோக்களைச் சுற்றி வருகிறார்

தீபாவளி வருவதற்கு முன் வழங்கும் சில கேள்விகள், வந்தபின் கேட்கப்படும் கேள்விகள் தனித்தனி ரகத்தைச் சேர்ந்தவை.

கலியாணமாகியிருந்தால் மனைவி பட்டுப்புடவை கேட்பாள். மச்சினனுக்கு ஒரு சரிகை வேஷ்டியைச் சிபாரிசு செய்வாள், குழந்தைகள் வெடியும், வாணமும் வேண்டுமென்று விடாப்பிடி கோரிக்கையை நடத்திக் கொண்டிருப்பார்கள். நண்பர்களோ 'என்ன தீபாவளிக்குப் 'போனஸ்' ஏதேனும் கிடைத்ததா?'' என்று கேட்பாகள்.

'பூங்கோதை' கதாநாயகன் நாகேஸ்வரராவுடன் 'மின்மினி' ஜமீன்தாரான கிருஷ்ண சர்மா படம் பிடித்துக்கொண்டார்.

இவை யெல்லாம் யானை வருவதற்கு முன்னமேயே கேட்கும் மணியோசையைப் போல் தீபாவளி வரும் முன்னே நாம் பதில்சொல்லக்கூடிய—கேட்கும் கேள்விகள்.

தீபாவளியன்றும், தீபாவளி கழிந்த பின்பும் வரக்கூடிய முக்கியமான கேள்வி 'கங்கா ஸ்நானம் ஆயிற்று?'' என்பதுதான். சென்னை வாசியா யிருந்தாலும், தார்பாலைவனத்தில வசிப்பவராக இருந்தாலும் தீபாவளியன்று மட்டும் அங்கெல்லாம் கங்கை பாய்ந்து ஓடிவந்து விடும். ஆனால் புனிதமான அந்த கங்கை ஜலம் எங்கே, நாற்றமடிக்கும் குழாய்த் தண்ணீர் எங்கே! இந்த ஞானப் பிரச்னை தீர்ந்ததும், அடுத்து ஜவுளி விமர்சனம் இத்யாதி நடைபெறும்.

இதுவரை நான் இந்த தீபாவளி பற்றிய முன்பின் கேள்விகளைப்பற்றி விமர்சித்ததற்குக் காரணம் இல்லாமலில்லை. ஏனெனில் சென்ற மாதம் நான் ஏவி. எம். ஸ்டூடியோவுக்குச் சென்றபோது ''கங்கா ஸ்நானம் ஆயிற்று?'' என்று குசலம் விசாரித்தார் ஒருவர்.

அப்பொழுதுதான் நான் தீபாவளி கழிந்து முதல் தடவையாக ஸ்டூடியோவுக்கு வந்திருக்கிறேன் என்பது நினைவுக்கு வந்தது. அத்துடன் மூக்

'பொன்வயல்' படப்பிடிப்பிலே என் காமிரா கண்ட காட்சி.



[illegible] மனிதனும் மிருகமும் நடிகர்களுடன், ரேவதி ஸ்ரீநிவாசராகவனும், [illegible] ஆசிரியர் எஸ். டி. சுந்தரமும்

வாஹினியின் பிரதான மேக்கப் மேன் பீதாம்பரம் மேனகாவுக்கு மேக்கப் செய்கிறார் 'மின்மினி'க்காக

கைப் பிடித்துக்கொண்டு குழாய் தண்ணீரின் நறுமண சுகத்தை உள்ளபடி பருக முடியாமல் அவஸ்தைப்பட்டுக்கொண்டு ஸ்நானம் செய்த எனக்கு நண்பர் கங்கையின் பெயரைச் சொன்னபோது ஆத்திரமாகத்தான் வந்தது. ஆகவே "கங்கா ஸ்நானம் ஆகவில்லை" என்று மெள்ள இழுத்தேன்.

"என்ன கங்கா ஸ்நானம் ஆகவில்லையா? .." என்று வியப்புடன் கேட்டார்.

"இல்லையா! புழலேரியின் நாற்றமடிக்கும் தண்ணீரிலேதான் ஸ்நானம் செய்தேன். நமக்கு கங்கையில் ஸ்நானம் செய்யும் பாக்கியம் எங்கு கிடைக்கப்போகிறது?"

'பெற்ற மனம்' படப்பிடிப்பின் போது, குமாரியுடன், எஸ். வி. ரங்கராவும் டி. வி. கிருஷ்ணசாமியும்...

என்று கிண்டலாகக் கூறினேன்.

நான் கிண்டலுக்குச் சொல்வதைப் புரிந்துகொண்ட அவர் "ஓஹோ! இதை நீர் முன்னமேயே எனக்குச் சொல்லியிருந்தால் இந்தப் பொற்றாமரைத் தடாகத்திலிருந்து தண்ணீர் 'சப்ளை' செய்திருப்பேனே. அல்லது குறைந்த பக்ஷம் இங்கேயாவது புனலாட ஏற்பாடு செய்திருப்பேனே!" என்று குறும்புப் புன்னகையோடு பதிலளித்தார் நண்பர்.



வசன ஒத்திகை செய்யும்போது, கதாசிரியர் டி.கே. கிருஷ்ணசாமியும் இருந்தார்.



ரேவதியில் கஜானனுவின 'மாமியார்' படப்பிடிப்பில் டைரக்டர் வேம்பு தீவிர கவனம் செலுத்துகிறார். அருகிலே நிற்பவர் காமிராமேன் ராய்.

"அப்படியானால் இந்த பொற்றாமரைத் தடாகத்தை தீபாவளியை முன்னிட்டு பிரத்தியேகமாக சிருஷ்டித்தீர்களா?" என்று கேட்டேன். எனக்குத் தெரியும், அது படத்திற்கான 'ஸெட்' என்பது. இருந்தும் தெரியாததுபோல அவரிடம் கேட்டேன்.

நண்பர் என்னை மேல்-கீழ் இறக்கமாகப் பார்த்து சிரித்தார். அவருக்கும் விஷயம் புரிந்து விட்டது 'சரிதான் போய்யா!' என்று சிரித்துக்கொண்டே சொல்லிவிட்டு, மறுபக்கம் திரும்பிக் கொண்டார்.

'மாமியார்' நடிகை கிரிஜாவும் அவர் தாயாரும



மேலே: 'மனி'தனை உருவாக்கும் கலை நிபுணர்கள

கீழே: நெப்டியூனில் 'மனிதன்' நடக்கும்போது நான் சென்றதன் பலன் இது. நடராஜன் வெற்றிலை மெல்லுகிறார்.

மனோஹர் கிரிஜா, டி. கே. பாலசந்திரன் மூவரும் 'மாமியா'ருக்காக தேநீர் அருநதுகின்றனர்.

நான் மறுபடியும அவரைக கிண்டல் செய்யலாம் என்று கிளம்பிய போது, திடீரென 144–அங்கு பிறப்பிக்கப்பட்டு விட்டது. இந்த 144 சட்டம் அமுலிலிருக்கும்போது இருவருக்குமேல் கூடிப் பேசக்கூடாது என்பது அர்த்தம். ஆனால் நான்



'மனிதன்' நடிகர் களானாடராஜன. ராயசாமி இவர்களுடன் லாவண்யா கிருஷ்ணமாச்சாரி



நெப்டியூனில் 'இன்ஸ்பெக்டர்' படப்பிடிப்பின்போது ஆர். எஸ், மணி டைரக்ட் செய்கிருர்.

ஏவி. எம்.மில் 'குணசாகரி' படப்பிடிப்பில்...

.......அக்கறை கொண்டவர்கள்.

சொன்ன இந்த 'சினிமா—144' அமுலிலிருக்கும் போது ஒருவருக்குமேல் எத்தனை பேர்கள் வேண்டுமானாலும் ஒரே இடத்தில் கூடலாம். ஆனால் மூச்சுவிடும் சப்தம்கூட வெளியே கேட்காதபடி நடந்து கொள்ள வேண்டும். நேயர்கள் இநத விசித்திர சட்டத்தை யூகித்துக் கொண்டிரா விட்டால்

(92-ம் பக்கம் பார்க்க



குசலகுமாரியின் ஷூட்டிங்கைப் பார்க்க எஸ். பி. எல். தனலக்ஷ்மியும்.
டி. எஸ். தமயந்தியும் வந்திருந்தனர்.



கஜானனுவின் 'மாமியா'ரில் நடிக்கிருர் கிரிஜா.

பி. கே. சரஸ்வதி

'இன்பவல்லி'யெனப் பிரபலமாகி,
'மாப்பிள்ளை'யினால் புகழ் பெற்று
மேகலாவின் 'நாம்' படத்தில்
இப்படித் தோன்றுகிறார்.

'பராசக்தி' கணேசன்

தீபாவளி வந்தது. அத்துடன் நேஷனல பிக்சர்ஸின் ஓர் அபூர்வ தயாரிப்பான 'பராசக்தி' படமும் வந்தது. சிவாஜி கணேசன் என்ற பெயரில் நாடகமேடையில் புகழ் பெற்ற - பட உலகின் புது அழைப்பான - கணேசன் திரையில் ரஸிகர்களின் முன்னே தோன்றினர்;

நம நாட்டிலே, ஆந்திரம், மலையாளம் போன்ற இடங்களிலிருந்த சரக்குகளை விடத் திறமைமிக்க பல தமிழ்க் கலைஞர்களிருக்கிருர்கள். ஆனல் அவர்களைத் தேடிப் பிடிக்கும் பொறுப்பைத்தான் யாரும் ஏற்க முன் வருவதில்லை. நேஷனல் பிக்சர்ஸாரின் முதல் தயாரிப்பு பராசக்தி. அதிலே துணிந்து ஒரு புது முகத்தை-பட உலக ரஸிகர்களுக்குச் சிறிதும் அறிமுகமில்லாத ஒருவரை-பிரதான பாத்திரத்திலே நடிக்கச் செய்து மகத்தான வெற்றியும் கண்டிருக்கிருர்கள்.

மூன்று சகோதரர்களுக்கிடையே ஒரே சகோதரி கல்யாணி. அவள் வாழ்வு துலங்க மூன்று சகோதரர் களின் ஆதரவு இருக்க வேண்டும். ஆனல் விதியின் சதியால் கட்டிய கணவனைப் பறிகொடுத்த கல்யாணி இட்டிலி விற்றுப் பிழைக்க நேரிடுகிறது. குணசேகரன் அவள் சகோதரன். சந்தர்ப்பவசத்தால் அனுதைப் பிச்சைக்காரனுகிவிட்ட அவன் தன் சகோதரியைப் புரிந்துகொண்டு-ஆனல் அவள் அறியா வண்ணம் அவளைக் காத்து வருகிருன்.

பெற்ற குழந்தையை ஆற்றில் போட்ட கல்யாணி குற்றவாளிக் கூண்டிலே குமுறுகிருள். அவளைக் கெடுக்க நினைத்த பூசாரியைத் தாக்கிய குற்றத்திற்காகக் கைதிக் கூண்டிலே நிற்கிருன் குணசேகரன. இருவருக்கும் நியாயம் வழங்க வேண்டியவர் அவர்களது சகோதரர்! நியாயம் கிடைக்கத்தான் செய்தது அதற்குக் காரணம்......கைதிக் கூண்டிலே கர்ஜனை புரிந்த குணசேகரனின் வாதம்தான்.

பராசக்தி நாடகமாக நடிக்கப்பட்ட போது அதிலே குணசேகரனுக நடித்தார். ஆனல் நாடகத்தில முகபாவ விளக்கங்கள் அதிகம் தேவையில்லை. வசன உச்சரிப்பின் மூலம் உணர்ச்சியைத் தூண்டிவிட சுலபமாக முடியும். ஆனல் சினிமாவில் முகபாவ விளக்கம் ரொம்பவும் அவசியம். சிவாஜி கணேசன் இதிலே மகத்தான வெற்றி பெற்றிருக்கிருர்.

நாடகமேடை நடிகர் என்ற நினைப்பை ஒரு சில இடங்களில் அவர் ஏற்படுத்தினுலும் அவரது வசன உச்சரிப்பு இக்குறையை நிவர்த்திசெய்து விடுகிறது.

கப்பல் விபத்துக்குப் பின் அனுதையாகி தெருக்களில் திரியும் கட்டத்திலிருந்து கணேசனின் நடிப்பு படிப்படியாக வளர்ந்து கோர்ட் ஸீனில் சிகர ஸ்தானத்தை அடைகிறது. ஒவ்வொருவர் உள்ளத்தையும் உணர்ச்சியால் தூண்டி விடும் வகையிலே அதியற்புதமாக நடித்திருக்கிருர் கணேசன.

வசனம் பிரமாதமாக அமைந்து விட்டால் மட்டும் போதாது. அதைச் சோபிக்கச் செய்யும் பொறுப்பு நடிகர்களின் கையில்தான் இருக்கிறது. 'பராசக்தி'யிலே தன் உச்சரிப்பு, நடிப்பின் மூலம் வசனத்திற்கு சிறப்பளித்திருக்கிருர் கணேசன்.

இன்னும் நன்ருக நடித்திருக்கலாம் என்ற அபிப்பிராயம் அவரைப் பற்றி யாருக்காவது ஏற்பட்டிருக்குமானுல் கூட முதல் படம் என்னும்போது குறையைச் சிறிதும் கருதமாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

பராசக்தி மூலம் கணேசனுக்குப் பல படங்களில் நடிக்கச் சந்தர்ப்பம் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை. அவைகளை நன்கு நிர்வகிக்கக் கூடிய திறமை அவரிடம் நிறைய இருக்கிறது. 'பராசக்தி'யில் கிடைத்தது போல அவருக்கு நிறைய சந்தர்ப்பங்கள் கொடுக்கப்படுமானுல் பராசக்தியின் அருளால் அவரது முன்னேற்றம் துரிதமாக நடைபெறும். புது முகங்களை ஆதரிக்க வேண்டும் என்ற எண்ணம் முதலாளிகளுக்குத் தோன்றுவதற்கும் பராசக்தியின் அருள்தான் தேவை.

பிரபா சகோதரிகள்

சினிமா உலகமே விசித்திர மானது. வெளியுலகிலேயே கிடைக்காததை ஆசையுடன் எதிர்பார்ப்பதும், உள்ளதைப் பாராட்டவோ ஆதரிக்கவோ செய்யாததுமான கொள்கை யுண்டு. சினிமா உலகில் சில வற்றைப்பற்றிப் பேசுகிறார் களே தவிர, அவைகளைப் பற்றி சிந்திப்பதுகூட இல்லை, உதா ரணமாக தற்போது புதுமுகம் தேவை, புதுமுகம் தேவை என்று கூச்சல்போடுகிறார்களே தவிர, கையிலிருக்கும் திறமை மிக்க இளம் கலைஞர்களைப் பற்றி அக்கறை கொள்ளுவது கிடையாது.

தற்சமயம் பட உலகில் சந் தர்ப்பம் கொடுக்கப்பட்டால் முன்னணிக்கு வரக்கூடிய திறமை மிக்க கலைஞர்கள் இருக்கிறார்கள். ஆனால் பட முதலாளிகள், டைரக்டர்களின் அனுதாபத்தையோ, அபிமா னத்தையோ பெற்ற கிழ நக்ஷத் திரங்களுக்குத்தான் பிரதான பாத்திரங்களில் நடிக்கச் சந் தர்ப்பமளிக்கின்றனர்.

நடிப்புத் துறையிலே, முக்கிய

மாகச் சினிமாத் துறையிலே தங்கள் குமாரர்களை ஈடுபடச் செய்வதற்கே பல பெற்றோர் கள் பயந்து வந்தார்கள். ஆனால் பிடிவாத மனப்பான்மை கொண்ட அந்தக் குமாரர்கள் எப்படியோ பல உலகங்களைத் தாண்டி பட உலகையடைந் தார்கள். ஆனால்சாதாரணமாக பெண்களில் பலரும் அப்படித் துணிவாகக் கிளம்ப முடியாத நிலையிலிருந்தார்கள். வெளிக் கிளம்பியவர்களும் ஓரிருவர் இருக்கத்தான் செய்கின்றனர்.

வாழ்க்கைச் சித்திரம்

'நான் சினிமாவில் கண்டிப் பாக நடிக்கத்தான் போகி றேன். இல்லாவிட்டா 'ஒ'ன்னு அழுவேன்' என்று ஒத்திகையும் செய்து காட்டிப் பயமுறுத்திய தன் மூலம் பெற்றோரைத் தன்

வழிக்குக் கொண்டு வந்து சினிமா உலகில் அவர்கள் 'அனுமதி'யுடனேயே பிரவேசித்தவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இப்படிப்பட்டவர்களில், தனக்குக் கொடுக்கப்படும் எந்தப் பாகத்தையும் (அனேகமாக வில்லனின் காதலி) கச்சிதமாக நடித்து ரஸிகர்களிடையே நல்ல பெயர் பெற்றுவரும் லக்ஷ்மிபிரபா குறிப்பிடத்தக்கவர்.

புது முகங்கள் தேவை என்று கதறுவதைவிட முதலாளிகள் திறமையுள்ள ஆர்வமிக்க கலைஞர்களுக்குச் சந்தர்ப்பமளிக்க முன்வரலாம். 'ஆன்' படத்தில் புதுமுகம் என்று நாதிராவை அறிமுகப்படுத்தினார்கள். அவர் தோன்றிய கட்டங்களில் கண்ணை மூடிக்கொண்டு பார்த்தால் தான் நன்றாக இருந்தது! தமிழ்ப்பட உலகிலும் புதுமுகங்கள் என்றால் அதே நிலையில் இருக்கும். அதெல்லாம்கூட வேண்டாம். ரொம்ப நாளாகிப்போன 'வயதானவர்'களைக் கதாநாயகிகளாகவும் கதாநாயகர்களாகவும் போட்டுத் தொலைக்காமல் திறமையும், இளமையும் கொண்டவர்களுக்குச் சந்தர்ப்பமளித்தாலே போதுமே! இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் கலைஞர்கள் திரையுலகிலேயே இருந்து வருகிறார்களே. லக்ஷ்மி பிரபா இத்தகைய நடிகைகளில் ஒருவர்.

தமிழ்ப்பட உலகிற்குத் தமிழ்நாடு, மலையாளம், ஆந்திரம் முதலிய பிரதேசத்திலிருந்து ஏராளமான நடிகர்கள் வந்திருக்கிறார்கள். அந்தத் தொண்டிலே ஹைதராபாத்தும் பங்கு கொண்டிருக்கிறது என்பதை அநேகர் அறியமாட்டார்கள். இதனால் ஹைதராபாத் நடிகர்கள் உருது பேசுகிறவர்கள் என்று அர்த்தமல்ல. அங்கிருந்து வந்தோரும தமிழ் நடிகர்கள் தான்.

சுமார் 1926-ம் ஆண்டில் ஹைதராபாத் சமஸ்தானத்தில் நிதி இலாகாவில் காஷியராக இருந்த ஒருவர் கையில் ஏராளமான பணத்தை எண்ணிக்கொண்டிருக்கும்போது வீட்டிலிருந்து குழந்தை பிறந்ததாக வந்த செய்தியைக்கேட்டு அகமகிழ்ந்து எண்ணுவதை அப்படியே நிறுத்திவிட்டு வாயைப் பிளந்து கொண்டு உட்கார்ந்திருந்தார்! அவருக்கிருந்த குஷியில் தன் வசமுள்ள அவ்வளவு ரூபாயையும் வாரி இறைத்துச்செலவு செய்து குழந்தை பிறந்த நாளை—தொட்டிலிடு விழாவை நடத்திவிடலாமா என்றுகூட நினைத்தார். ஆனால் 'அப்படிச் செய்தால்' என்று அவர் எண்ணியபோதே எதிரே கம்பிகள் தெரிந்ததால் (!) அந்த யோசனையைக் கைவிட்டு அனுமதி பெற்று வீட்டுக்கு ஓடோடியும் வந்தார். அவருக்கும் அவர் மனைவி மணியம்மாளுக்கும் வாரங்கலில் [illegible] பிறந்த குழந்தைதான் இன்றைய நடிகை லக்ஷ்மிபிரபா. சுமார் ஆறு வருஷங்கள் கழித்து மணியம்மாளுக்கு ஒரு குழந்தை பிறந்தது. சரோஜா என்ற அந்தக் குழந்தைதான் இன்றைய எம். சரோஜா.

ஹைதராபாத்தில் கணவனைப் பிரிந்து கஷ்டப்பட்ட மணியம்மாள் மேலும் அங்கு வாழ வசதியும் விருப்பமும் இல்லாததால் மதுரையிலிருந்த தன் தாய் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். சரோஜா ஹைதராபாத்திலேயே தகப்பனாரைப் பெற்ற பாட்டியிடம் வளர்ந்து வந்தார்.

ஒருவருக்கு கோடி ரூபாய் சொத்திருக்கும். ஏராளமான பங்களாக்களும், கார்களும், மோட்டார் சைகிள்களும் இருக்கும்; கைகட்டி, வாய் புதைத்து ஏராளமான ஏவலாளிகள் காத்திருப்பார்கள். கண்கவர் வனப்பு வாய்ந்த கட்டழகியை மணந்திருப்பார். எதை வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் செய்யக்

லக்ஷ்மிபிரபா

சரோஜா......

..... கல்யாணியில்

ராணியில் பிரபா

கூடிய திறமையும் வசதிகளும் இருக்கும். ஆனால் அவர் மனதைச சதா ஒரு விஷயம் அரித்துக் கொண்டிருக்கும். இன்பத்தின் எல்லையை அடைந்து ஆனந்த வாழ்க்கை நடத்த வேண்டிய அவர் துன்பத்திலே மூழ்கித் தத்தளித்திருப்பார். 'அப்பா' எனறழைக்க ஒரு புத்திரனோ புத்திரியோ இன்றி அவரும் அவரது மனைவியும் துடிதுடிப்பார்கள். குழந்தையில்லாத அந்த வீடே சூனியமாகக் காட்சியளிக்கும்.

மற்றொருவரது நிலை நேர் மாறாக இருக்கும். புத்திர பாக்கியத்திற்குக் குறைவிருக்காது. ஒரு விருந்து என்றால் அனேகமாக அவர் குடும்பம் இருந்தாலே போதும். அங்கே உணவு நெருக்கடி ஏற்பட்டுவிடும்! இப்படிப் பட்டவருக்குப் பணவசதியிருக்காது. குடும்பத்தை நிர்வகிக்கவும் முடியாமல்,குழந்தைகள் பெறுவதைத்தடுக்கவும் முடியாமல் திண்டாடுவார்கள்.

இரண்டு நிலைகளிலிருந்தும் மாறுபட்டு ஒரு ஸ்திரீ குழந்தைகளை வைத்துக் கொண்டு திண்டாடுவதும் உண்டு. கணவன் உயிருடன் இருக்கும்போது சில வசதிகளை அனுபவிக்க முடியும். ஆனால் அவர் இறந்த பிறகும் அந்த வசதிகளை அனுபவிக்க விரும்புவார். ஆனால் அது காரியாம்சத்தில் இயலாததாயிருக்கும். குழந்தையின் முகம் பார்த்துக் கண்ணீர் சிந்திக் கொண்டிருப்பார்.

கணவனையிழந்து அன்னையின் வீடடைந்த மணியம்மாளும் ஏறக்குறைய இந்த நிலையில்தான் இருந்தார். கணவனை இழந்து விட்ட பின் என்னதான் தாயாராக இருந்தால்கூட அவளிடம் எல்லா வசதிகளையும் எதிர்பார்க்கலாமா? அது நியாயமாகுமா? இவரைப் போல் மற்றவர்களது தேவைகளையும் அதே தாய் பூர்த்தி செய்தாக வேண்டுமல்லவா? இதனால் லக்ஷ்மிபிரபாவின் தாய்க்கு வசதிகள் அடியோடு இல்லை என்பது அர்த்தமல்ல. ஆனால் அதே சமயம் தன் குமாரியின் தேவைகள் யாவற்றையும் பூர்த்தி செய்ய முடியாதிருந்தார் அவர்.

தாய், தந்தையர் பலவிதத்திலும் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பார்கள். ஆனால் குழந்தைக்கு அவைகளைப் பற்றிச் சிறிதும் கவலை இருக்காது. பெற்றோர்களின் மனோ நிலையை அறியவும் அதற்கு சக்தியிருக்காது. எதைப் பார்த்தாலும் அதற்கு அது உடனே வேண்டும். தகப்பனாரை இழந்த குழந்தையாயிருக்கும். அதற்குத் தாயின் கவலைகள் தெரியாது. பக்கத்து வீட்டு பங்கஜாவுக்கு அவள் அப்பா வாங்கிக் கொடுத்த பட்டுப் பாவைடையைப் போல் தனக்கும் ஒன்று வேண்டும் என்று கதறும். தாய் என்னதான் சமாதானப் படுத்தினாலும் கேள்வி மேல் கேள்வி போட்டு உயிரை வாங்கும்.

இதே நிலையில்தான் மணியம்மாளும் லக்ஷ்மிபிரபாவை வைத்துக் கொண்டு திண்டாடினார். பிரபா ஒரு சூடிகையான பெண். அவர் குடும்பத்தினருக்குப் பிடிவாதம் காரணமாகத் தொந்திரவு கொடுத்தாலும் தன் புத்திசாலித்தனத்தால் மகிழ்ச்சி தரவும் செய்தார்.

லக்ஷ்மிபிரபா வீட்டிலிருந்தால் தொந்தரவு அதிகம் என்பதாலோ, சூடிகையான பெண்ணாதலால் நன்கு படித்து முன்னுக்கு வருவார் என்பதாலோ பள்ளிக்கூடத்தில் சேர்த்து

தர்மதேவதாவில் பிரபா

விட்டார். லக்ஷ்மி பிரபா அப்போ தெல்லாம் நாடகம், சினிமா, நடனம் இவைகளைப் பற்றித் துளிக்கூட அக்கறை கொள்ளவில்லை. ரொம்பவும் அக்கறையுடன் பள்ளிப் பாடங்களை படித்து ஆசிரியர்களின் பிரியத்திற்குப் பாத்திரமாயிருந்தார் பிரபா.

மதுரை காக்காத்தோப்பு பெண்கள் பாடசாலையில் ஆருவது வகுப்பு வரை படித்த பின் அவர்கள் குடும்பம் சென்னைக்கு வந்தது. இதற்குக் காரணம் லக்ஷ்மிபிரபாதான். கலையுலகம் பற்றிக் கனவிலும் கருதாதிருந்த அவர் சில படங்களைப் பார்த்த தன் பலனுக நடிக்க வேண்டுமென்று பிடிவாதம் பிடிக்க ஆரம்பித்தார். மணியம்மாளின் பாடு திண்டாட்டமாகி விட்டது. ஏதோ ஒழுங்காகப் படிக்கிருளே என்று நினைத்து வருத்தத்தை யெல்லாம் மறந்தது போக கடைசியில் படத்தில் நடிக்க வேண்டுமென்று பிடிவாதம் பிடிக்கிருளே என்ன செய்வது என்று கையைப் பிசைந்து கொண்டார். அவரது குடும்பத்தாருக்கோ, அவருக்கோ பிரபா படத்தில் நடிப்பதில் சிறிதும் விருப்பமில்லை. ஆ... பிடிவாதம் நாளுக்கு நாள் அதிகமாகவே கவலையால் குன்றிப் போனுர் மணியம்மாள். தானும் ஒரு மகளும் தாய் வீட்டில், தன் மற்ருெரு குமாரி எங்கோ ஹைதராபாத்திலுள்ள தன் மாமியார் வீட்டில். ஆக இப்படி யெல்லாம் தவிக்கும்போது சினிமாவில் நடிக்கவேண்டுமென்று கூறும் மகளுக்கு என்ன பதில் சொல்வது?

இவர்கள் எல்லோரையுமே இந்தக் கவலையிலிருந்து விடுவித்தார் தர்மலிங்க முதலியார். சென்னை ஸ்ரீதர் அண்டு கம்பெனியைச் சேர்ந்த முதலியார் மணியம்மாளின் குடும்ப நண்பர். ஒரு சமயம் அவர்களின வீட்டுக்கு சென்றிருந்தபோது விஷயமறிந்தார். பெண்ணைச் சினிமாவில் நடிக்கச் செய்வதனுல் தவறு எதுவு



மாப்பிள்ளையில் சரோஜா

மில்லை எனறும், தானே முயன்று அவருக்குச் சந்தர்ப்பம் வாங்கித் தருவதாகவும் லக்ஷ்மிபிரபாவுக்குச் சாதகமாகத் தீர்ப்பு கூறிவிட்டார். அவரிடம் மரியாதையும் நம்பிக்கையும் கொண்ட பிரபாவின் வீட்டார் ஓரளவு இதற்குச் சம்மதமளித்து விட்டார்கள். அப்போது பிரபா பூமியிலே நடக்கவில்லை. அவரது குதிப்பைப் பார்த்த முதலியார் அவருக்குப் பரதநாட்டியம் சொல்லித்தரவும் சிபார்சு செய்திருக்கலாம்!

(69-ம் பக்கம் பார்க்க)

காட்சி 1

சென்னை பிரமுகர் சுந்தரலிங்கம் பிள்ளையின் மகன் சிகாமணி ஒரு புத்தக வெளியீட்டு அச்சகத்தை நடத்தி வருகிறான். அன்று ஒரு அச்சடித்த திருமண அழைப்புப் பத்திரிகையை கோதண்டம் என்கிற கம்பாஸிடர் சிகாமணி முன் வைக்கிறான். அதைப் பார்த்த சிகாமணி அவனைக் கோபிக்கிறான்.

சிகா: தண்டம்...! அப்பா கோதண்டம், நல்லா கவனிச்சியா?

தண்: ஓ...

சிகா: ஹூம். கவனிச்ச லக்ஷணமா இது?

தண்: ஏங்க?

சிகா: மாப்பிள்ளை பேரு என்ன இருக்கு பாரு.

தண்: பாலகிருஷ்ணன்.

சிகா: இங்கே என்ன இருக்கு பாரு!

தண்: லாபகிருஷ்ணன்.

சிகா: ஏன், நஷ்ட கிருஷ்ணன்னு போட்றது தானே? போடா, கவனிச்சு...சீக்கிரம் ஆகட்டும்.

கோதண்டம் போகிறான். அதே சமயம் அங்கு வருகிறான் ஆபீஸ் பியூன் பெரியண்ணன். அவனையும் விடவில்லை சிகாமணி.

திரைக்கதை

பாத்திரங்கள் :

டி. ஆர். ராமச்சந்திரன்	பெரியண்ணன்
பி. வி. நரசிம்ம பாரதி	டாக்டர் குமார்
ஆர். பாலசுப்ரமணியம்	சுந்தரலிங்கம் பிள்ளை
வி. கே. ராமசாமி	கண்ணுசாமி
டி. கே. ராமச்சந்திரன்	சிகாமணி
பி. எஸ். வீரப்பா	இன்ஸ்பெக்டர்
பி. கே. சரஸ்வதி	நளினி
எம். லக்ஷ்மி பிரபா	மரகதம்
எம். சரோஜா	விஜயா

கதை வசனம் :

வி. என். சம்பந்தம்

டைரக்ஷன் :

டி. ஆர். ரகுநாத்

கதை, வசனம் :
வி. என். சம்பந்தம்

சிகா: ஏய் பெரியண்ணு! இதென்ன ஆபீஸா, உங்க ஆயா வீடா? ஏண்டா இவ்வளவு லேட்டு?

பெரி: வீட்லே கொஞ்சம் வேலையிருந்தது. அதைச் செய்திட்டு...

சிகா: நீ வீட்லே வேலை செய்றதுக்கா ஆபீஸ்லே சம்பளம் தர்ராங்க?

பெரி: ஆமாங்க. அப்படித்தானே இதுவரைக்கும் குடுத்திட்டு வர்ரீங்க.

சிகா: என்ன?

பெரி: கோவிக்சுக்காதிங்க நானும் எவ்வளவோ சொன்னேன்.



'நீ சும்மா வேலே செய் துட்டு போடா'ன்னு அம்மாதான் சொன்னுங்க.

சிகா: யாரது, அம்மாவா?

பெரி: ஆமாங்க, நம்ப அம்மா தான்.

சிகா: எங்க வீட்லியா? இதெ மொதல் லியே சொல்லப்படாது? சரி...சரி, தொலே.

அப்போது க்ஷயரோக நிவாரண சங்கப் பிரதிநிதி யொருத்தி வருகிருளே அவளிடம் சிகாமணி, கோதண்டம், பெரியண்ணன் மூவரும் பணம் கொடுத்து அவள் கொடுக்கும் அதிர்ஷ்ட லாட்ரி டிக்கட்டை வாங்குகிருர்கள்.

* * *

பெரியண்ணன் வீட்டில் அவன் சகோதரி விஜயா பாடிக் கொண்டிருக்கிருள். அவள் தாய் பார்வதிக்கு கோபம் வருகிறது.

பார்: நல்லாருக்கு! பொழுது விடிஞ்சி பொழுதுபோனு தினசரி இப்படிப் பாட்றதும் ஆட்றதும்தானு? ஏண்டி, நீ ஒரு வயசு வந்த பெண்ணுவா இருக்கே?

விஜ: என்னம்மா இப்படி கேக்கறே? என்னேப் பாத்தா... ஆம்பளே மாதிரியா தெரியுது?

பார்: அட சீ போ!

விஜ: நாளேக்கு ஒரு நாள் தானேம்மா... பள்ளிக்கூடத்துலே பாட்டுப் போட்டி முடிஞ்சிட்டா அப்புறம் ஏன் பாடப்போறேன்.



பார்: ஆமாம்...உன் பாட்டும் லட்சணமும்.. ஏதோ பட்டணத்தார் பாட்டு, தாயுமானவர் பாட்டுன்னு நல்ல பாட்டா பாடுவாளா...? அம்மியாம் கொழவியாம்... ஹூம்...வாரத்திலே ரெண்டு நாளு லீவு விட்டாலும் விடருங்க, உன் அமக்களம் சகிக்க முடியல்லே!

அப்போது வேலை முடிந்து பெரியண்ணனும் கண்ணுசாமியும் வருகிறார்கள்.

கண்: பார்வதி! என்ன சலிச்சிக்கிட்டிருக்கே?

பார்: சலிச்சிக்காமெ சிரிச்சுக் கிட்டிருக்கேன்.

கண்: அடெ... என்னடீ அது? **(விஜயாவிடம்)** ஏம்மா? நீ ஏன் மூஞ்சியை தொங்கவிட்டுக்கிட்டிருக்கே?

விஜ: ஒண்ணுமில்லேப்பா! நான் பாடிக்கிட்டிருந்தேன். அம்மாவுக்குப் புடிக்கலையாம் நிறுத்த சொன்னாங்க. நான் நிறுத்திட்டேன். இன்னும் அவுங்க நிறுத்தலே...

பெரி: ஹூம்... இதுக்கா இவ்வளவு கலாட்டா? விஜயா! இந்தா. அம்மா கொணந்தான் தெரியுமே, நீ ஏன் பாடினே?

கண்: பார்வதி! கொழந்தை கிட்டே எப்பவும் சந்தோஷமா பேசணும்.

பார்: பின்னே பாருங்களேன், பாட்றதுக்கும் ஆட்றதுக்கும் சமய சந்தர்ப்பம் இல்லே?





கண்: இருக்கு. அதைச் சாந்தமா சொல்லேன். ஏன் சள்ளுன்னு விழறே?

விஜ: அப்பா! எனக்கு ரெண்டு ரூபா வேணும்.

கண்: எதுக்கு திடீர்னு ரெண்டு ரூபா?

விஜ: எங்க பள்ளிக்கூடத்திலே...

கண்: தெரியும், தெரியும். சும்மா போ. ஆமாம்...உங்க பள்ளிக்கூடத்திலே படிப்பு சொல்லித் தராங்களா இல்லே பணத்தைச் கேக்கருங்களா?

பார்: இந்தரங்க, கொழந்தை கிட்டே எப்பவும் சந்தோஷமா பேசணும்.

கண்: சந்தோஷமாப் பேசிணுத்தான் ரெண்டு மூணுன்னு அபராதம் போடுதே. இருக்கட்டும். இந்த வருஷம் எப்படியாவது தொலையட்டும். அடுத்த வருஷத்திலேயிருந்து நிறுத்திடறேன்.

பெரி: சே... சே, நிறுத்தறதா? தங்கச்சியை கொறைஞ்சது பத்தாவது வரைக்குமாவது படிக்க வைக்கணும் அப்பா!

கண்: ஆமாம். உன்னைப் படிக்க வச்சு வாரிகிட்டோம் பாரு...

பெரி: ஏன், எனக்கு என்னவாம்? பி. ஏ... எம். ஏ. பாஸ் பண்ணவன் எல்லாம் ஒவ்வொரு படியா ஏறி எறங்கறான். நான் மூணாவது படிச்சிட்டு முப்பத்தஞ்சு ரூபா சம்பாதிக்கிறேனே ... போதாதா? சரி, விஜயா வா சாப்பிடலாம்.

விஜ: ஊஹூம். எனக்கு அஜீர்ணமாயிருக்கு.

பெரி: அஜீர்ணமா? சேச்சே, பணக்காரங்களுக்கு வர வேண்டிய வியாதியில்லே அது?

காட்சி [illegible]

சுந்தர் நிவாஸில் நளினி உடல் நலமில்லை என்று பொய் சொல்லி டாக்டர்குமாரை, வரவழைத்துச் சல்லாபிக்கிறாள். இதை வீட்டு வேலைக்காரி முத்தம்மாள் கவனித்து விடுகிறாள். டாக்டர் வெளியே செல்லும்போது எதிரே சிகாமணியும் கோதண்டமும் வருகிறார்கள். சிகாமணியின் மனைவி காத்திருக்கிறாள்,

(73-ம் பக்கம் பார்க்க)

செய்திப் படங்கள்...

சென்ற மாதம் 4-ம் தேதியன்று ராணி பிலிம்ஸாரின் 'நம்பிக்கை' பட ஆரம்பவிழா ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டூடியோவில் நடைபெற்றது. சென்னை சர்க்கார் மந்திரி எம். ஏ. மாணிக்கவேலு நாயக்கர் காமிராவை முடுக்கிவைத்து, 'நம்பிக்கை'ப் படத் தயாரிப்பாளர்களது கன்னி முயற்சிக்கு ஆசி கூறினர். சென்னை பிலிம் வர்த்தக சபைத்தலைவரான ஏ. ராமய்யா இந்த ஆரம்ப விழா நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். இந்த ஆரம்பவிழாவை யொட்டி தயாரிப்பில் சம்பந்தப்பட்ட ரமணி—கோபால் இருவரும் ஒரு தேநீர் விருந்தை அளித்தனர். பத்திரிகாசிரியர்கள், மற்றும் ஸி. ஆர். ராஜகுமாரி, குமாரி ஓமன, மனோஹர். டி.கே ஷண்முகம் முதலிய நக்ஷத்திரங்களும், மற்றும் பல படவுலகப் பிரமுகர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

'நம்பிக்கை' ஆரம்ப விழாவில்.

"உலகம் பலவிதம்"



என். எஸ். கிருஷ்ணன் தலைமையில் ராஜா சர் முத்தையா செட்டியார் படத்தை ஆரம்பித்து வைத்து ஆசி கூறினர்.

'உலகம் பலவிதம்' என்ற தலைப்பு எப்படி நூதனமானதோ அதேபோல கதையும் நூதனமானது தானும். நேஷனல் புரொடக்ஷன்ஸாரின் மூன்ருவது தயாரிப்பு இந்தப் படம். நியூடோன் ஸ்டுடியோவில், என். எஸ். கிருஷ்ணன் தலைமையில் இதன் ஆரம்பவிழா சென்ற மாதம் 8-ம் தேதியன்று நடைபெற்றது. ராஜா சர். முத்தய்யா



விருந்தினர்கள் கூட்டத்தின ஒரு பகுதி

ஆரம்ப விழா

செட்டியார் அன்றையதினம் படப்பிடிப்பை ஆரம்பித்து வைத்தார். 'கண்ணதாஸன்' விழாவில் கலந்து கொள்ள வந்த விருந்தினர்களை வரவேற்றார். 'உலகம் பலவிதம்' என்ற இப்படத்தின் கதையை ராஜா சந்திரசேகர் எழுதியிருக்கிறார். டி. ஆர். ரகுநாத் இதை டைரக்ட் செய்யப் போகிறார். நேஷனல் புரொடக்ஷன்ஸாரின் இந்தப் படத்தில் திரையுலகின் முன்னணி நக்ஷத்திரங்கள் நடிப்பார்களாம். சிரித்துக் கொட்ட ஒரு சிங்காரியையும், மனம் மகிழ ஒரு மாப்பிள்ளையையும் தமிழ் ரஸிகர்களுக்கு அளித்த நேஷனல் புரொடக்ஷன்ஸார், பல விதத்திலும் பரவச மூட்டும் படமாக இந்த 'உலகம் பலவிதம்' படத்தை வெளியிடுவார்கள் என்று நாம் நம்பலாமல்லவா? நியூடோன் ஸ்டுடியோவிலேதான் இந்தப் படம் சுடப்படும்.



'கண்ணதாஸன்' வரவேற்றார்.



காமிராவை முடுக்கிவைத்தார் செட்டிநாடு ராஜா

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி
ஏழை உழவன்



மாடர்ன் தியேட்டர்ஸ்
வளையாபதி

வெளிவரவிருக்கும் படங்களிலிருந்து காட்சிகள்

மெட்ராஸ் ஆர்ட்
ரோஹிணி

ஆர். ஆர்.
வாழப்பிறந்தவள்

ஜுபிடர் & மேகலா
நாம்

தமிழ் நாடு டாக்கீஸ்
பெண் மனம்



ஜெயந்தி புரொடக்ஷன்ஸ்

பொன் வயல்

காட்சிகள்

P.S.R.

'கல்கி'யின் பொய்மான் கரடு கதையை 'பொன் வயல்' என்ற அழகான பெயரில் படமாக்கி வருகிறார்கள் ஜெயந்தி புரொடக்ஷன்ஸார். 'இந்த நடிகர்களுக்காகவே இந்தப் பாத்திரங்கள் சிருஷ்டிக்கப்பட்டனவோ' என்னும்படி டி. ஆர். ராமச்சந்திரன், சாரங்கபாணி, மதுரம்...

JL 89672
M211.N42 D
N52.11.3



..அஞ்சலி, மைநாவதி
முதலியோர் நடிக்கின்
றனர். ஏ. டி கிருஷ்ண
சாமியின் டைரக்ஷ
னில் பண்படும் பொன்
வயலில் பொங்கொழி
ந்தம் என்று நம்பலாம்.

PSR

பூரண உரிமையாளர்கள் :

மதராஸ் பிக்சர்ஸ் சர்க்யூட் • மதராஸ் 14



பராசக்தி

பிளவுண்ட குடும்ப மொன்றின் சோகத்தையும், இறுதியில் அது ஒன்று சேருவதையும் காட்டுகிறது பராசக்தி திரைக்கதை. மு. கருணாநிதி இப்படத்திற்கு வசன மெழுதியிருக்கிறார். பட விநியோகஸ்தர்களான நேஷனல் பிக்சர்ஸாரின் முதல் சொந்தத் தயாரிப்பு பராசக்தி. இந்தப் படத்தின் ஆரம்பத்தில் குசலகுமாரி ஒரு அழகான நடனத்தை ஆடியிருக்கிறார். பராசக்தி நாடக மேடை கதா நாயகனான கணேசன் படத்திலும கதா நாயகனாக நடிக்கிறார். அவருடன் இதில் சஹஸ்ரநாமம், ஜூனியர் ஸ்ரீரஞ்சனி முதலியோர் நடித்திருக்கின்றனர். தீபாவளி தினம் திரையிடப்பட்ட இந்தப் படம் ஏவி. எம். ஸ்டுடியோவில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. கிருஷ்ணன் – பஞ்சு இருவரும், இப்படத்தை டைரக்ட் செய்திருக்கின்றனர்.

தேவதாஸ்

வினோதா பிக்சர்ஸார் ரேவதி ஸ்டுடியோவில் தங்களது மூன்றாவது தயாரிப்பான தேவதாஸை தொடர்ந்து படம் பிடித்து வருகின்றனர். சாவித்திரி, நாகேஸ்வர ராவ் முதலியோர் இதில் நடித்து வருகின்றனர். தேவதாஸ் சரத்சந்திரரின் எழுத்தோவிய மென்றும், கல்கத்தா நியூ தியேட்டர்ஸ் படமாக்கிய தேவதாஸ் படத்தின தழுவல் என்றும் சொல்லப்படுகிறது. வேதாந்தம் ராகவய்யா இப்படத்தின் டைரக்ஷன் பொறுப்பை ஏற்றிருக்கிறார். தமிழ், தெலுங்கு தயாரிப்பான தேவதாஸின் தமிழ் வசனங்களை உதயகுமார் எழுதி யிருக்கிறார். காலஞ் சென்ற சுப்பராமனின் இசையமைப்புகள் இதில் கனஜோராக அமைந்திருக்கின்றனவாம்.

மாப்பிள்ளை

தலைதீபாவளிக்கு மட்டும் தான் என்பதில்லை. அது எந்தத் தீபாவளியாக இருந்தாலும் சரி, மாப்பிள்ளை என்றால் அவருக்குத் தனி கௌரவம், வரவேற்பு எல்லாம் உண்டு. நேஷனல் புரொடக்ஷன்ஸார் தீபாவளியன்று வெளியிடப் போகும் மாப்பிள்ளையும் ரஸிகர்களது வரவேற்பைப் பெறும் என்று எதிர்பார்க்கலாம். சிங்காரியைப் போலவே இதுவும் ஒரு ஹாஸ்யக் களஞ்சியமாக இருக்குமாம். டி. ஆர். ராமச்சந்திரன், பி. கே. சரஸ்வதி, லக்ஷ்மி பிரபா, டி. கே. ராமச்சந்திரன், நரசிம்ம பாரதி, வி. கே. ராமஸ்வாமி முதலியோர் இப்படத்தில் நடித்திருக்கின்றனர். டி. ஆர். ரகுநாத் டைரக்ஷனில் நியூடோனில் வளர்ந்திருக்கும் இப்படம் நேஷனல் புரொடக்ஷன்ஸாரின் இரண்டாவது தமிழ் தயாரிப்பாகும்.

ஏழை உழவன்

'உழுபவனுக்கே நிலம்' என்ற கொள்கையை உணர்த்துமாம் ஸ்ரீ ராஜராஜேஸ்வரியின் புது வெளியீடான ஏழை உழவன். கண்ணாம்பா கொடுமை வாய்ந்த ஜமீன்தாரிணியாக இதில் வருகிறார். அஞ்சலி தேவியும், ஸ்ரீராமமூர்த்தியும் காதல் ஜோடிகளாக வருகின்றனர். கே. பி. நாகபூஷணம், தமிழ்–தெலுங்கு இரு பாஷைகளிலும தயாராகி யிருக்கும்

இந்த ஏழை உழவனே டைரக்ட் செய்திருக்கிருர். ஜெமினியில் சுடப்பட்டிருக்கும் இந்தப் படம் ரஸிக மனேபாவத்தைக் கவரும் வகையில் உருவாக்கப் பட்டிருக்கிறதாம்.

வளையாபதி

தீபாவளிப் பரிசாக இம்முறை பல படங்கள் வெளி வந்திருக்கின்றன. மார்டர்ன் தியேட்டர்ஸார் தங்களது வளையாபதியையும் தீபாவளி தினத்தன்று வெளியே அனுப்பி யிருக்கின்றனர். டி. ஆர். சுந்தரம், மஸ்தான் இருவரும் கூட்டாகச் சேர்ந்து இப்படத்தை டைரக்ட் செய்துள்ளனர். வளையாபதியில் முத்துகிருஷ்ணன் 'சாவுகார்' ஜானகி இருவரும் பிரதான பாகங்களில் நடித்திருக்கின்றனர். டி. ஏ. ஜெயலக்ஷ்மி நீண்ட நாட்களுக்குப் பின்னர் இதில் மீண்டும் தோன்றுகிருர்,

நம் குழந்தை

மழலை பேசும் குழவி என்ருலே எல்லோருக்கும் விருப்பம் தான். அதுவும் அக்குழந்தை 'நம் குழந்தை'யாகவே இருந்து விட்டால் கேட்க வேண்டியதேயில்லை! இதை உத்தேசித்துத் தானே என்னவோ, ஓம் பிலிம்ஸார் தங்களது முதல் தயாரிப்பை 'நம் குழந்தை' என்றே பெயரிட்டு, ரஸிகர்களிடையே அதற்கான அபிமானத்தைப் பெருக்க முனைந்திருக்கின்றனர். டைரக்டர் கே. எஸ். கோபாலகிருஷ்ணனும், ஸ்ரீபாத சங்கரும் கூட்டாகச் சேர்ந்து ஆரம்பித்திருக்கும் ஓம் பிலிம்ஸின் இம்முதல் தயாரிப்புக்கு செப்டம்பர் மாதம் 28-ம் தேதி விஜயதசமி தினத்தன்று கிண்டி நரசு ஸ்டுடியோவில் பூஜை போடப்பட்டது. டாக்டர் ஜேம்ஸ் எச். கஸின்ஸ் அன்றைய தினம் காமிராவை முடுக்கி விட்டார். ஜெமினியிலிருந்து வெளியேற்றப்பட்ட பல கலை வல்லுநர்கள் இதன் தயாரிப்பில் பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றனர். படத்தை கே. எஸ். கோபாலகிருஷ்ணன் டைரக்ட் செய்வார் என்றும், நாகய்யா, லலிதா, பத்மினி, ராகினி முதலியோர் இதில் நடிப்பார்கள் என்றும் தெரியவருகிறது.

அதிரூப சிந்தாமணி

ஜமீன்தாரை வெளியே அனுப்பி விட்ட சங்கீதா பிக்சர்ஸார் அடுத்தபடியாக ஒரு அதிரூப சிந்தாமணியை ரஸிகர்களுக்கு அறிமுகப்படுத்தப் போகிருர்கள். அவர்களது இரண்டாவது தயாரிப்புக்கு 'அதிரூப சிந்தாமணி' என்றுதான் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் படத்திற்கான ஆரம்ப பூஜை சென்டிரல் ஸ்டுடியோவிலே விஜயதசமி தினத்தன்று நடைபெற்றதாம். சிந்தாமணியிலும் – அதிரூபசிந்தாமணியாயிற்றே! ரஸிகர்களை அவள் கவராமலா இருப்பாள்?

உலகம் பலவிதம்

'உலகம் பலவிதம் தான். இதை யார் எப்படி மறுக்க முடியும்?' என்று நீங்கள் சண்டைக்கு வராதீர்கள். 'உலகம் பலவிதம்' என்பது நேஷனல் புரொடக்ஷன்ஸாரின் மூன்ருவது தயாரிப்புக்கான பெயர். இந்த முற்போக்கான பெயரை தலைப்பாகக் கொண்டிருக்கும்போதே கதையும் அப்படியாகத்தான் இருந்தாக வேண்டும் என்று நாம் தீர்மானிக்க முடிகிறதல்லவா? ராஜா சந்திரசேகர் இந்தப் படக்கதையை எழுதியிருக்கிருர். கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் தலைமையில், ராஜா சர் எம். ஏ. முத்தய்யா செட்டியார் காமிராவை முடுக்கி வைக்க ஆனந்த வைபோகமாக இதன் ஆரம்ப விழா சென்ற மாதம் 8-ம் தேதியன்று நியூடோன் ஸ்டுடியோவில் நடைபெற்றது. 'உலகம் பலவிதம்' பலவிதத்திலும் ரஸிகர்களைத் திருப்தியடையச் செய்யும் வகையில் உருவாகுமாம்.

நம்பிக்கை

ராணி பிலிம்ஸாரின் நம்பிக்கை ஆரம்ப விழா சென்ற மாதம் 4-ம் தேதியன்று ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டுடியோவில் கொண்டாடப்பட்டது. சென்னை சர்க்கார் மந்திரி எம். ஏ. மாணிக்கவேலு நாயக்கர் காமிராவை முடுக்கி வைத்தார். தென்னிந்திய பிலிம் வர்த்தக சபைத் தலைவர் ஏ. ராமய்யா இந்த ஆரம்ப விழாவுக்குத் தலைமை வகித்தார். நம்பிக்கை தமிழ், தெலுங்கு இரு மொழிகளிலும் தயாராகப் போகும் படம்.

இந்தப் படத்தை ஸின்ஹா டைரக்ட் செய்கிருர். மனேகர், குமாரி துளசி, குமாரி பி. கமலா, ரமணி—கோபால் முதலியோர் இதில் நடிக்கின்றனர். நம்பிக்கை ஒரு நல்ல படமாகவே அமையும் என்று நாமும் நம்பிக்கை கொள்ளலாமல்லவா?

பொன்வயல்

'பொன் வயலா? மைசூர் கோலாரில் இருக்கிறது!' என்று நீங்கள் பாய்ந்து வராதீர்கள்! பொன்-விளையும் பூமி என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? செழுமையான நிலத்திற்கு இப்படியாக 'பொன் வயல்' என்றும் ஒரு பெயர் உண்டு. ஜெயந்தி புரொடக்ஷன்ஸார் தயாரித்து வரும் 'பொய்மான் கரடு' விவசாய உயர்வைச் சித்தரிக்கிறது. ஆகவே 'பொன் வயல்' என்று படத்திற்குப் பெயர் தரப்பட்டிருக்கிறது. நாட்டிலே நிலச் சீர்திருத்தத்தை யொட்டி நிகழ்ச்சிகள் நடை பெறும்போது பொன் வயலுக்கும் நல்ல வரவேற்பிருக்கும் என்றே எதிர்பார்க்கலாம். அஞ்சலிதேவி, டி. ஆர். ராமச்சந்திரன் இருவரும் படத்தின் பிரதான பாத்திரங்களை ஏற்று நடித்து வருகின்றனர். அவர்களுடன் மனேகர், தங்கப்பன், புதுமுகம் மைனவதி முதலியோரும் நடித்து வருகிருர்கள். வாஹினியில் சுடப்படும் இந்தப் 'பொன்வயலை' வளம் மிக்க ஒரு பொழுது போக்கு சித்திரமாக டைரக்டர் ஏ. டி. கிருஷ்ணசாமி உருவாக்கி வருகிருர். தைப் பொங்கலன்று படம் அநேகமாக வெளி வரலாம்.

குமாஸ்தா

அருணு பில்ம்ஸார் தங்களது இரண்டாவது தயாரிப்புக்கு குமாஸ்தா என்று பெயர் வைத்திருக்கிருர்கள். ஒரு ஏழை குமாஸ்தாவின் வாழ்க்கைச் சுழலை விவரிக்கிறதாம் இக்கதை. நாகய்யா—பண்டரி பாய் இருவரும் இதன் பிரதான நடிகர்கள். நீண்ட நாட்களுக்குப் பின் பி. ஜெயம்மாவும் அவருடன் தோன்றி நடித்து வருகிருர். மனேகர், கே. ராமசாமி, நரசிம்ம பாரதி, எம். சரோஜா முதலியோரும் குமாஸ்தாவின் நடிகர் பட்டியலில் அங்கம் வகிக்கின்றனர். ஒரு குமாஸ்தா என்ருலே அவன் ஏழையாக இருப்பான்; கூடவே பெரும் குடும்பமும் அவனை எதிர்பார்த்திருக்கும். இதை மறைமுகமாக உணர்த்தவோ என்னவோ குமாஸ்தா படத்தின் நடிகா பட்டியலும் நீண்டு வளர்ந்திருக்கிறது. ஆர். எம். கிருஷ்ணசாமி டைரக்ட் செய்துவரும் இப்படம் தமிழ், தெலுங்கு இரு பாஷைகளிலும் தயாராகி வருகிறது.

கன்னிகாதானம்

வாஹினியிலே ரேகா பிலிம்ஸ என்றொரு புதுப்படக் கம்பெனியார் விஜயதசமி தினத்தன்று ஒரு படத்திற்குப் பூஜை போட்டிருக்கின்றனர். எடிடா வி. நாராயணன இப்படக் கம்பெனியை ஆரம்பித்துள்ளார். 'கன்னிகாதானம்' என்ற இப்படத்தை அவரே டைரக்ட் செய்வாராம். அடுத்தமாத இறுதிக்குள் தொடர்ந்து படப்பிடிப்பு ஆரம்பமாகி விடும் எனத் தெரிய வருகிறது.

பெல் பிக்சர்ஸ்

பட விநியோகஸ்தர்களான பெல் பிக்சர்ஸார் விரைவிலேயே சொந்தத்திலும் படம் தயாரிப்பதில் ஈடுபடுவார்கள் என்று தெரிய வருகிறது. இப்படத்திற்கான கதை தயாராகி விட்டதாம். நெப்டியூன் ஸடூடியோவில் படம் தயாராகும் என்று சொல்லப்படுகிறது.

மாமியார்

பெண் குலத்தாரிடையே 'மாமியார்' என்ற பெயர் ஒரு 'அபாய அறிவிப்பாக' இருக்கிறது! ஆனல் நான் சொல்லவரும் மாமியாரை பெண்களும் பரவசத்துடன் எதிர் கொண்டழைக்க விரும்புவார்கள். ஏனெனில் இந்த மாமியார் படத்தில் வரும் மாமியார் மருமகளின் பிரியத்திற்கு மிக்க பாத்திரமானவள். கஜானனுவின் தயாரிப்பான இந்தப்படம் ரேவதியில் கே. வேம்புவின் டைரக்ஷனில் வளர்ந்து வருகிறது. எஸ. வரலக்ஷ்மி, மனேகர், கிரிஜா, பாலசந்தர் (புதுமுகம்) கஜானனுவின் இந்த முதல் தயாரிப்பில் மின்னுகின்றனர். டிஸம்பர் முதல் வாரத்திலேயே படம் வெளி வந்தாலும் ஆச்சரியமில்லை.

வாரிசு

கோடம்பாக்கம் ரோஹிணி ஸ்டுடியோ அமைந்திருக்கும் இடம் தான் அமைதியானது என்று பார்த்தால், அதில் நடக்கும் வேலைகளும் கூட வெகு அமைதியாகத்தான நடந்து வருகின்றன. இதை எதற்குச் சொல்ல வருகிறேனென்றால் வஞ்சம் என்ற படத்தோடு, இரண்டாம் பேருக்குத் தெரியாமல் மற்றொரு படமும் அங்கு தயாராகி வருகிறது. தமிழிலே இதற்கு இன்னும் சரியான பெயர் தரப்படவில்லை. தமிழ், தெலுங்கு இரு பாஷைகளிலும் இப் படம் தயாராகி வருகிறது. டி. எல். ராமச்சந்திரன் இந்தப் படத்தை டைரக்ட் செய்து வருகிறார்.

பணம்

'பணமில்லாதவன் பிணம். பணம் பத்தும் செய்யும்' போன்ற வாசகங்கள் எவ்வளவுதூரம் உண்மை என்பதை மெட்ராஸ் பிக்சர்ஸ் முதல் தயாரிப்பான 'பணம்' படம் வெளிப் படுத்துமாம். பத்மினி, டி. கே. ராமச்சந்திரன், வி. கே ராமசாமி, கணேசன், டி. ஏ. மதுரம் முதலியோர் பணத்தின் பிரதான நடிகர்கள். என். எஸ். கிருஷ்ணன் படத்தை டைரக்ட் செய்து வருகிறார் என்பதால் பல உயரிய சீர்திருத்தக் கருத்துக்கள் இதில் 'பளிச்சிடும்' என்று நாம் எதிர் பார்க்கலாம். வாஹினியிலே தயாராகி வரும் இந்தப் படம் டிசம்பர் மாத வாக்கில் திரையிடப்படலாம்.

பசியின் கொடுமை

"பசி வந்திடப் பத்தும் பறந்து போம்" என்று ஒரு புலவர் பாடி விட்டுப் போயிருக்கிறார். 'பசியின் கொடுமை' அவ்வளவு கொடூரமானது என்று அவர் விளக்கம் தந்திருக்கிறார். ஆனால் கே. அண். கே. யின் 'பசியின் கொடுமை' படம் நம் கவலைகளைப் பறக்கடித்து விடும், ஒரு நல்ல பொழுது போக்குச் சித்திரமாக இருக்குமாம். பி. எஸ். சரோஜா, திக்குரிசி, எம். எஸ். திரௌபதி, வி. ஆர். ராஜகுமாரி முதலியோர் படத்தின் பிரதான நடிகர்கள். ஆலப்புழை உதயா ஸ்டுடியோவில் தயாரான இப்படம் தமிழ் நாட்டில் விரைவிலேயே திரையிடப்படவிருக்கிறது. மலையாளப் பதிப்பு கேரள நாடெங்கும் தற்போது ஓடிக் கொண்டிருக்கிறது.

புரொடக்ஷன்–19

விஜயதசமி யன்று ஓசைப்படாமல் ஜெமினி தனது புதிய படமான 'புரொடக்ஷன் – 19'க்குப் பூஜை போட்டிருக்கிறது. தமிழ், தெலுங்கு இரு பாஷைத் தயாரிப்பான இப் படத்தை கே. ஜே. மகாதேவன் டைரக்ட் செய்யப் போகிறார். டி. ஆர். ராமச்சந்திரன் இதில் நடிப்பாராம். 'பாதாள பைரவி' புகழ் ரங்கராவ் இப்படத்தில் முக்கிய பாத்திர மொன்றை ஏற்று நடிக்கலாம் என்று கூறப்படுகிறது. முத்துலக்ஷ்மி முதலியோரும் இப்படத்திற்கென ஒப்பந்தம் செய்யப் பட்டிருக்கின்றனர்.

மிஸ்டர் சம்பத்

ரஸிகர்கள் மிஸ் மாலினியில் சந்தித்த 'பிட்நோட்டீஸ் சம்பத்'தை இப்பொழுது ஹிந்திப் படத்திற்காக 'மிஸ்டர்சம்பத்' ஆக மாற்றியிருக்கிறார்கள். ஜெமினியின் ஹிந்தி மிஸ் மாலினிக்கு 'மிஸ்டர் சம்பத்' என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. பத்மினி இதில் மிஸ் மாலினியாக நடிக்கிறார். ஹிந்திப் படவுலகுக்கு புதிய கதாநாயகியாக ஜெமினி இப்படத்தின் மூலம் அவரை அறிமுகப்படுத்தப் போகிறது. மிஸ்டர் சம்பத்தாக பிரபல வட இந்திய நடிகர் மோதிலால் தோன்றுகிறார். குமாரி வனஜா மற்றும் பலரும் இதில் நடித்து வருகின்றனர். செப்டம்பர் மத்தியில் ஆரம்பிக்கப் பட்ட இந்தப் படத்தை ஜெமினி டிஸம்பரில் வட இந்தியா பூராவும் திரையிட திட்டமிட்டு, ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

ராணி

'ராணியா? அதுதான் வெளிவந்து விட்டதே? பின்னர் எதற்கு இப்போது அதுவந்து முளைத்தது?' என்று நீங்கள் கேட்கலாம். நான் சொல்ல வந்தது ஹிந்தி ராணியைப்பற்றி. பானுமதி – அனுப்குமார் இருவரும் இதன் பிரதான பாகங்களில் நடித்திருக்கின்றனர். ஹிந்தி 'மார்க்கெட்'டிற் கென்றே படக்கதையில் சில சிறு திருத்தங்கள் செய்யப்பட்டு,

பிரத்தியேக காட்சிகள் சிலவும் புதிதாக எடுக்கப்பட்டு சேர்க்கப்பட்டிருகின்றனவாம். சென்ற மாதம் முறபகுதியில் ஹிந்தி ராணி வட இந்தியா பூராவும் திரையிடப்பட்டுள்ளது. பிரஸாத் இப்படத்தையும் டைரக்ட் செயதிருக்கிருர்.

உலகத்தில் நாம்

டைரக்டர், நடிகர் மகாலிங்கம் இருக்கிருரே உண்மையிலே அவர் மிக்க சாமர்த்தியசாலி மட்டுமல்ல: அசகாய சூரரும்கூட. இதை எதற்குச் சொல்ல வந்தேனென்ருல் சென்ற மாதம் கெப்டியூனிலே அவரைப்பற்றி நான் கேள்விப்பட்ட செய்தியொன்றினுல் தான். அவரது 'உலகத்தில் நாம்' படத்திற்கென நான்கு பாடல்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டு விட்டதாம். தவிர சென்ற மாத மத்தியிலிருந்து படப்பிடிப்பும் ஆரம்பமாகி விட்டது. இந்தப் படத்திற்கான கதையை எஸ். டி. சுந்தரம் எழுதியிருக்கிருர்.

பிலம் சென்டர்

சென்னை கோடம்பாக்கத்திலே 'பிலம் சென்டர் லிமிடெட்' என்ற பெயரில் ஒரு சினிமா ஸ்டுடியோ ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அருணு பிலம்ஸ் சொந்த ஸ்டுடியோ என்று சொல்லிக் கொண்டிருந்தோமே அதே தான் இது! இந்த ஸ்டுடியோவின் முதல் பூஜை விழா செப்டம்பர் மாதம் 27-ம் தேதியன்று நடைபெற்றது. டைரக்டர் கே. ராம்நாத் இந்த விழாவுக்குத் தலைமை வகித்தார். முதலில் பூஜை, பின்னர் விளையாட்டுக்கள், தேநீர் விருந்து, மாற்றுடை கேளிக்கை, ஓரங்க நாடகம் இப்படியாக பகல் இரண்டு மணி முதல இரவு ஒன்பது மணி வரை ஜமாய்த்து விட்டார்கள். அருணுவின் சொந்தப் படமான குமாஸ்தா தற்போது இங்கு சுடப்பட்டு வருகிறது.

அருணு பிலம்ஸ் ஆண்டு விழா

அருணு பிலம்ஸார் தங்களது இரண்டாவது ஆண்டு விழாவை விஜயதசமி தினத்தன்று வெகு விமரிசையாகக் கொண்டாடினுர்கள். தியாகராய நகரிலுள்ள அவர்களது காரியாலயத்தில் இது கொண்டாடப்பட்டது.

ஆயுதபூஜை விழா

வழக்கம் போலவே இவ்வருஷமும் சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ சிப்பந்திகள் ஆயுத பூஜை விழாவை வெகு கோலாகலமாகக் கொண்டாடினுர்கள். ஸடுடியோவின் மானேஜிங் டைரக்டரான டி. ஆர். சுந்தரம் அவர்கள் இவ்விழாவுக்குத் தலைமை வகித்து போட்டியில் வெற்றிபெற்ற சிப்பந்திகளுக்குப் பரிசுகளை வழங்கினுராம்.

பிலம் விசிறிகள் பாராட்டு

சமீபத்தில் கிரகஸ்தராக மாறிய டைரக்டர், நடிகர் எஸ். பாலசந்தரை பிலம் விசிறிகள் சங்கத்தினர் சென்ற மாதம் 14-ம் தேதியன்று அழைத்து கௌரவித்தனர்.

அக்ஷராப்யாசம்

'பேசும் படம்' 'ரஸிகன்' ஆசிரியரான டி. வி. ராமநாத் அவர்களின் குமாரன் சிரஞ்சிவி வெங்கட்ரமணிக்கு செப்டம்பர் மாதம் 28-ம் தேதியன்று அக்ஷராப்பியாசம் நடைபெற்றது. மயிலாப்பூர் எட்வர்ட் எலியட்ஸ் ரோடில் அமைந்துள்ள ஆசிரியரின் இல்லத்தில் நடைபெற்ற இந்த வைபவத்திற்கு ஏராளமான நண்பர்களும், படவுலகப் பிரமுகர்களும், நடிக நக்ஷத்திரங்களும், பத்திரிகாசிரியர்களும் விஜயம் செய்திருந்தனர். ஏராளமான பரிசுகளும், வாழ்த்துச் செய்திகளும் சிரஞ்சிவி ரமணிக்கு வந்திருந்தன. சந்தானம், சந்துரு விகடக் கச்சேரியும்நடந்தது.

சிரஞ்சிவி வெங்கடரமணி

டி. பி. தியாகராஜன்,
திருகோணமலை

அமரகவியில் என். எஸ். கிருஷ்ணன் பசி, பஞ்சம் முதலியவை இல்லாத நாடொன்றிருப்பதாகக் கூறி பெயரைச் சொல்லாமல் விடுகிறாரே அது எந்த நாடு?

அவரது கற்பனையி லிருப்பது எனக்கு எப்படித் தெரிய முடியும்?

ஏ. பார்த்தசாரதி,
திருவல்லிக்கேணி

'பொன்னியின் செல்வன்' கதையில் வரும் நந்தினி என்ற அபூர்வ பாத்திரத்தைக் கொண்டு வந்து லக்ஷக்கணக்கான மக்கள் அதைப் பார்ப்பது நமது பண்பாட்டைக் கேவலப்படுத்துவதாகும் என்று 'செப்டம்பர் இதழில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கப்பட்டிருக்கிறது. விளக்கம் தரமுடியுமா?

உமது கேள்வியாகிய எனது பதிலையே மீண்டும் மீண்டும் நன்கு படியும். விளக்கமாக உமக்குப் புரிந்து விடும்!

சினிமா பிரியன்,
பாளையங்கோட்டை

திக்குரிசி, நாகேஸ்வர ராவ் இருவரும் தமிழ்ப்பட உலகிலிருந்து 'அவுட் பாஸ்' வாங்குவதாக எனது தம்பி கூறுகிறான். உண்மையா?

உமது தம்பி, உம்மை விடப் புத்திசாலி!

பி. நஞ்சுண்டன்,
உதகமண்டலம்

என் தங்கை, மூன்று பிள்ளைகள், கல்யாணி, கல்யாணம் பண்ணிப் பார், ரோகிணி, ராணி இவற்றில் சிறந்தது எது?

உமது பட்டியல் வரிசைப்படி பதில் சொல்ல வேண்டுமானால் ரோகிணி திரையிடப்பட்ட பின்னர்தான் முடியும்.

ஜான், ஸ்ரீவைகுண்டம்

அஞ்சலிதேவியின் படத்தை ஆண்கள் அடிக்கடிப் பார்த்து பரவசமடைவதேன்?

நீரும் ஒரு ஆணல்லவா? அப்படியாயின் உமக்கே அது தெரிந்திருக்க வேண்டுமே!

கல்யாணி படத்தில் நாகம்மாள் மருமகளிடம் ராமாயண மந்திரம், கல்யாண மந்திரம், தலையாணி மந்திரம் என்று சொல்லுகிறாளே, இதில் எந்த மந்திரத்தில் இன்பம் இருக்கிறது?

உமது இக்கேள்வியின் 'தந்திரம்' எனக்குப் புரியாமலில்லை!

வி. பி. பெருமாள், சிலோன்

மாஸ்டர் சேது எந்தப் படத்தில் நடிக்கிறான்?

தற்போது எந்தப்படத்திலும் நடிப்பதாகத் தெரியவில்லை.

வ. சு. மணி, சிலோன்

ஜெமினிக்கு லட்டர் எழுதுவது இங்கிலீஷிலா தமிழிலா என்பதை தெரிவிக்கவும்?

நீர் எழுதும் தமிழே புரியாதபோது இங்கிலீஸ் எப்படித்தான் இருக்குமோ? ஆகவே நீர் கடிதம் எழுதாமலிருப்பதே நல்லது. தபால் செலவு லாபம்கூட.

என். ஆர். தம்பி லீலா,
சிலோன்

தாங்கள் ஏதாவது படத்தில் நடித்திருக்கிறீர்களா ?

தெரியாத தொழிலில் பொருள் திரட்ட நான் விரும்பவில்லை !

நா. வே. ஜெயபாலன்,
நீர்கொழும்பு

பாகவதர் தயாரித்து வரும் புது வாழ்வில் முக்கிய நடிகர்கள் யார் ?

பாகவதரே. அதில் லலிதா, மாதுரி தேவி, பாலய்யா, குமாரி துளசி ஆகியோருடன் நடித்து வருகிறார்.

சென்னகேசவலு,
செங்கற்பட்டு

தங்கள் பத்திரிகை மனதில் தோன்றும் பிரச்னைகளுக்குத் தக்க விடை தருகிறதா அல்லது ஆபாசமும் கிண்டல்களும் நிரம்பிய கேள்விகளுக்கு விடை தருகிறதா ?

பொதுவாக படவுலகு பற்றிய ஆபாசமற்ற எத்தகைய கேள்விகளும் வரவேற்கப்பட்டு, பதிலளிக்கப்படுகின்றன.

என். ஆர். சாம்பசிவம்,
மன்னார்குடி

நடிகர்களுக்குள் பொருமை ஏற்பட்டால் என்னவாகும் ?

அவரவர்களது நடிப்பு முன்னேறி விடும் !

து. பிச்சை, மோலூர்

மகாலிங்கத்தின் 'அவள்' என்ன கதியானாள் ?

தற்போது 'அவள்' ஒரு அநாதையாக இருககிறாள்.

எஸ். நாகலிங்கம். கொழும்பு

குமாரி கமலாவுக்கு கல்யாணமாகிவிட்டதா ? அவரது முழு விலாசம் என்ன ?

விவாகத்தரகு ஏஜண்டா நீர் இந்தக் கல்யாணக் கவலையெல்லாம் படுவதற்கு? டிமாண்டி தெரு, சாந்தோம், சென்னை-4 என்பது அவரது விலாசம்.

ஆர். ரங்கசாமி,
உதகமண்டலம்

பணக்காரி படம் ரிலீஸ் ஆகி விட்டதா ?

நீர் பணத்தைத் தயாராக வைத்துக் கொண்டு பணக்காரியைப் பார்க்கக் காத்துக் கிடக்கிறீர் என்பது இதிலிருந்து தெரிய வருகிறது. ஆகவே உமக்குத் தெரியாமல் பணக்காரி எப்படிப் புறப்பட்டுவிட முடியும்?

ஜி.பி.எஸ். மணியம், புதுச்சேரி

ரஸிகனில் சிறந்தவன் யார்?

விமர்சகன்.

'அழகிப்' போட்டி நடத்தினீர்களே, நடிகைகள் 'அறிவுப் போட்டி' ஏன் நடத்தவில்லை ?

தனது பலவீனத்தை பகிரங்கமாக ஒப்புக்கொள்ள எந்த நடிகையும் முன்வரமாட்டாள்.

சென்னையில் பார்க்க வேண்டிய இடங்களில் முக்கியமானது எது ?

தியாகராய நகர். அங்கேதான் நம் முன்னணி நடிகைகள் வசிக்கிறார்கள்.

சினிமா நடிகைகள் மனசாட்சிக்குக் கட்டுப்பட்டு நடப்பார்களா ?

பூராவும் அப்படி முடிவு கட்டுவதற்கில்லை. ஏனெனில் வாங்கும் பணத்திற்குத் தக்கபடி அவர்கள் நடிப்பதில்லையே !

இன்றைய தமிழ் சினிமா உலகில் வசனத்தின் நிலைமையும், ஹிந்திப் படவுலகில் சங்கிதத்தின நிலைமையும் எப்படியிருக்கின்றன் ?

முன்னேற்றப் பாதையில் செல்வதாகக் கூறிக்கொண்டு, குட்டையைக் குழப்பிக் கொண்டிருக்கின்றன.

கோ. பா. சு., பாண்டிச்சேரி

காதல கட்டங்களில் நடிக்க ஒருவனுக்கு எது தேவை ?

ரஸிகத்தன்மை !

கேள்வியின் பலன் என்ன ?

விடை !

நடிகை எதனால் உயர்வு பெறுகிறாள் ?

இளமையும், இங்கிதமும் அவளது உயர்வின காரணங்கள்.

ராமநாதன், சென்னை

வேலைக்காரி, மோகினி, கன்னி யின் காதலி ஆகியவற்றை வெளி வந்த வரிசையில் தரமுடியுமா ?

மோகினி, வேலைக்காரி, கன்னி யின் காதலி.

ஆ. நல்லசாமி, நம்பொடை

அழகில் சிறந்த நடிகை யார் என்று ஆண்கள் கேட்கிறார்களே தவிர, அழகில் சிறந்த நடிகர் யார் என்று ஒரு பெண்ணும் எழுதிக் கேட்பதில்லையே, ஏன் ?

பெண்கள் இயற்கையிலே சங் கோஜப் பிராணிகளாகப் படைக்கப் பட்டு விட்டதால் !

டி. பாலதண்டபாணி, கோவை

'நடிகை' படத்தை டைரக்ட் செய்த டி. ஜானகிராம் தற்போது என்ன செய்து வருகிறார் ?

'ஸினி சர்விஸஸ்' என்ற படவுல கின் 'முதல் சிகிச்சை' ஸ்தாபன மொன்றை நடத்தி வருகிறார். அதா வது படப்பிடிப்புக்கு அத்தியாவசிய மான உபகரணங்களைக் கொடுத்து உதவும் ஸ்தாபனம். ஆற்காடு ரோடு, கோடம்பாக்கம் என்பது விலாசம்.

அ. தங்கராஜு பிள்ளை, பட்டவர்த்தி

விஜயகுமாரியில் விஜயனைத் தேடிக் கொண்டு படகில் போகும் ராஜகுமாரி, அதற்குக் கட்டண மாக தன் கழுத்தில் அணிந்திருந்த ஆபரணத்தைக் கொடுத்து அடிமையாகாமல் தப்பியிருக்கலா மல்லவா ?

'ஒரு வேளை தான் சவாரி செய்த கட்டணத் தொகையின் மதிப்புக்கூட பெருத 'கில்ட்' நகை அது என்று படகுக்காரனுக்குத் தெரிந்திருக் குமோ' என்று ராஜகுமாரி சந்தேகப் பட்டு அதைக் கொடுக்காம லிருந் திருக்கலாமல்லவா?

எம். கே. ஆர்., கோத்தகிரி

நக்ஷத்திர மண்டலத்திலிருக்கும் சினிமா நடிகைகள் வானத்தை வில்லாக வளைக்க முடியுமா?

புருவம் அவர்களது வானமாக இருந்து கடைக்கண் பார்வைக்கு பட முதலாளியும் பணத்தோடு எதிரே நின்றால் !

நாடகத்திற்கும், சினிமாவுக்கும் உள்ள வேறுபாடுகள் என்ன ?

இங்கே நடிகர் நடிக்காவிட்டால் கல் விழும். சினிமாவில் அப்படி யில்லை. அதற்குப் பதில் தொழிலை மூட்டை கட்டிக் கொள்ளலாம்.

க. செங்கோடன், மேட்டூர் அணை.

ஜெயந்தி புரொடக்ஷன்ஸ் தயா ரிக்கும் 'செங்கோடன்' படத்தில் நடிக்க எனக்குச் சந்தர்ப்பம் கொடுப்பார்களா ?

படத்தின் பெயரும், உமது பெய ரும் பாலும் தண்ணீரும் போல் பொருந்தி யிருப்பதால் மட்டுமே நீர் இக் கேள்வியைக் கேட்டிருந்தால் நான் அதற்கு நிரம்பவும் அனுதாபம் காட்டுகிறேன். ஏனெனில் 'செங் கோடன்' என்ற பெயர் மாற்றப் பட்டு விட்டதால் தான் !

டி. துரைராஜன், சிலோன்

கே. வி. மகாதேவன் (குமாரி), பெண்டியாலா நாகேஸ்வர ராவ் (அண்ணி), கண்டசாலா (பாதாள பைரவி) இம்மூவரில் யார் சங்கீத டைரக்ஷனில் சிறந்து விளங்கு கிறார்கள் ?

கண்டசாலாவே பிராபல்யம் அடைந்து, பொதுஜனங்களின் அபி மானத்தைக் கவர்ந்திருக்கிறார்.

அ. சு. ரங்கராஜன், திருக்காட்டுப்பள்ளி

ஸ்டண்ட் சோமு, எம். ஜி. ராமச் சந்திரன், ரஞ்சன், வீரப்பா, நாகேஸ்வர ராவ், என். டி. ராம ராவ் இவர்களில் கத்திச்சண்டை களில் சிறந்த மூவரை திறமைக் கேற்ப வரிசைக் கிரமமாகவும், சிறந்த நடிகர் யார் என்பதையும் கூறமுடியுமா ?

ஸ்டண்ட் சோமு பலருக்கு 'குரு' ஸ்தானத்தில் இருந்தவர்; இருந்து வருகிறவர். அவருக்கடுத்தபடி ரஞ் சனையும், ராமச்சந்திரனையும் சொல்ல லாம். நடிப்பில்எம்.ஜி.ஆர். சிறந்தவர்.

டிடெக்டிவ், மதுரை

திரைப்பட நடிக நடிகையர்கள் ஒன்று சேர்ந்து 'பேசும் படக் கேள்வி–பதில் எதிர்ப்பு மகா நாடு' ஒன்றை நடத்தி கண்டனத் தீர்மானத்தை உங்களுக்கு அனுப்பினுல் என்ன செய்வீர்கள்?

'செய்திச் சுருளி'ல் பிரசுரிப்போம்.

ஈ. சேதுராமலிங்கம்,
திருநெல்வேலி

ராணி திரைப்பட வசனம் எழுதியது யார்?

ஆரம்பகால விளம்பரங்களில் கதை வசனம் ஏ. எஸ். ஏ. சாமி என்பதாக வெளியிடப்பட்டு வந்த தென்ருலும், படத்திலோ, பாட்டுப் புத்தகத்திலோ அதைப் பற்றிய தகவல் எதுவுமில்லை. ஆனுல் சமீபத்திய ராணி ஹிந்திப்பட விளம்பரத்தில் கதையை ஏ. எஸ். ஏ. சாமி எழுதியதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அ. தங்கய்யன், திருச்சி

ஆபாச நடிப்புக்கு நடிகைகள் காரணமா, பட முதலாளிகள் தூண்டுதலா, அல்லது டைரக்டரின் சூழ்ச்சியா?

நண்டைச் சுட்டது தப்பா, அல்லது நரியை அதற்குக் காவல் போட்டது குற்றமா என்பதை முதலில் தெரிவியும்!

வீரநாதன், அரக்கோணம்

நக்ஷத்திரங்களும், வயதையும் பற்றி நீர் என்ன கூறுகிறீர்?

நக்ஷத்திரம வளர்ந்தாலும் வயது மட்டும் வளரவே வளராது!

பணத்திற்கும் நடிகைக்கும் உள்ள தொடர்பு எப்படிப்பட்டது?

ஒரு பெண்ணிடம் ஆடவனுக்குள்ள தொடர்புதான்!

வி. ராஜூ, கோட்டயம்

அமெரிக்காவில் ஹாலிவுட் ஸ்டூடியோக்களைப் பார்த்த நம் இந்தியப் பட கோஷ்டி என்ன நினைத்திருக்கும்?

"அடேயப்பா! இங்குள்ள ஸ்டுடியோக்கள்தான் எவ்வளவு பெரிது; எவ்வளவு வசதிகள் நிரம்பப் பெற்றது! இவைகளோடு நம் ஸ்டுடியோக்களை ஒப்பிட்டு, நமது படத்தை மதிப்பிடும்போது நமது சாதனைகள் பெரிதுதான்!" என்று எண்ணியிருக்கும்.

பட முதலாளிகளுக்கும் விநியோகஸ்தர்களுக்கும் உள்ள தாரதம்யம் என்ன?

பட முதலாளிக்கு விநியோகஸ்தர் ஒரு 'சேமிப்பு நிதி'!

ரங்கராமாநுஜம், வந்தவாசி

இந்தியப் படங்களுக்கு விளக்கம் தர முடியுமா?

ஒரு மேல்நாட்டுக் கதையின் மறுபிறப்பு; ஆனுல் கண்டுபிடிக்க முடியாதபடி உருக்குலைவு செய்யப்பட்டிருக்கும் சிதைந்த சிற்பம்.

தென்னிந்திய வசனகர்த்தாக்களைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

அவர்களில் பலர் தங்களை சங்க காலப் புலவர்களென்று நினைத்துக் கொண்டிருக்கிருர்கள்!

ராமநாதன், கடப்பை

ராஜாஜி சினிமா பார்க்கக் கூடாது என்று மீண்டும் சொல்லியிருக்கிருராமே?

அதனுல் என்ன? சமீபத்தில் காந்திஜி பற்றி சில துண்டுப் படங்களை அவரும் பார்த்ததாக செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது!

டைரக்டருக்கும், படமுதலாளிக்கும் ஏன் சில சமயங்களில் தகராறு வந்து விடுகிறது?

38–வது அட்சரேகையாக நடிகை நிற்பதால்!

படவுலகில் தற்போது எந்தக் கலை வெகுவாக முன்னேறியிருக்கிறது?

காப்பியடிக்கும் கலை!

நினைவுறுத்துகிறேம்

நமக்கு வரும் ஏராளமான கேள்விகளுக்கு இந்தப் பகுதியில் பதிலளிப்பதுபோக, பெரும்பாலானவற்றிற்கு நமது மற்ருெரு வெளியீடான 'ரஸிக'னில் பதிலளித்து வருகிறேம். —ஆசிரியர்

"நான் ரஸித்த காட்சி"

("சினிமா பார்க்கும் பொது ஜனங்கள் ஆபாசத்தைத்தான் விரும்புகிறார்கள். மாயா ஜாலப் படங்களும், ஸ்டண்டுகளும்தான் ஓடுகின்றன. அரை நிர்வாண நடனம் இல்லாத படங்கள் தோல்வியடைகின்றன" என்றெல்லாம் கூறும் படமுதலாளிகளை இந்தப் பகுதியைக் கவனமாகப் படிக்கும்படிக் கேட்டுக் கொள்கிறோம். ஜனங்கள் எதை ரஸிக்கிறார்கள்; எதைப் பாராட்டுகிறார்கள் என்று தெரிந்து கொள்ள இப்பகுதி மிகவும் உபயோகமாக அமைந்திருக்கிறது-ஆசிரியர்.)

*சங்கராந்தி

ஒரு தாய்க்கு மூன்று பிள்ளைகள். முதல்வன் மனைவிக்கு அடிமை. இரண்டாமவன் படித்த துறவி. மூன்றாமவன் தாயைப் போஷிக்கும் நேர்மையாளன். சந்தர்ப்ப வசத்தால் மூன்றாவது பிள்ளை சிறைப்படுகிறான். எதிர்பாராத விதமாகத் தன் துறவி மகனைச் சந்தித்த தாய் அவன் கடைசி மகன்—அவன் தம்பியைக் காப்பாற்றும்படிக் கெஞ்சுகிறாள். அவன் மௌனம்சாதிக்கவே வெறுத்துப் பேசுகிறாள். துறவி மனப்போராட்டத்தில் சிக்கித் தத்தளிக்கிறான். இந்தக் கட்டம் சங்கராந்தியில் பிரமாதமாக அமைந்திருக்கிறது.

எஸ். கண்ணன்.
தோசப்பாடு.

*ஆன்

நஞ்சுண்ட மங்களா மரணாவஸ்தையிலிருந்தும் நாசகாலன் ஷம்ஷேர் சிங்கைப் பழிவாங்க நடனமாடுகிறாள். பஞ்சடையும் கண்களோடு, மயக்கமுற்றுக் கீழே விழும் நிலையிலிருந்தாலும் அந்த வீர ராஜபுத்ர மங்கை தன் பழிவாங்கும் திட்டத்தைக் கைவிடாமல் நட(ன)மாடுவது நம்மைக் கண்கலங்கச் செய்கிறது.

கே. கண்ணன்,
சென்னை.

*பிரிய சகி

சாந்தாவின் காதலன் ரகு. இந்திராவும் அவனைக் காதலிக்கிறாள். ஆனால் அவள் காதல் ஒருதலைப்பக்ஷமானது. கனவிலே கண்ட காட்சியால் கலங்கிய அவள் அவனிடம் ஓடி விளக்கம் கேட்கிறாள். 'என் இதய பீடத்தில் இருக்கத் தகுதியுள்ளவள் நீ அல்ல' என்கிறான் ரகு. அவள் உள்ளத்திலே புயல் வீசியது. கெஞ்சினாள்; மன்றாடினாள்; அழுதாள்; அரற்றினாள். பயன்? "என் இதய பீடத்திலே அமர்ந்திருக்கிறாள் ஒருத்தி. அவள் உன்னை விட அழகில் குறைந்தவள். அவள் படித்தவள்கூட அல்ல. மிகுந்த ஏழை" என்கிறான் ரகு.

காதலன் பிரிவால் வருந்தி வறுமைப் பேய்க்குத் தாயைப் பறி கொடுத்து, அலைந்து திரிந்து, காமப் பித்தர்களிடமிருந்து தப்பிப் பிழைத்து, காயம் பட்டு இந்திரா மூலம் ஆஸ்பத்திரியில் சேர்ந்து, நர்ஸாக உத்தியோகம் பெற்று மனப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த சாந்தா, ரகு-இந்திராவின் சம்பாஷணையைக் கேட்டு காதலனிடம் ஓடி வருகிறாள். இந்தக் காட்சி நிலாவின் பிரிய சகி படத்தில் அற்புதம் என்று பாராட்டப்படுவதாகும்.

கே. சுப்ரமணி.
கோயம்பத்தூர்.

---

*இக்குறியிடப்பட்ட மூன்று கடிதங்களுக்கும் தலைக்கு ஐந்து ரூபாய் வீதம் பரிசளிக்கப்பட்டிருக்கிறது.

அபேஸ் குப்பன் முனியன் மனைவியிடம் சத்யாக்ரகம் செய்கிறன். விஷம் சாப்பிட்டு இறக்கும் தறுவாயிலிருப்பதுபோல் பாசாங்கு செய்து அவளிடமிருந்து பணம் பெறுகிறன். முனியன் வந்து அவனை அடிக்கிறன். 'நல்ல பாம்பை அடிச்சு விடறே! வந்து ஒரு கை பாத்துக்கறேன்' என்று சொல்லும் போது முனியன் அடிக்க வரவே ஓடுகிறன். இந்தக் காட்சியில் தியேட்டரிலே குபீர்ச் சிரிப்பு எழுகிறது. பிரிய சகியில் இது ஒரு அருமையான காட்சி.

எம். சோமசுந்தரம்,
கும்பகோணம்.

காதல் போராட்டத்தில் சிக்கிய சாந்தா, தன் காதலன் - எதிர்கால கணவன் ஆகப் போகும் ரகுவிற்கு இந்திராவிடமிருந்து காதல் கடிதம் பெற்றுச் செல்ல நேரிடுகிறது. திக்கின்றித் தவிக்கும் சாந்தாவின் மனேநிலை விவரிக்க முடியாத சோகம் நிறைந்தது.

எஸ். எம். துரை,
சேலம்.

கல்யாணம் பண்ணிப் பார்

மாஜி ஜில்லா போர்டு மெம்பர்; பஞ்சாயத்து போர்டு பிரசிடென்ட் தணிகாசலம் பிள்ளை தன் மாஜி உத்தியோக பெருமையைக் கூறிக் கொண்டு தன் ஊருக்கு வருபவர்கள் தன் வீட்டில் சாப்பிடாமல் செல்வது தனக்கு ஒரு 'இன்ஸல்ட்' என்று கண்ணைச் சிமிட்டி, தோளை ஆட்டிப் பேசுவது நம்மைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்கிறது. அவருக்கேற்ப அவரது வேலைக்கார்ரர்கள் இருவரும் விருந்தினரை உபசரிப்பது அதை விடப் பிரமாதம். கல்யாணம் பண்ணிப் பாரில் இது உயரிய கட்டம்.

"கலைஞானன்,"
சென்னை.

கோவிந்தய்யா வீட்டிற்குப் பெண் கேட்க வந்த ராஜுவையும் சுட்டிப் பயலையும் உள்ளே விட மறுக்கிறன் பீமண்ணு. கோடு கிழித்த அவனை குஸ்தி போடுவது போல் போட்டு ஏமாற்றி விடுகிறன் சிறுவன். கொல்லென்று சிரிக்க வைக்கிறது கல்யாணம் பண்ணிப் பாரில் வரும் இந்தக் காட்சி.

டி. டி. பிச்சை,
மோஹூர்.

ஆன்

ஜெய்திலக் இளவரசி ராஜ்யாவைத் தனியிடத்திற்குத் தூக்கி வந்து, அவளிடமிருந்து தான் கைப்பற்றிய 'ஸ்கார்'பைத் தன் கால் துடைக்கும் துணியாக உபயோகிக்கிறன். அரசகுமாரியின் ஆணவமும் அதிகாரப்பித்தும் அடக்கப் படுகின்றன. இன்றைய நிஜ வாழ்க்கையில் இப்படி மமதை கொண்டு யாவரையும் அலக்ஷியம் செய்யும் பெண்களுக்கு இது ஒரு சவுக்கடி. புரட்சிக் கனல் முன்பு இந்த ஆணவமெல்லாம் பொசுங்கித்தானே ஆகவேண்டும்.

எம். எஸ். நாதன்,
பசுமலை.

கணவன்: (மனைவியிடம்) இருபது வருஷத்துக்கு முன் வீட்டை விட்டு ஓடிப்போன நீயா இப்போ குமாரி ரஞ்சனங்கற சினிமா ஸ்டாரா யிட்டே!

எஸ்வியெஸ்,
சென்னை.

நடிகை: (டைரக்டரிடம்) வருத்தப் படாதிங்க ஸார். நான் கல்யாணம் தானே பண்ணிக்கப்போறேன். உங்களுக்கென்ன நஷ்டம் வந்துடப் போகுது அதனலே.

பி. வி. விமலா. பூனா.

ஜமீன்தார்

ஜமீன்தாரில், போலீஸ் ஜவான்கள் நிரபராதியான ஒரு ஸ்திரீயை விபசாரி என்று தூற்றித் துன்பப்படுத்துகிருர்கள்! இந்தக் கட்டத்திலே, ஒரு ஸ்திரீயிடம் நடந்து கொள்ள வேண்டிய முறை தவறியதற்காக ஜவான்களை விரட்டி கடமையைச் செய்யும் இன்ஸ்பெக்டரையும் நாம் சந்திக்கிரேம். கடமையைப்பற்றி நன்கு எடுத்துக் கூறுகிறது அந்தக் காட்சி.

என். எஸ். சேஷாத்ரி,
சென்னை.

ஜமீன்தார்

நாடோடிகள் ஜமீன்தாரின் இருப்பிடத்திற்கு வந்து பல வித வியாபாரங்கள் செய்கின்றனர். ஜின்டான் என்பவன் பச்சை குத்தும் தொழிலில் ஈடுபடுகிருன். ஒரு பெண்ணின் கையிலே அவள் கணவன் பெயரின் முதல் எழுத்தோடு பச்சை குத்தும்போது குரங்கு என்று சேர்த்து குத்திவிடுகிருன். சிரிப்பினல் தியேட்டர் அதிர்ந்து விடுகிறது இந்தக் கட்டத்திலே.

வி. கோதண்டபாணி,
சென்னை.

சின்னதுரை

கோமங்கலம் மைனர் கோமாளியாக வருகிருர் சின்னதுரை. அவருடன் அவரது செக்ரடரியும் வருகிருர். ஆண்கள் எப்படி யெப்படியெல்லாம் இருக்கவேண்டும் என்று இந்திராமணி விரும்புகிருளோ அதைவிட மோசமான நிலைக்குத் தங்களைத் தயார் படுத்திக்கொண்டு அவளை மட்டந்தட்ட வருகிருர்கள். செக்ரடரி அவளிடம் ஆண்களை பிரசவிக்கும் மார்க்கத்தை யோசித்து வருவதாகக் கூறும் கட்டம் சின்னதுரையிலேயே மிகச் சிறந்தது.

கே. ராஜாமணி,
கும்பகோணம்.

தர்ம தேவதா

ரகுவுக்குச் சேவை செய்வதையே தன் கடமையாகக் கருதுபவள் பிஜ்லி. துரதிருஷ்ட வசமாக ரகுவும் அவனது ஆட்களும் ஒளிந்திருந்த குகையைக் கண்டுபிடித்த சூரசேனன் தன் படையுடன் வந்து அவர்களுடன் போர் புரிகிருன். ரகுவும் சூரசேனனும் வாட்போர் புரியும் போது கோழையொருவன் குத்துவாளை ரகுவின் மீது விட்டெறிகிருன். ஏற்கனவே இதை கவனித்து விட்ட பிஜ்லி ரகுவைக் காப்பாற்ற, அந்த கத்தியைத் தன் மார்பில் ஏற்று மடிகிருள். மனதைக் கலக்கும் உருக்கமானகாட்சி. சிறந்ததொரு கட்டம்.

சு. கருண் ஆனந்தன்
கொழும்பு.

தர்ம தேவதா

மைந்தன் சிங்கத்துக்குப் பலியாக்கப்பட விருப்பதைக் கேட்டு ஓடி வருகிருர் தந்தை. ரகுவும் உடன் வருகிருன். கருணையற்ற கல்நெஞ்சனை அரசன் அவனையும் கொன்றுவிடுகிருன். மகனுக்கு உயிர்ப்பிச்சை கேட்ட தந்தைக்கு மரணம். ரகுவின்

உள்ளம் துடிக்கிறது. அரச குலத்தைப் பழிவாங்கச் சபதம் செய்கிருன். அற்புதமான காட்சி இது.

கே. சுலோசனு,
சென்னை.

வேலைக்காரன்

மகா கருமியான முதலியாரைப் பயமுறுத்தி இன்ஸ்பெக்டருக்கு லஞ்சம் கொடுப்பதாகச் சொல்லி இரண்டாயிரம் ரூபாய் வாங்குகிருன் குமார். அதை எந்தக் கணக்கில் எழுதுவது என்று முதலியாரிடம் கேட்ட கணக்கப் பிள்ளையைச் சிரித்தபடி அழைக்கிருன் குமார். அவன் உண்மையிலேயே சந்தோஷத்துடன் சிரித்தபடி வருகிருன். ஆனல் குமார் கோபத்துடன்—ஆனல் அதை அதிகம் வெளிக்காட்டிக் கொள்ளாமல் சிரிக்கிருன். இந்தக் கட்டத்திலே, குமாரிடம் அகப்பட்டுத் திண்டாடும் கணக்கப் பிள்ளையிடம் அனுதாபம் தோன்றுகிறது நமக்கு.

கே. ஜி. வர்மா,
திருப்புணித்துறை.

தாய் உள்ளம்

தன் கணவனின் வீட்டிலேயே வேலைக்காரியாக வருகிருள், குழந்தைப் பாசத்தால் உந்தப்பட்ட நிர்மலா. மனைவி 'ஓடிப்போன' பின் மறுமணம் செய்து கொள்ளுகிருர் வக்கீல். அவர் வெளியே சென்று திரும்பும்போது தன் மனைவி லீலாவுக்கு நகை வாங்கி வருகிருர். அதை லேசில் அவளிடம் கொடுக்கவில்லை அவர். தம்பதிகளுக்குள் தமாஷ் கோபம் ஏற்படுகிறது. அவர்கள் அப்படிக் கொஞ்சுவதைக் கண்ட நிர்மலாவின் மனம் துடி துடிக்கிறது. மனச்சாட்சி வேறு அவளை வாட்டி எடுக்கிறது, நிர்மலாவின் நிலை கண்டு நாம் கண்ணீர் விடுகிருேம். அருமையான இந்தக் காட்சி தாய் உள்ளம் படத்தின் 'ஹைலைட்'டாகும்.

என். எஸ். சொக்கலிங்கம்,
திருவனந்தபுரம்.

தாய் உள்ளம்

நிர்மலா உயிருடனிருப்பதோடு, தன் வீட்டிலேயே இருக்கிருள் என்பதை யறியும் போது லீலாவால் தாங்க முடியவில்லை. அவளது சகோதரன் உண்மையைக் கண்டுபிடித்ததாக மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொள்ள ஓடி வரும்போது அவனை ஏசிப்பேசிவிடுகிருள் அவள். மனமுடைந்து போகிருன். இந்தக் கட்டத்திலே இருவரும் சேர்ந்து நமது உள்ளம் நெகிழச் செய்து விடுகிருர்கள்.

சிவநேசன்.
காரைக்குடி.

அந்தமான் கைதி

திவான் பகதூரும் ஜம்புவும் லீலாவைச் சந்திக்க ஏராளமான 'வரிசை'

நண்பர்: (பட முதலாளியிடம்) உங்க படத்துலே ஹீரோயின் வயசானவளா இருக்காளே, ஏன்?

முதலாளி: இல்லேன்னு ஹீரோ நிஜமாவே அவளைக் காதலிக்க ஆரம்பிச்சுடுவானே!

மு. முருகப்பா, சிலோன்.

களுடன் போகிறார்கள். அன்னையை வரவேற்ற கண்ணிழந்த தங்கை, லீலாவின் மண விஷயம் பற்றி நடராஜன்தான் தீர்மானிக்க வேண்டுமென்கிறாள். திவான் பகதூரைவிட லீலாவிடம் அதிக ஆசை கொண்ட ஜம்பு தன் கையாலேயே ஒரு பரிசை அவளிடம் கொடுக்கப் போகிறான். அது மறுக்கப் படுகிறது. இருவரும் 'மரியாதை'யுடன் வெளியேற்றப் படுகிறார்கள். அவர்களது 'வரிசை'களும் வரிசையாக வெளியே வந்து விழுகின்றன. ரொம்பவும் தமாஷான காட்சி இது.

கே. சண்பகலக்ஷ்மி,
வேலூர்.

சின்ன மருமகள்

ஜெயிலிலிருந்து விடுதலை பெற்ற பிக்பாக்கெட் ராஜாராம் லிங்கமூர்த்தியிடமிருந்து மூவாயிரம் ரூபாயை அபேஸ் செய்து, மனைவி காமாட்சியையும் வீட்டை விட்டுத் துரத்துகிறான். காமாட்சியின் மகள் துர்க்காவும் மாமியார் வீட்டிலிருந்து விரட்டப்படவே இருவரும் அனாதைகளாகின்றனர். கடைசியில் ராஜாராமின் காரால் மோதப்படுகிறாள் துர்க்கா. பிரிந்தவர் கூடுகின்றனர். சின்ன மருமகள் தெலுங்குப் படத்தில் சிகரஸ்தானம் வகிப்பது இந்தக் காட்சிதான்.

தோசப்பாடு.
புதுவை.

சிங்காரி

சிங்காரியில் நட்டுவனார் முதலியோர் சீட்டாடிக் கொண்டிருக்கும் போது நட்டுவனார் தன் பழைய பெருமையைப் பேசுகிறார். தன் திக்குவாயைத் திருவாயாக மலர்ந்தருளி அவர், 'பா...ரு தம்பி...! அந்தக் கா...கா...லத்திலே...நான் ய...மன் வேஷம்.....போ.....ஒ.....ஒட்டால் ஒரு பய...இரு...ப்பா...ஆ...ஆறு கொட்டாய்லே' என்று சொல்லும்போது கொட்டகையில் பூகம்பமே ஏற்பட்டு விடுகிறது. இப்படித் திக்கி யமன் பேசினால் ஒருவராவது கொட்டகையில் இருப்பார்களா?

டிடெகடிவ்.
மதுரை.

மணமகள்

'நேசத்தை நாடினால் நெற்றியிலே பொட்டிட்டு வா' என்று பாகவதன் விதவை ராதைக்கு வேண்டுகோள் விடுகிறான். என்ன நிகழுமோ என ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். விதவைகள் பொட்டிடக் கூடாதெனும் சமூக சட்டத்தை மாற்றிவிடும் நிலையிலே நெற்றியில் திலகமிட்டு, இனி தான் விதவையில்லை என்று கூறுமற்கூறி அவன் முன் தோன்றுகிறாள் ராதை. மணமகளில் வரும் இவ்வரிய காட்சியில் ஒரு கருத்தை விளக்குகிறது.

பி. எஸ். மணியன்,
மதுரை.

ராதையின் வாழ்வைக் கெடுத்ததோடு நில்லாமல் அவள் மகன் அழகிரியின் உயிரையும் குடித்து விடுகிறான் பாதகன் பாகவதன். புழுவாகத் துடிக்கும் ராதையின் நிலையைக் காணச் சகியாத மெய்கண்டார், இதோ இப்போதே போய் அந்தக் கயவனைப் போலீஸில் ஒப்படைக்கிறேன் என்று கூறிப் புறப்படுகிறார். 'வேண்டாம். குமாரிக்கு இன்றுதான் திருமணம் நடந்தது. அவளது வாழ்க்கை பாழ்படக் கூடாது. குமாரிக்காக அவனை மன்னியுங்கள்' என்று கெஞ்சுகிறான் சந்திரன். அங்கே மறைந்திருந்த குமாரி இதைக் கேட்டுத் தன் தவறை நினைத்துக் கண்ணீர் விடுகிறாள். பிள்ளைப் பிராய முதல் பிரியாது வளர்ந்து, கன்னிப் பருவத்திலே காதலித்து, கடைசியிலே கசடனொருவனுக்கு மாலையிட்ட குமாரியைப்பழிவாங்க வேண்டிய சந்திரன் பொறுமையின் பூஷணமாகி பெருந்தன்மையுடன் நடந்து கொள்ளும் போது குமாரியும், மெய்கண்டாரும் அன்றி நாமும் நெஞ்சுருகுகிறோம்.

எஸ். எஸ். மூர்த்தி,
கடலூர்.

[கூடுமானவரை சமீப படங்களிலிருந்து நீங்கள் ரஸித்த காட்சியை எழுதியனுப்பும்படி மீண்டும் ஞாபகப் படுத்துகிறோம். ஆ-ர்.]

தபால் பெட்டி

பிரதமரின் பிரசாரம்!

நமது ராஜ்ய பிரதமர் ராஜாஜி அவர்கள் படம் பார்க்க வேண்டாம் என்று பிரசாரம் செய்கிறார். அரசாங்கத்தின் வருமானத்தில் சினிமா மூலம் பெறும் வரி அஸ்திவாரத்திற்குச் சமமானது. இதைப்பற்றிக் கூட அதிகம் சொல்ல வேண்டாம். சமீபகாலமாக வெளி வந்த படங்களில் பல தோல்வியடைந்தன. மக்கள் ஆராய்ந்து பார்த்துத் தகுந்த படங்களுக்கே ஆதரவளிக்கிறார்கள். ராஜாஜி தனியாக படம் பார்க்காதீர்கள் என்று பிரசாரம் செய்ய வேண்டிய அவசியமேயில்லை. ராஜாஜி போன்றவர்களின் யோசனைகளையும் அறிவுரைகளையும் யாவரும் வரவேற்கத் தவற மாட்டார்கள். குறைகளை எடுத்துச் சொல்வதுடன், முன்னேற்றத்துக்கான வழிகளையும் எடுத்துச் சொல்லலாம். அல்லது சென்ஸார் போர்டு இன்னும் நன்றாக வேலை செய்வதற்கான வழிகளைக் கவனிக்கலாம். ஆபாசப் படங்களைத் தடுக்கவோ, தடைசெய்யவோ முயற்சிக்கலாம். இதையெல்லாம் விட்டு விட்டு படம் பார்க்காதீர்கள் என்று மட்டும் சொல்லிக் கொண்டிருப்பது வருந்தத்தக்கது.

பா. முத்துக்குட்டி,
சிலோன்.

சோகம் வேண்டாம்

இப்போது வெளிவரும் படங்கள் அனேகமாக சோகரஸம் ததும்பியவையாகவே இருக்கின்றன. தாயார்கள் படும் அவஸ்தைகளும் மாமி, நாத்தி கொடுமைகளும் தான் சித்தரிக்கப் படுகின்றன. புராணப் படங்களில் இதைப்போன்ற காட்சிகள் வரும்போது, புராணக்குப்பை என்று சொல்லிவிட்டார்கள். ஆனால் இன்று...? நாள் முழுதும் கஷ்டப்பட்டுவிட்டு ஆறுதலுக்காகவும் பொழுது போக்குக்காகவும் தியேட்டருக்கு வரும் மக்கள் இந்தச் சோக சாகரத்தில் மூழ்கித் தத்தளிக்காமலிருக்க ஏதாவது பொழுது போக்குப் படங்களைத் தயாரிக்க முதலாளிகள் முன்வர வேண்டும்.

கே. ராஜேஸ்வரி,
நாவலபிட்டிய.

தமிழ்க் கொலை

ஏராளமான பொருட் செலவில் தயாரான படம் ஆன். அதன் தமிழ்ப்பதிப்பில் கவனம் செலுத்தப்பட்டதாகவே தெரியவில்லை. மகா மட்டமாக இருக்கின்றன வசனமும் பாடல்களும். இப்படித் தமிழ் நாட்டைப்பற்றி அக்கறையற்ற முறையில் படம் தயாரித்துத் தமிழ் நாட்டிலிருந்து பொருளீட்ட மட்டும் தயாராகி விட்டார்கள் தயாரிப்பாளர்கள். தமிழ் நன்றாகத் தெரிந்தவர்களைக் கொண்டு பேசவோ, பாடவோ செய்யாமல் இப்படித் தமிழ்க்கொலை செய்யப்படும் படங்களுக்கு வரவேற்பளிக்கக் கூடாது.

துரை தேவராசன்,
திருப்பத்தூர்.

ரஸிகர்கள் கடமை

சில படங்கள் மட்டரகமாக இருக்கின்றன. அவைகளுக்குப் பிரமாத விளம்பரம் கொடுக்கப் படுகிறது. இது வியாபார தந்திரம். இல்லாததை நிறைய இருப்பதாகப் பிரசாரம் செய்யும் முதலாளிகள் ரஸிகர்களின் மனோபாவத்தை எடை

போடத் தவறி விட்டார்கள். ஹாஸ்யம் நிறைந்தது என்பதாலோ, ஆபாசமான காட்சிகளிருக்கின்றன என்ற மட்டரக விருப்பத்திற்காகவோ, சோகக் காட்சிகளுக்காகவோ, பிரபல நடிகர்கள் நடிக்கிருர்கள் என்ருே, ஏராளமான பொருட்செலவில் தயாரானது என்பதனுலோ ஒரு படத்தை ரஸிகர்கள் ஆதரிக்கக்கூடாது. நீதியைப் போதிக்கும் கதைகளையும் கலை நுணுக்கங்களிலும், நடிப்புத் திறமையிலும், வசன, பாடல்கள் அமைப்பிலும்—தரத்தில் உயர்ந்தவையான படங்களை மட்டுமே ரஸிகர்கள் ஆதரிக்க வேண்டும். ரஸிகர்களின் முக்கிய கடமைகள் இவைதான்.

ஏ. பி. குமார்,
பெரியசாமிபுரம்.

●

பட உலக வியாதி

பட உலகிலே ஒருவிதமான வியாதி பரவி விட்டிருக்கிறது. இதை கிளிப்பிள்ளை வியாதி என்றும் சொல்லலாம். கதையின் ஆரம்பமுதல் முடிவுவரை ஒரு குறிப்பிட்ட கதா பாத்திரம் ஒரு சொற்ருெடரையே சம்பந்தா சம்பந்தமில்லாமல் சொல்லிக் கொண்டிருப்பார். 'எவுரு—இவுரு' தொடர் என். எஸ். கிருஷ்ணனிடமிருந்து வெளிவந்தது. அது அந்தக் காலம். அதற்குத் தகுந்தபடி தரமும் அமைந்து வரவேற்பைப் பெற்றது.

தான் 'அந்தக்காலத்திலே காலேஜிலே படித்தபோது' நடந்தவைகளை வாழ்க்கையில் சாரங்கபாணி கூறுகிருர். எதற்கெடுத்தாலும் 'தப்பு தப்பு' என்று பாதாள பைரவியில் ரேலங்கி சொல்லுகிருர். ராஜாம்பாளில் வரும் மாஜிஸ்டிரேட், 'அதாகப்பட்டது' — சிவதாணு அடிக்கடி இதை உபயோகிக்கிருர். வேலைக்காரனில் எதற்கும் 'தீயை வைக்க'ச் சொல்லுகிருர் வி. கே. ராமசாமி. இதைப்போல அனேக படங்களில் வியாதி பரவியிருக்கிறது.

வெ. ர. நாகராஜன்,
வில்லிவாக்கம்.

●

தமிழா ஆங்கிலமா?

பிரியசகி என்ற தமிழ்ப் படத்தில் முதலில் காட்டப்படும் தலைப்பு எழுத்துக்கள் முழுவதும் ஆங்கிலத்திலேயே தரப்பட்டிருக்கின்றன. ஆங்கில எழுத்துக்கள் மூலம், தமிழ் மொழி தெரிந்தவர்கள் எதைத் தெரிந்து கொள்ள முடியும்? தயாரிப்பாளர் முதல் டைரக்டர் வரை ஒன்றும் புரிந்து கொள்ள முடியாமல் பலர் திணறுகின்றனர். தமிழ்ப் படத்திலே ஆங்கிலத் தலைப்புகள் எதற்காக? என். எஸ். கிருஷ்ணன் மணமகளில் சம்பந்தப்பட்டவர்களை அறிமுகப்படுத்தியது போல் செய்தால் இந்த வம்பே கிடையாது.

ஆர். எம். தங்கராஜ்,
திருச்சிராப்பள்ளி

●

கதைகள் இல்லையா?

தென்னிந்திய தயாரிப்பாளர்களில் சிறப்பு பெற்ற ஜெமினி பிக்சர்ஸார் பலவித வசதிகளிருந்தும் திரும்பத் திரும்ப பழைய புராண, கிராமியப் படங்களையும், அன்னிய மொழிக் கதைகளைத் தமிழில் தயாரித்தும் வருகிருர்கள். கதை இலாகா என்று ஒரு பெரிய இலாகாவை வைத்துக் கொண்டு அவர்கள் மூலம் எந்தப் படமும் தயாரிக்காமல் இப்படிச் செய்வது வருந்தத் தக்கது. எட்டு திக்கும் சென்று கலைச் செல்வங்கள் கொண்டுவர வேண்டியதுதான். பல மொழிகளிலும் சிறந்த கதைகளைப் படமாக்க வேண்டியதுதான். அதற்காக இன்றைய தமிழர்கள் அறிவில்லாதவர்கள் என்று மறைமுகமாகக் கூறுவதுபோல் வெளிக்கதையையே படமாக்குவதா? கதை இலாகா பிரயோஜன மற்றதாயின் அதை வைத்திருக்க வேண்டிய அவசியமேயில்லையே! தமிழ் நாட்டில் கதாசிரியர்களுக்குப் பஞ்சமா? தமிழ் சமூகக் கதைகளைப் படமாக்குவதன் மூலம் தமிழ்நாட்டுக்கு உயர்வுதர ஜெமினி போன்ற ஸ்தாபனங்கள்தானே முன்வர வேண்டும்?

முத்துவெங்கடாசலம்,
புதுச்சேரி.

பிரபா......

(29-ம் பக்கத் தொடர்ச்சி)

தர்மலிங்க முதலியார் விரும்பிய படி லக்ஷ்மிபிரபாவை சினிமாவில் சேர்ப்பதற்காக மணியம்மாள் சென்னைக்கு வந்து சேர்ந்தார். குமார குலோத்துங்கனில் தியாகவல்லியாக பிரபா நடித்த போதிலும் தியாகராய நகர் வித்யோதயாவில் அவர் தனது கல்வியைத் தொடர்ந்துதான் வந்தார். அதே சமயம் ஹைதராபாத்திலிருந்து அவர் சகோதரி எம். சரோஜாவும் வந்து சேர்ந்தார். இருவரும் தன மாணிக்கத்திடம் நடன சிக்ஷையும் பெற்று வந்தனர். கீதகாந்தியில் அப்போதுதான் அவர்கள் நடிக்கச் சந்தர்ப்பம் கிடைத்து இருவரும் நடித்தனர்.

வசந்தசேனா, சந்திரகாந்தா முதலிய படங்களில் லக்ஷ்மிபிரபா தோன்றினாலும் அவர் நான்குபேரறியும்படி நடித்த முதல் படம் குமார குலோத்துங்கன்தான். டி. ஆர். ராஜகுமாரி அதிலே கதாநாயகியாக நடித்தார். குமார குலோத்துங்கன் படம் அப்போது வெளியிடப்படாத போதிலும் பிரபாவுக்கு அதன் மூலம் ஒரு அதிருஷ்டம் ஏற்பட்டது. தொட்டதையெல்லாம் அந்தக் காலத்திலே பொன்னாக்கி வந்த டைரக்டர் கே. சுப்ரமணியத்தின் கண்களில் லக்ஷ்மி பிரபாவின் உருவம் பிரதிபலித்து நிழலாடியது! அதிருஷ்ட தேவதை சுப்ரமணியம் உருவில் தோன்றினாள் என்றே குறிப்பிட வேண்டும். மதராஸ் யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் கார்ப்பொரேஷனுக்காக கே. சுப்ரமணியம் தயாரித்து டைரக்ட் செய்த 'கீத காந்தி'யில் லக்ஷ்மிபிரபாவுக்கு மந்திரியின் மனைவியாக நடிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவரது சகோதரி சரோஜா அதிலே கலெக்டர் மனைவியாக வந்து திறம்பட நடித்தார்.

சென்னைக்கு எந்தக் காரணத்தைக் கொண்டு வந்தாரோ அந்தக் காரியம் பூரணமாகக் கைகூடாமல் ஒரிரு படங்களுடன் நின்று விட்டது. ஆனால் பிரபா இதனாலெல்லாம் மனமுடைந்து விடவில்லை, சகோதரி சரோஜாவுடன் நடனம் கற்று வருவதிலும் கல்வி கற்பதிலும் ஈடுபட்டார்.

ஏழை
உழவனில்

வாஹினி கேளிகையில் பிரபா சகோதரிகள்.

இடையிலே பல நாட்கள் சென்றன. முன்வைத்த காலைப் பின்வைப்பதில்லை என்ற உறுதியோடு இருந்தார் பிரபா. ஒரு படமுதலாளி வருவார். ''உங்களுக்கு முகவெட்டும் உடற்கட்டும் இருக்கின்றன. உங்களை எங்கள் படத்தில் சேர்த்துக் கொள்வதில் ஆக்ஷேபணையில்லை. ஆனால் உங்களுக்கு நடனமாட வருமா? படத்தில் உங்களுக்கு கொடுக்கப்படவிருக்கும் பாத்திரம் நடனமாட வேண்டியதாயிற்றே'' என்பார்.

மற்றொருவரிடம் போய்க் கேட்டால் அவர் பதில் வேடிக்கையாக இருக்கும். ''நான் தற்சமயம் தயாரிக்கும் படம் ராமாயணம். அதிலே முக்கிய வேஷதாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டார்கள். ராமனிடம் அழகு மங்கையாக வரும் கட்டங்களில் நடிக்க மிஸ் இந்திராவை (சுமார் நாற்பது வயதிருக்கும் அந்த மிஸ் இந்திராவுக்கு!) ஏற்பாடு செய்து விட்டோம். கோர ராக்ஷஸியாக நடிக்க அவர் மறுக்கிறார். அந்தக் கட்டங்களிலே நீங்கள் நடித்து விடுங்களேன். நீங்கள் கேட்கும் தொகை கொடுக்கிறோம். உங்களை யாருக்கும் தெரியாதபடி தான் ராக்ஷஸி 'மேக்-அப்' போடப் போகிறோமே! ஜனங்களுக்கும் தெரியாது. தொகையும் கிடைக்கும். என்ன சொல்லுகிறீர்கள்?'' என்பார். ஏதோ தொகை குறைவாகக் கிடைத்தாலும் நல்ல பாத்திரங்களில் நடிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தால் நாலைக்கு நாலு பேருக்கு அறிமுகமானால் பணம் தானாக வருகிறது என்ற மனோபாவத்துடன் செல்லுகிறவர்களுக்கு இந்தப் பதில் வயிறெரியச் செய்யும். இப்படியெல்லாம் அவதிப்பட பிரபா விரும்பவில்லை.

எப்படியும் சினிமாவில் சந்தர்ப்பம் கிடைக்கத்தான் செய்யும். அதுவரையில் பொறுமையாக இருப்போம் என்ற திட நம்பிக்கையுடனிருந்தார் பிரபா. அவர் எப்போதாவது கொஞ்சம் அலுத்துக் கொண்டாலும் ஆறுதல் கூறி உறுதியை வளர்த்து வந்தார் செல்லத் தங்கை சரோஜா.

சகோதரிகள் ஆவலுடன் எதிர்நோக்கியிருந்த அந்தச் சந்தர்ப்பமும் வரத்தான் செய்தது. தங்கள் சந்திரகாந்தாவில் தோன்றிய லக்ஷ்மி பிரபாவை ஜூபிடர் பிக்சர்ஸார் மறக்கவில்லை. அவர்களது பிரம்மாண்டமான தயாரிப்பான கிருஷ்ண விஜயத்தில் நிறைய சந்தர்ப்பங்கள் கொண்ட யசோதையின் பாகத்தில் பிரபாவை நடிக்கச் செய்தார்கள்.

லக்ஷ்மி பிரபாவுக்கு இயற்கையிலே நல்ல முகவெட்டு உண்டு. சிரத்தையுடன் மேக்-அப்பும் செய்யப்பட்டிருந்ததால் பார்ப்பதற்குக் கவர்ச்சிகரமாகத் தோற்றமளித்தார். அத்தோடுமட்டும் நின்றுவிடாமல் மிகவும் நன்றாக நடிக்கவும் செய்தார் பிரபா. யசோதை கண்ணனை உயிருக்குயிராக வளர்க்கிறாள். தவறுதலகளுக்குத் தண்டனையும் கொடுக்கிறாள். கோபிகைகள் கண்ணன்

மேல் புகார் சொல்லும்போது அவளுக்குக் கோபம் பொங்கி வருகிறது. ஆனால் அதே கண்ணன் தன்னை விட்டுப் பிரிந்து கம்சனிடம் செல்லும்போது அவள் 'கண்ணா கண்ணா' என்று கதறித் துடிக்கிறாள். இந்தக் கட்டங்களில் பிரபாவின் நடிப்பு சிறப்பாக இருக்கிறது. சுந்தர் ராவ் நட்கர்ணி டைரக்ட் செய்த இந்தப் படத்தில் ஆர். பாலசுப்ரமணியம், நரசிம்மபாரதி, டி. பிரேமாவதி, மாஸ்டர் ராகவன் முதலியோர் நடித்தனர். அருமையான காமிரா வேலைகள் கொண்ட கிருஷ்ண விஜயம் ஒரு வெற்றிப் படமாக அமையாவிட்டாலும் நடிகர்கள் யாவரும் திறம்படவே நடித்தனர்.

கிருஷ்ண விஜயத்துக்கு அடுத்தபடியாக ஜெமினியின் அபூர்வ சகோதரர்களில் நடித்தார் பிரபா. வில்லனாக நடித்த நாகேந்திர ராவின் காதலியாக அவர் கிண்டலாகப் பேசி முதல்தரமாக நடித்தார். அதன் காரணமாகவே அதைத் தொடர்ந்து அவர் நடித்த படங்கள் அனேகத்தில் அவர் வில்லனின் நாயகியாக நடிக்கச் சந்தர்ப்பம் கிடைத்து வந்திருக்கிறது. நாகேந்திர ராவ், எம். கே. ராதா, ஜி. பட்டு அய்யர், பி. பானுமதி முதலியோர் நடித்த இப்படம ஆசார்யா டைரக்ஷனில் தயாராகி மகத்தான வெற்றி கண்டது.

வில்லனின் கைப் பொம்மையாக வந்து சக்கைப் போடு போடுகிறார் பிரபா. திகம்பரசாமியாரில் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர் சுந்தரம் பிள்ளை. அவரது சகோதரியும் விதவையுமான அலங்காரத்தாச்சி கும்பகோணம் வக்கீல் சட்டநாதம் பிள்ளையின் வஞ்சகத்தால் குடும்பத்தை விட்டு வெளியேறி காமுகியாய் விளங்குகிறாள். சட்டநாதன் மூலம் நீதிபதியையே மயக்கி தன் பக்கம் தீர்ப்புக் கூறச் செய்கிறாள். இந்தப் படத்திலே அலங்காரத்தாச்சியாக நடிக்கும் லக்ஷ்மி பிரபாவின் தளுக்கு மினுக்குகளில் நீதிபதியோடு நாமும் மனம் பேதலித்து விடுகிறோம்! அந்தப் படத்தில் எதை மறந்தாலும் 'போடி போயேண்டி ..ஐயா வரும்



ஓய். எம். ஸி. ஏ. கார்னிவாலில் சினிமா விசிறிகள் சங்கத்தின் ஸ்டாலை பிரபா திறந்து வைத்தபோது எடுத்த படம்

நேரமாச்சு' பாடலையும் அந்தப் பாட்டுக்கேற்ற பிரபாவின் நடிப்பையும் யாரும் மறக்க முடியாது. திகம்பர சாமியாரில் டி. பாலசுப்ரமணியம், நம்பியார், நரசிம்ம பாரதி, டி. கே. ராமச்சந்திரன், திரௌபதி முதலியோர் நடித்தனர். மாடர்ன் தியேட்டர்ஸாரின் இந்த வெற்றிப் படத்தை டி. ஆர். சுந்தரம் டைரக்ட் செய்தார்.

திகம்பரசாமியாருக்கு அடுத்தபடியாக மாடர்ன் தியேட்டர்ஸார் ஏராளமான பொருட் செலவில் தயாரித்த படம் 'சர்வாதிகாரி'. நாகய்யா, நம்பியார், எம். ஜி. ராமச்சந்திரன், அஞ்சலிதேவி முதலிய நக்ஷத்திர நடிகர்கள் பலர் நடித்த அந்தப் படத்தில் பிரபாவின் சகோதரி எம். சரோஜாவுக்கு ஒரு முக்கிய பாத்திர மளித்திருந்தார்கள். ரஸிகர்களுக்குத் தகுந்த முறையில் சரோஜாவை அறிமுகப்படுத்திய படம் சர்வாதிகாரி தான்.

கற்பகம் பிரதாபனின் முறைப் பெண். தன் அத்தான் தனக்குத் தான் என்று எண்ணியிருந்த அவள் அதில் மீனு குறிக்கிடுவது கண்டு பொருமுகிறாள். கடைசியில் உண்மையறிந்ததும் அவர்களுக்காகத் தன் உயிரையே பலியிட்டு விடுகிறாள். சர்வாதிகாரி படத்திலே கற்பகமாக, முதல் தடவையாக முழு நேரமும் வரும் எம். சரோஜா நன்கு நடித்து ரஸிகர்களின அன்பிற்குப் பாத்திரமாகி யிருக்கிறார். அவரது நடனங்கள் மிகவும் நன்றாக இருந்தன.

மாடர்ன் தியேட்டர்ஸார் தேவகி படத்தை 'ஆட ஜென்மமு' என்று தெலுங்கிலும் தயாரித்து வெளியிட்டனர். அந்தப் படத்திலே பிரபாவுக்கும் இடம் கிடைத்தது. அவர் தன பாகத்தை கச்சிதமாகவே நடித்திருக்கிறார். சமீபத்தில் வெளியான தர்மதேவதா, ராணி இரண்டிலும் பிரபா வில்லன்களின் மனைவியாக நடித்திருக்கிறார். தர்ம தேவதாவை விட ராணியில் அவர் பாகம் நன்கு சோபித்திருக்கிறது. சரோஜாவும் ராணியில் தோன்றி யிருக்கிறார்.

மாடர்ன் தியேட்டர்ஸார் கல்யாணியில் சரோஜாவுக்கு ஒரு முக்கிய பாத்திரத்தைக் கொடுத்திருந்தார்கள். தாயின் கொடுமைகளால் துன்பப் படும் அண்ணா, அண்ணி இருவருக்காகவும் பாடுபடும் ஒரு உத்தம சகோதரியாக அனுயாசமாக நடித்திருக்கிறார் சரோஜா.

பிரபா நடித்துக் கடைசியாக வெளி வந்த படங்கள் தீபாவளி வெளியீடுகளான மாப்பிள்ளை, ஏழை உழவன் இரண்டுமாகும். ஏழை உழவனில் தாசி கல்யாணியாக வந்து வேதாந்தத்துக்கு நாமம் சாத்திவிட்டுச் சினிமாவில் சேர 'ஓடி'ப்போய் விடுகிறாள். இருக்கும்போதும் அவனை நன்றாகச் சுரண்டி, கிண்டலும் செய்கிறாள். படத்திலே லக்ஷ்மிபிரபாவுக்கு நல்ல பெயர்.

மாப்பிள்ளையில் பிரபா, சரோஜா இருவருமே நன்கு நடித்திருக்கின்றனர். விஜயா ஒரு உத்தம குணமுடைய பெண். அண்ணியை கொடுமைப் படுத்தும் அன்னையிடமும், குடும்பத்தையே உருக்குலைக்க முயலும் சிகாமணியிடமும் அவள் வாதாடும் கட்டங்கள் நம்மைப் பிரமிக்கச் செய்கின்றன. சரோஜா தனது திறமையை இந்தக் கட்டங்களில் நிறைய வெளிப்படுத்தி யிருக்கிறார். மரகதம் காணமற் போன தன் குழந்தையை நினைத்துப் பரிதவிக்கிறாள். அந்தக் கவலையோடு வீட்டைவிட்டு வெளியேறி பைத்தியம் எனத் தூற்றப்பட்டு டாக்டரின் ஆதரவில் வாழ்ந்து வருகிறாள். கடைசியில் குற்றவாளியாக நிற்கும் மகளையறிந்த உணர்ச்சியால் வாரி யணைக்கிறாள். இந்தக் கட்டங்களில் பாத்திரமாகவே மாறி நம்மை உணர்ச்சி வசப்படுத்தி விடுகிறார் லக்ஷ்மிபிரபா.

தற்போது சொலைடி பிக்சர்ஸின் பெயரிடப்படாத படம், மைசூர் நவஜோதி ஸ்டூடியோவில் தயாராகும் 'முயற்சி', பரிமளாவின் 'அபராதி' முதலிய படங்களில் பிரபா நடித்து வருகிறார். ஏவி. எம். படமொன்றிலும் அவர் நடிக்கக்கூடும். சரோஜா தற்போது அருணா பிலிம்ஸாரின் 'குமாஸ்தா', பரிமளாவின் அபராதி முதலியவற்றில் நடிக்கிறார். இந்தப் படங்கள் வெளி வந்ததும் சகோதரிகளுக்குச்சரியான சீஸன் ஆரம்பமாகி விடும் என்று சொல்லலாம்.

—எஸ். வி. ஸம்பத்குமார்.

மாப்பிள்ளை........

(35-ம் பக்கத் தொடர்ச்சி)

சிகாமணி வந்ததும் அவனிடம் குமார்-நளினி காதலைப் பற்றித் திரித்துக் கூறுகிருள் உஷா. அவன் சகோதரியைக் கருவுகிருன்.

*   *   *

குழந்தையைக் காணுமற் போக்கியதிலிருந்து பயித்தியம் பிடித்தவள் போலிருந்த மரகதம் அதன் பிறந்த நாளன்று அதன் படத்திற்குப் புஷ்பமாலை போடும்போது, அவள் கணவர் இன்ஸ்பெக்டர் சங்கரம் பிள்ளை வருகிருர்.

இன்: பிடிக்காத காரியத்தைச் செய்யக்கூடாதின்னு உனக்கு எத்தனை தடவை சொல்லியிருக்கேன். ஞாபகமில்லே?

மர: ஞாபகமிருக்கு. ஆனு நான் ஒண்ணும் அனுவசியமா செய்யலியே? இன்னிக்கு கொழந்தையோட பொறந்த நாளாச்சேன்னு பூப் போட்டு கும்பிட்டேன். இதுகூடவா உங்களுக்குப் பிடிக்கலே?

இன்: ஓஹோ...! இப்படியெல்லாம் மாலை போட்டு கும்புட்றதாலே?

மர: மனசுக்குக் கொஞ்சம் ஆறுதலா இருக்கு.

இன்: உனக்கு ஆறுதல் எனக்கு அவஸ்தையா இருக்கே.

மர: ஆ...அவஸ்தையா?

இன்: வேறென்ன? நான் வேலைக்குப் போயிட்டு வீட்டுக்கு வரும்போதெல்லாம் நீ இப்படி அழுத கண்ணும் சிந்திய மூக்குமாயிருந்தா எனக்கு நிம்மதி இருக்குமா? இல்லே. என் கடமையைத்தான் கவனிக்க முடியுமா? நல்லா யோசிச்சுப் பார்.

மர: நான் யோசிக்கிறேன். ஆனு என்னோட ஒரு குழந்தையைப் பறிகொடுத்துட்டேனே அதை நெனச்சா என் பெத்தவயிறு பத்தி எரியுதே...... அதையும் நீங்க நல்லா யோசிச்சிப் பாருங்க.

இன்: ஓஹோ. அதனுலே எப்பவும் இப்படி ஒப்பாரி வச்சிக்கிட்டுத்தான் இருக்கப் போறியா?

மர: ஏன். அதனுலே உங்களுக்கு என்ன நஷ்டம்?

வாய்ப்பேச்சு முற்றி இன்ஸ்பெக்டர் மரகதத்தை அடித்து விடுகிருர். அவள் வீட்டைவிட்டு வெளியேறி பிறந்து வீடு சென்று விடுகிருள்.

காட்சி 3

சிகாமணியின் மனைவி உஷா அவனை நளினி எதிரில் திட்டுகிருள்.

உஷா: கோபம் மட்டும் வந்து புண்ணியம்? வாங்கற சாமானை வகையா வாங்கத் தெரியல்லே...

நளி: என்னண்ணி, யார்கிட்டே பேசறே?

உஷா: இங்கே வந்து பாரேன். இதையும் பவுடர்னு நெனச்சு பணம் கொடுத்து வாங்கி வந்திருக்காரே உங்கண்ணே. அவுரு புத்திசாலித்தனத்தைச் சொல்றேன்.

சிகாமணி தண்டத்துடன் உள்ளே நுழைகிருன்.

சிகா: சொல்லுவே சொல்லுவே. உன்னெ ஆதியிலேயே வேண்டாம்னு வெரட்டியிருக்கணும். போனுப்போவுதுன்னு சேத்து வச்சதிலே போக்கிரித்தனம் ஜாஸ்தியாப் போச்சு இல்லே.

உஷா: இப்பத்தான் என்ன? போகச் சொன்னு போயிட்றேன். அதுக்காக அனுவசியமாப் பேச வேண்டாம்.

சிகா: ஆ...என்ன ராணி சொல்றே?

உஷா: நீங்க சொன்னதுக்குப் பதில் சொல்றேன்.

சிகா: அட மண்டு. உன்னையா சொல்றேன்? நம்ம தெண்ட சோத்துத் தண்டம் இருக்கானே அவனைச் சொல்றேன்...

நளி: ஏன், என்ன செய்தான்?

சிகா : மூணாவது வீட்டிலே இருக்கிற கடைக்குப் போயி வர்ரதுக்கு மூணாமணி நேரமாவுத. ஏண்டாண்ணா சைக்கிள் வல்லியாம். காத்துக்கிட்டிருந்தானாம்.

நளி : அடேயப்பா. இதுக்கா இப்படிப் பாடிகிட்டு வர்றீங்க?

சிகா : ஆமாம். நான் பாட்றேன். நீ ஆடு.

உஷா. ஓ...நல்லாருக்குமே! அண்ணன் பாடி தங்கச்சி ஆடினா சொல்லணுமா என்ன?

சிகா : அடே. நீ என்ன பெரிய சங்கீதக் களஞ்சியம்னு நெனைச்சிக்கிட்டிருக்கியா?

தண் : பின்னே, நீங்க சொன்னாலும் சொல்லாவிட்டாலும் அவுங்க களஞ்சியம்தான்.

சிகா : போடா முட்டாள்! நளினியோட பாட்டுக்கும் ஆட்டத்துக்கும் இவள் எந்த மூலை? அவள் சுரம்பாட ஆரம்பிச்சா இவளுக்கு ஜுரமே வந்துடாதா? ஏன் நளினி?

நளி : சந்தேகமென்ன?

சிகா. (உஷாவிடம்) உம்... பாத்தியா?

உஷா : இதுக்கெல்லாம் நான் பயந்திட மாட்டேன். தைரியமிருந்தா எங்கூட பாடி ஆடச் சொல்லு பார்க்கலாம்?

சிகா : பாத்துட்டா போவுது. ஏம்மா?

நளி : ஆஹா ....ரெடி.

அவர்கள் ஆடிப்பாடி கலாட்டா செய்து கொண்டிருக்கும்போது சுந்தரலிங்கம் பிள்ளை வருகிறார்.

சுந் : பேஷ். நல்லாருக்கு ஏண்டா. இதென்ன வீடா, டிராமா கொட்டகையா?

வீட்டிலே சினிமா புரோஜக்டர்

ஏ. ஸி. அல்லது டி. ஸி. மின்சாரத்தாலோ, டார்ச்சின் உதவியாலோ இயங்கக் கூடியதும், 35. அல்லது 16 மி. மீ. பிலிம்களை உபயோகிக்கக் கூடியதுமான அழகிய புரொஜக்டர். 4 x 3 அடி அளவு திரையில் உங்கள் வீட்டிலேயே படங்களை (வர்ணங்களோடுகூட) பார்க்கலாம். சிலைடுகளையும் காட்டலாம். 3 அடி இனாம். விலை ரூ. 11-8-0 வி.பி.பி. சார்ஜ் 2-8-0 அதிகப்படி பிலிம் ஒரு கெஜம் அணா 8.



தானாகவே இயங்கும் பிஸ்டல்

(ஆறு ரவை கொண்டது)

தானாகவே இயங்கும் குதிரையுடன் கூடிய அமெரிக்கன் மாடல் பிஸ்டல். அதன் சப்தமும், ஜ்வாலையும், புகையும் காட்டு மிருகங்களைக் கூட ஓட்டவல்லது. விபத்தில் உதவும் சிறந்த துணை.



விலை ரூ. 8-8-0. வி. பி. பி. செலவு ரூ. 1-12-0 தனி. 12 ரவைகள் இனாம். அதிகப்படி ரவைகள் டஜன் ஒன்றுக்கு விலை ரூபாய் 1-4-0. பிஸ்டல் பெட்டி ரூ. 2-8-0.

மின்சார, ரேடியோ, கைத்தொழில் புத்தகம் (ரூ 15 செலவில் மாதம் ரூ. 200 சம்பாதிக்கலாம்) விலை ரூ. 4. காமிரா ஆசான் ரூ, 3. வாசனை தயாரிப்பு ரூ. 2-8-0 தையல் ஆசான் ரூ. 3-8-0. சோப் தயாரித்தல் ரூ. 3. வி. பி. பி. செலவு அணா 12. தனி.

கடிதப்போக்குவரத்து ஆங்கிலத்தில்தான் இருக்கவேண்டும்.

MILAP TRADING CO, (P. P. M)
Kanwariganj - Aligarh- U. P. (INDIA)

சிகா: கோவிச்சுக் காதீங்கப்பா. பொழுது போக்குக்காக இப்படி...

சுந்: சரிதான், நீங்க பொழுது போக்கற லட்சணம் கட்டடமே இடிஞ்சு விழுந்திடும் போலருக்கு... ஏண்டா?

சிகா; இல்லேப்பா! நளினிக்கும் உஷாவுக்கும் போட்டி வந்துடுச்சு.

நளி: ஏண்ணு பொய் சொல்றீங்க? நீங்கதானே போட்டியை உண்டாக்கினீங்க?

சுந்: அப்படியா? அதிலே பாரு. அவனுக்கு வயசுதான் ஆச்சே தவிர, அதுக்குத் தகுந்த புத்திசாலித்தனம் இருந்தா இப்படி இருப்பானு? ஏண்டா! அதுக்கு இருக்கிற உடம்புக்கு இப்படி கன்னு பின்னுன்னு ஆடி ஏதாவது வந்துட்டா யார் அனுபவிக்கிறது?

நளி: ஆமாம்ப்பா. இவ்வளவு நேரம் ஆடினதிலே தலேவலி தாங்க முடியல்லே. நான் போயிட்டு வந்துட்றேன்.

சுந்: எங்கே போறே?

நளி: டாக்டர் வீட்டுக்கு.

சுந்: நளினி! அதிலே பாரு. இவ்வளவு நாளா டாக்டர் வீட்டுக்குப் போய்வந்தது சரி. இனிமே அங்கே போகக்கூடாது.

நளி: ஆ...

சுந்: அவரைப் பார்க்கவும் கூடாது. பார்த்தாலும் பேசக்கூடாது. சுருக்கமாச் சொன்னு அவுரு பேரைக் கூடச் சொல்லக் கூடாது. ஆமாம்.

அன்று பார்க்கில் டாக்டரைச் சந்தித்து தன்னே தகப்பனுர் சோதித்ததைக் கூறுகிருள் நளினி.

* * *

கான்ஸ்டபிள் கண்ணுசாமி இன்ஸ்பெக்டரிடம் பெண்களின் சுபாவத்தைக் கூறி தாய் வீடு சென்ற அவர் மனேவி மரகதத்தைத் திரும்ப அழைத்து வரச் சொல்லுகிருன். அவரும் ஓரளவு ஒப்புக் கொள்ளுகிருர்.

* * *

காட்சி 4

சிகாமணியிடம், பெரியண்ணனுக்கு லாட்டரியில் பரிசு விழுந்திருப்பதாக அறிவிக்கும் தந்தி யிருக்கிறது.

சிகா: ஏய் தண்டம்! பெரியண்ணன் இருக்கானு, வெளியே போயிருக்கானு?

தண்: வெளியேதான் போயிருக்கான். வந்திடுவான். ஏங்க, என்னுங்க தந்தி? யாரு செத்துட்டா?

சிகா: அட மண்டு! இப்பத்தான் நல்லது கெட்டது எல்லாத்துக்குமே தந்தி வருதேடா?

விஷயமறிந்த பெரியண்ணன் அப்போது உள்ளே நுழைகிருன்.

பெரி: ஏங்க, எனக்கா தந்தி வந்திருக்கு?

சிகா: ஒனக்கில்லே. எனக்குத் தான்.

பெரி: என் பேருக்கு வந்திருக்குன்னு தந்தி ப்யூன் சொன்னுனே?

சிகா: உம்பேருக்கா? இல்லே அது எனக்குத்தான்.

பெரி: நல்லவேளே. நான் பயந்தே போயிட்டேன். அப்போ... அது எனக்கில்லேயே?

சிகா: நிச்சயமா ஒனக்கில்லே. போ... உம்... நான் அவசரமா போறேன். சாயந்திரம் வீட்டுக்கு வா. என்ன?

பெரி: சரிங்க...

நேரே வீட்டுக்கு ஓடி பீரோவையெல்லாம் குடைந்து தேடுகிருன்.

உஷா: என்ன தேட்றீங்க?

சிகா: ம்...ஒண்ணுமில்லே...!

நளி. ஒண்ணுமில்லாமலா தேட்றீங்க? மணிபர்ஸை எங்கியாவது மறந்து வச்சிட்டீங்களா?

சிகா: வைக்கவும் இல்லே. மறக்கவும் இல்லே. நீ போ!

நளினி: ஏன் இங்கே இருந்தா என்னவாம்?

இருவருக்கும் தகராறு வந்து தகப்பனர் தலையிட்டு நளினியை அழைத்துச் செல்கிறர். சிகாமணி சொற்படி மாடியில் உஷாவிடம் வருகிறன் பெரியண்ணன். தங்கள் சதி நாடகத்தை ஆரம்பிக்கிறள் அவள்.

பெரி: அம்மா!

உஷா: வா..வா. ஏன் இவ்வளவு நேரம்?

பெரி: கோவிச்சுக்காதிங்க. நான் அப்பவே வந்துட்டேன். பெரிய அய்யாதான், 'இருடா போகலாம்' ஞரு.

உஷா: சரி, ஏன் நிக்கறே? இப்படி உக்கார்.

பெரி: ஆ...ஆ...

உஷா: ஐயா கிழே தானே போனரு. பாக்கல்லே?

பெரி: ஆமா.. என்னை எதுக்கு வரச் சொன்னரு?

உஷா: எனக்காகத்தான.

பெரி; உங்களுக்காகவா? அப்படிண்ணு?

உஷா; உக்காரேன். சொல்றேன்.

பெரி: பரவால்லே.

உஷா; ஆமாம், ஏன் இன்னும் கல்யாணம் செய்துக்காமே இருக்கே?

பெரி: என்னங்க, காலம் இருக்கிற இருப்புக்கு கல்யாணம்னு சரமானியமா இருக்கா? கடன் இருக்கு. போதாக்குறைக்கு தங்கச்சி வேறே இருக்கு...

உஷா: அதனலே நாங்களே உனக்குக் கல்யாணம் செய்து வச்சு, சம்பளத்தையும் ஜாஸ்தியாக்கி...

பெரி: ஆ...! உண்மையாவா?

உஷா: ஆமாம், அய்யாவுக்குத்தான் உன் மேலே அளவு கடந்த ஆசையாமே.

பெரி: அப்படீங்களா?

உஷா: உம்...சினிமா ஸ்டாரா மாதிரி அழகான பொண்ணும் பாத்து.

பெரி. சினிமா ஸ்டாரா...?

உஷா: உம்...'ஆ என் கண்ணளா, கட்டழகா! என்னை விட்டு நீங்கள் தன்னந்தனியாக நிற்கிறீர்களே. இது தகுமா, முறையா? இது தருமந்தான? ஏன் இந்தத் தயக்கம்? உங்கள் கண்களுக்கு நான் அழகாயில்லையா?...ஏன், யாரைப் பார்க்கிறீர்கள்?...யாரும் இங்கு வரமாட்டார்கள்...வந்தாலும கவலையில்லை... நம் காதலைத் தடுக்க யாராலும் முடியாது' - அப்படீன்னு உன்னேட கொஞ்சிக் குலாவினதானே குடும்பம் சந்தோஷமா இருக்கும். இல்லே.

பெரி: (திகைப்புடன்) ஆமாம்... ஆமாம்.

உஷா: 'நாதா! இனி உங்களை விட்டு ஒரு கணமும் பிரிந்திருக்க மாட்டேன். நீங்களே மறந்தாலும் நான் மட்டும் உங்களை மறக்க முடியாதபடி என்னை மயக்கி விட்டீர்களே. வாருங்கள் அந்த மஞ்சத்தில் அமர்ந்து மகிழ்ச்சியுடன் இருக்கலாம்!' இப்படியெல்லாம் ஜாலியா பேசி சரஸமா இருக்கிறதுக்குத்தான் சினிமா ஸ்டாரா மாதிரி பாக்கணும்னு இருக்கேன். உனக்கு இஷ்டந்தானே?

பெரி: இதைக் கூடவா கேக்கணும்?

உஷா: உம்...உன்மேலே உள்ள பிரியத்தினலே இப்படியெல்லாம் செய்யறேன், நீ கடைசி வரைக்கும்...

பெரி: இதை மறக்கவே மாட்டேன், உங்க இஷ்டம் போலவே நடப்பேன், நம்புங்க.

உஷா: அப்படின்னு நான் சொல்றபடி செய்வியா?

பெரி: என்னவேணும்னலும் செய்யறேன், சொல்லுங்க.

உஷா: நீ லாட்ரி டிக்கட் வாங்கினியே அது எனக்கு வேணும்.

ஒன்றும் தெரியாதவன் போல் அப்போது உள்ளே நுழைகிருன் சிகாமணி.

சிகா : உனக்கு எதுக்கு அந்த டிக்கட்டு?

உஷா : எதுக்கோ வேணும். என்ன பெரியண்ணு தரியா?

பெரி : என்னுங்க, போயும் போயும் அந்த டிக்கட்டைக் கேக்க நீங்களே!

உஷா : ஏன், தரக்கூடாதோ? ஓஹோ, பிரைஸ் வரும்போலருக்கு?

சிகா : ஆமா, இத்தனை ஆயிரம் டிக்கட்டுலே இவனுக்கும் எனக்குந் தான் பிரைஸ் விழப் போவுது. உம்... பணம் சேக்கறதுக்கு இப்படி ஒரு தந்திரம் பண்ணியிருக்காங்க. அது தெரியாமெ..வேணும்னு என டிக்கட்டை எடுத்துக்கியேன். அவனைக் கேட்டா குடுப்பானு?

பெரி : குடுக்கிறதைப் பத்தி இல்லீங்க. அது எங்கே இருக்கோ தெரியல்லே...

உஷா : தேடிப்பாத்தா தெரியும்.

பெரி : எங்கே வச்சேண்ணுகூட ஞாபகமில்லியே.

சிகா : உஷா! எவ்வளவு உஷாரா இருக்கான் பாத்தியா? அவன் பேசாத திலிருந்தே ஹூம்...நீதான் அவனுக்குக் கல்யாணம் செய்யணும். சம்பளத்தை ஜாஸ்தியாக்கணுமனு சொல்றியே தவிர......

பெரி : அய்யய்யோ. அப்படி நெனேக்காதிங்க...

சிகா : பின்னே ஏன் யோசிக்கிறே?

உஷா : எப்படியாவது தேடிப் பாத்து கொண்டு வந்தா நான் சொன்னது நடக்கும். இல்லேன்னு இல்லேதான்.

பெரி : ஆகட்டுங்க. எங்கே இருந்தாலும் தேடிக் கொண்டாந்துட்றேன்.

காட்சி 5

லாட்டரியில் பெரியண்ணனுக்கு ஒரு லக்ஷ ரூபாய் பரிசு வந்திருப்பதாகவும், டிக்கட் இருந்தால்தான் பணம் பெற முடியுமென்றும் பெரியண்ணன் வீட்டில் வந்த க்ஷயரோக நிவாரண சங்கப் பிரதிநிதி கூறுகிருள். எல்லோரும் எங்கும் தேடியலுத்த பின் வண்ணுன் துணியுடன் வந்து சேருகிறது அது. பணத்தைப் பாங்கியிலிருந்து பெரியண்ணன் பெற்றதும், கண்ணுசாமி ஊரோடு போக விரும்பி கான்ஸ்டபிள் வேலையை ராஜினுமா செய்துவிட்டு, அது ஏற்கப்படுவதற்கிடையில் ஒரு மாத லீவு பெற்று பெரியண்ணனுடன் சுந்தரலிங்கம் பிள்ளையிடம் வருகிருன்.

கண் : நமஸ்காரங்க.

சுந் : கண்ணுசாமியா, வாப்பா! எல்லாம் கேள்விப் பட்டேன். ரொம்ப சந்தோஷம். அது யாரு? அடடே பெரியண்ண பிள்ளையா?

பெரி : ஆ... பெரியண்ண பிள்ளையா?

சுந் : ஏன், இனிமே அப்படித் தான்... அதிலே பாரு. நாமே மரியாதை கொடுத்தாதான் அப்புறம் நாலுபேரு மரியாதை கொடுப்பா.

கண் : வாஸ்தவந்தாங்க. இருந்தாலும் நீங்க இப்படிச் சொல்றது...

சுந் : அதுவும் சரிதான். எப்போ பணம் வந்திடுச்சோ, மரியாதையெல்லாம்தானு வந்திடுமேங்கிறியா? உம், அதிலே பாரு. பணம் வந்தது பெரிசல்ல. அதை பாழாக்காமெ நல்லவிதமாக கையாளணும்.

பெரி : உம்...உம்...அதுக்கெல்லாம் ஒரு முடிவு பண்ணியிருக்கோம்.

கண் : ஆமாங்க. அதாவது கிராமத்துக்குப் போயி நமக்குத் தகுந்த மாதிரி நல்ல விதமா ஒரு வீட்டைக் கட்டிக்கிறது.

சுந் : சரி, அப்புறம்?

கண் : ஊர்லே சிலபேரு ஒழுங்கானபடி விளைச்சல் இல்லாமெ அட

மானத்துக்கு நெலத்தை வச்சிட்டு அவஸ்தைப்பட்டு கிட்டிருக்காங்க. அதெல்லாம் நம்மபேர்லே மாத்தி கிட்டு விவசாயத்தைக் கவனிக்க லாமனு இருக்கோம்.

சுந் : ஓஹோ! அதிலே பாரு... உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில் லேன்னு...

பெரி : என்ன, உப்பில்லேயா?

சுந் : ஊ ஹூம். ஒப்பில்லே. அதாவது விவசாயத்துக்கு மிஞ்சிதான் வேறே எந்த தொழிலும். அதனலே அது நல்ல யோசனைதான்.

பெரி : அப்போ...நாங்க......

சுந் : போயிட்டு வாங்க. ஆண்டவன் தயவிலே ஆனந்தமாயிருக்கணும்.

தண் : ஆனு ஒரு விஷயம். பட்டணத்துப் பக்கம் வந்தா பழைய எசமானே மறந்துடாதிங்க.

கண் : இதைவிட அந்தஸ்து வந்தாலும் இவுங்களை மட்டும் மறக்கவே மாட்டேன்.

சுந் : அதான் வேண்டியது.

கண் : நாங்க வரட்டுங்களா?

சிகாமணி, உஷா முதலியோரிடமும் விடை பெற்றுச் செல்கின்றனர் பெரியண்ணனும் கண்ணுசாமியும்.

* * *

கண்ணுசாமி சொல்படி ஜோசியரான மாமனுரிடம் சென்று மரகதத்தை அழைத்துவர முடியாமல் அவமானப்பட்டுத் திரும்புகிருர் இன்ஸ்பெக்டர்.

காட்சி 6

டாக்டர் குமாரிடம் நளினி வருகிருள். அவரது கம்பவுண்டர் சக்கரையும் அங்கிருக்கிருன்.

நளி : குட்மார்னிங் டாக்டர்.

டாக் : மார்னிங். உம்...எங்கே இப்படி...? டாக்டரைப் பார்க்கவா... இல்லே...குமாரைப் பாக்கவா?

நளி : ரெண்டுமில்லே...மாப்பிள்ளையைப் பாக்கணும்னு வந்தேன்.

டாக் : மாப்பிள்ளையா? அப்படீன்னு புரியலியே.

சக் : மாப்பிள்ளையின்னலே புரியலியா? தனியா இருக்கப் பிரியமில்லாமெ ஆயுசு வரைக்கும் அவஸ்தைப் பட்றதுக்கு அட்வான்ஸ் வாங்கப் போறவருக்கு மாப்பிள்ளைன்னு பேரு.

டாக் : சரிதாங்க. போயி வேலையைக் கவனிங்க. இடியட்......ஆமா மாப்பிள்ளை யாரு நளினி? எங்கே இருக்காரு?

நளி : இதே ஆபீஸலேதானிருக்காரு.

டாக் : யாரது...? சக்கரையா?

நளி : இல்லே...வெல்லம்!

டாக் : சரி. யாருக்கு மாப்பிள்ளையின்னுவது சொல்லு.

நளி : சொல்லட்டுமா? ஸ்ரீமான் சுந்தரலிங்கம் பிள்ளைக்கு மாப்பிள்ளை! இப்போ தெரியுதா?

டாக் : ஓஹோ! இதுக்குத்தான் நேத்து போன்லே என் ஜாதகம் வேணும்னு கேட்டார் போலருக்கு, உங்கப்பா?

நளி : உம்... குடுத்திங்களா?

டாக் : ஜாதகம் இருந்தால்லே குடுக்கறதுக்கு? உம். இந்த ஜாதகத்துலே எல்லாம் எனக்கு நம்பிக்கை கிடையாது.

நளி : அப்படின்னு, உங்களைப் பற்றியே உங்களுக்கு நம்பிக்கையில்லேன்னு அர்த்தம். அதானே?

டாக் : அதிருக்கட்டும், கல்யாணம் நடக்கப்போறது உண்மை தானு?

நளி : கல்யாணம் நடக்கப்போறது உண்மையோ பொய்யோ தெரியாது. நாளைக்கு ஜோஸ்யர் வரப்போறது உண்மை. கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்யப்போறதும் உண்மை.

சக்: அப்போ சக்கரைக்கு வேட்டி. சடடை கொடுக்கப் போற தும் உண்மைதான்.

டாக்; உம்... சர்க்கரை இல்லா மலா கல்யாணம்!

இதற்குள் சிகாமணி உஷாவின் போதனையால் நளினியைப் பெரி யண்ணனுக்கு மண முடித்து சொத் தைக் கவரத் தீர்மானித்து கண்ணு சாமியிடமும் பேசிவிட்டு வந்து விடு கிருன். ஆனல் ஜோசியரைக் கொண்டு பெயர் பொருத்தம் பார்த்து குமார்-நளினி திருமணத் துக்கு ஏற்பாடு செய்து விடுகிருர் சுந்தரலிங்கம் பிள்ளை. நளினி தன் சொந்த மகளல்ல என்றும் அவளைக் கடைசிவரை கண் கலங்காது காப் பாற்றும்படியும் கேட்டுக் கொண்டு விடு திரும்புகிருர். நளினி அப் போது ஆனந்தத்தால் பாடிக் கொண்டிருக்கிருள்.

சுந்: நளினி...!

நளி: வாங்கப்பா!

சுந்: உம்... என்ன ஒரே அமக் களமாயிருக்கே?

முத்: இருக்க வேண்டிய காலந் தானே எசமான்!

நளி: உஸ்... உம்... ஒண்ணு மில்லேப்பா, சும்மா பாடிக்கிட்டிருந் தேன்.

சுந்: ஏம்மா பொய் சொல்றே? அதிலே பாரு, நானும் அது விஷயமா ஒரு முக்கிய சேதி சொல்லணும்னு தான் வந்தேன்.

நளி: என்னப்பா அது? சொல் லுங்க.

தன் காலத்திற்குப் பிறகு குமாரன் சிகாமணி சொல்படி நடக்க வேண்டு மென்று உறுதி மொழி கேட்கிருர். அவள் அப்படியே செய்து வெளியே செல்லும்போது சிகாமணி உள்ளே நுழைகிருன்.

சிகா: அப்பா!

சுந்: ......?

சிகா: ஒரு குட்நியூஸ் ..... நல்ல சேதி!

சுந்: நல்ல சேதியா?

சிகா: ஆமாம். நம்ம தங்கச்சி கல்யாண விஷயமா... ஒரு பஸ்ட் கிளாஸ் ஐடியா பண்ணியிருக்கிறேன்.

சுந்: அப்படியா? என்ன சொல்லு?

சிகா: நளினியைப் பெரியண்ண னுக்கு கட்டிக் கொடுத்திடலாம்னு முடிவு பண்ணிட்டேன்.

சுந்: ஆ...... அட படுபாவிப் பயலே! இந்த எழவு சேதியைத்தானு நல்ல சேதினு சொன்னே? ஏண்டா, இதென்ன கத்திரிக்கா, வாழக்கான்னு நெனேச்சியா, கணட பயலுக்குத் தூக்கிக் கொடுத்திட!

சிகா; ஏம்ப்பா, அவனுக் கென்ன. லேக்பதி — லட்சாதிபதி யாச்சே...நான் சொல்றதைக் கேளுங்க.

சுந்: என்ன! நீ சொல்றதை நான் கேக்கணுமா? அயோக்கியப் பயலே!

சிகா: அடடா, அவசரப் பட்றீங் களே, விஷயமில்லாமெ சொல் வேனு?

சுந்: என்ன இருந்தாலும் சரி தாண்டா. அதிலே பாரு...டாக்ட ருக்குத்தான் நளினியைக குடுக்க ணுமனு ஆதியிலேயே நிச்சயம் பண்ணியாச்சு. நிச்சயதார்த்தமும் செய்யத்தான் போறேன்.

நிச்சயதாம்பூலத்தன்று சிகாமணி டாக்டரை அவமானப்படுத்தி, பெரியண்ணனுக்கே நளினியை மணமுடிக்கும்படிக் கூற, அதனல் வெகுண்ட சுந்தரலிங்கம் அவனை அடிக்க, அவன் மயக்கமாக விழவே, அண்ணனுக்கு விரோதமாக நடப்பதில்லை என்று அப்பாவுக்கு உறுதி மொழி கொடுத்த நளினி பெரியண்ணனை மணக்கிருள். சிகா மணியும் உஷாவும் பெரியண்ண னின் பணத்தைக் கவர மேலும் திட்டங்கள் வகுக்கின்றனர்.

பெரியண்ணன் வீட்டில் நளினி யும் விஜயாவும் பூமாலைகள் போடு வதைப் பார்த்த கண்ணுசாமி மனைவி பார்வதியைக் கேலி செய்கிருன்.

கண் : பாத்தியா, இதில்லே பொம்பளேக்கு லட்சணம். நீயும் இருக்கியே...!

பார் : ஏன் எனக்கு என்னவாம்?

கண் : அட. அதுக்கில்லேடி. சாதாரணமா அந்தப் பொண்ணு இவ் வளவு புத்திசாலித்தனமா நடந்துக் குதே. நீ இன்னிக்கு வெள்ளிக் கிழமையும் அதுவும் உன் முகத்தைக் கூட கழுவாமே இருக்கியேன்னு சொல்றேன்.

பார் : தெரியுது சும்மா போங்க.

கண் : ஹூம் ... சாதாரணமா உள்ளதைச் சொன்னதும் உடனே கோபம் வந்திடுச்சா? ஏன் வராது? உன்க்கும் உன் மகனுக்கும்தான் சொல்புத்தியும் கிடையாது. சொந்த புத்தியும் கெடையாதே!

பார் : இந்த பாருங்க...என்னே எதுவேணும் பேசுங்க. அவனேப் பத்திப் பேசாதிங்க. ஆமாம்.

கண் : உம் பேசினு?

பார் : எதுக்காகப் பேசணும்? அவன் முன மாதிரியா இருக்கான? குடும்பஸ்தனு ஆயிட்ட பிறகும்கூட...

கண் : இப்படிக் கும்மாளம் போட்டுக்கிட்டிருக்கானே அது நல்லா ருக்கா? சாதாரணமா...

பெரியண்ணன் அப்போது உள்ளே நுழைகிருன். அவனேயும் மனேவியையும் கோபித்துக் கொண்டு வெளியே செல்கிருன் கண்ணுசாமி. சிகாமணியுடன் சுற்றி விட்டுக் களேத்து வருகிருன் பெரி யண்ணன்.

நளி : ஆ... ஏன் இப்படி அலங் கோலமா இருக்கிங்க?

பெரி : ஏய், நான் எப்படியிருந்தா உனக்கென்ன? அது என் இஷ்டம்.

நளி : ஒவ்வொரு நாளும் இப்படி நேரம் கழிச்சுவந்தா உங்க உடம்பு கெட்டுடாதா?

பெரி : போனுப் போவுது. அந்தக் கவலே உனக்கு வாணும். என் உடம்பை எப்படிச் சரிபண்ணிக்கிற துண்ணு எனக்குத் தெரியும்; இந்தா வேறே ஒரு ஷர்ட் கொண்டா!

நளினி புது சொக்காய் ஒன்று கொண்டு வருகிருள்.

நளி : உம்...சாப்பாடு கொண்டு வரட்டுமா?

பெரி : ஏய், நில்லு. சாப்பாடு இருக்கட்டும்...அம்மாகிட்டே பணம் வாங்கிவைக்கச் சொன்னேனே.....?

நளி : கேட்டேன்...உம...கொடுக் கலே.

பெரி : கொடுக்கலியா? அவுங்க குடுத்தாகூட நீதான் வாணும்னு சொல்லிடுவியே! உனக்கு வரவர ரொம்பத் திமிர் ஏறிப்போச்சு... இல்லே? இப்ப எனக்குப் பணம் வேணுமே...என்னடி செய்யறது.

நளி : அதனுலென்ன, நாளேக்கி வாங்கிகிட்டாப் போவுது.

பெரி : ஏண்டி...உன் இஷ்டத் துக்கு நான் நடக்கணுமா? எடுத்ததுக் கெல்லாம் உங்கண்ணனே செலவு பண்ருன்...ஒரு அரை சிங்கள் டீயா வது நான வாங்கி குடுக்கலேன்னு என்ன நெனேப்பான். உம்...சரி.. மரி யாதையா நெக்லஸை கழட்டி வை... என்னடி யோசிக்கிறே.

நளி : காலேயிலே தரேனே.

பெரி : ஆ.....கொண்டாடீன்னு எதிர்த்து வேறே பேசறியா? நானும் சிகாமணியும் ஒரு அவசரகாரியமா வெளியே போறோம் அம்மா கேட்டா சொல்லிடு ..போ.

(நெக்லஸுடன் வெளியேறுகிருன்.)

* * *

நளினி சோகமாக உட்கார்ந்திருக் கிருள். விஜயா வந்து தேற்று கிருள்.

விஜ : அண்ணி,

நளி : ஆ...!

விஜ : என்னண்ணி, கட்டிலே விட்டு கட்டாந்தரையிலே உக்காந்து கிட்டிருக்கே? உம்... என்னமோ சோந்தாப்லே இருக்கியே. ஏன்?

நளி: என்ன செய்யறது? இன்னும் ஏழெட்டு மாசத்துக்கு இப்படித்தானே இருந்தாகணும்?

விஜ: சும்மாயிரு அண்ணி. அப்படி என்ன வியாதி வந்திடுத்து உனக்கு?

நளி: ஹூம்...உனக்குத் தெரியாது விஜயா! குழந்தை பிறக்கிற வரைக்கும்...நான் இப்படித்தான் இருக்கணும்.

விஜ: ஓஹோ! ஆமா, இது அண்ணுவுக்குத் தெரியுமா?

நளி: ஹூம்... அவருக்குத் தெரிஞ்சு என்ன, தெரியாமெ என்ன, ரெண்டும் ஒண்ணுதானே? உம்... எல்லாம் என் விதி...

விஜ: அழாதே அண்ணி!

பார்: நல்லாருக்குடி, நல்லாருக்கு. இப்படி அழுது அழுதே என் குடும்பத்தைத் குட்டிச்சுவராக்கணும்னு நெனச்சுகிட்டிருக்கியா? என்னடி முழிககிறே?

நளி: கோவிச்சுக்காதிங்க மாமி! எனக்கு...

பார்: என்னடி உனக்கு? நீ வந்ததிலிருந்துதான் தரித்திரம் பிடுங்கித் தின்னுதே; போதாக் குறைக்குப் பொழுது விடிஞ்சதும் விடியாததும் இதுவேறயா?

விஜ: ஏம்மா, உன் மனசிலே ஈவு இரக்கமே கிடையாதா?

பார்: சரிதான், வாயை-மூடுடி.

விஜ: நான் மூடவாணும். இனிமே நீதான் மூடிகிட்டு ஒரு மூலையைப் பார்த்து உக்காரணும். இந்தா!

ஒரு கம்பைக் கொடுக்கிருள்.

பார்: ஆ...! என்னடி என்னையே ஓட்றே? ஹூம்...... இவளோட சேர்ந்து நீயும் வாயாட ஆரம்பிச்சுட்டியா? உம்...

விஜ: அட, ஏம்மா சும்மா குதிக்கிறே? இனிமே அண்ணியை இப்படியெல்லாம் ஆட்டிப் படைக்க முடியாது.

பார்: ஆ...?

விஜ: ஏன் தெரியுமா? இன்னும் ஏழெட்டு மாசத்திலே நீ பாட்டியாகப் போறே! இப்பத் தெரியுதா?

பார்: (முகம் மலர்ந்து நளினியிடம்) அப்படியா? எம்மா, இதை ஏன் இவ்வளவு நாளா சொல்லலலே!

விஜ: எப்படிச் சொல்றது? ஒரு நிமிஷமாவது உன் முகத்திலே சந்தோஷம் இருந்தாத்தானே?

பார்: எனக்கு என்னடி தெரியும்?(நளினியிடம்) அழாதேம்மா வா. இனிமே எந்த வேலையும் செய்யக் கூடாது. விஜயா! அண்ணிக்கு வேண்டியதை இனிமே நீதான் கவனிக்கணும்...என்ன?

விஜ: நான் கவனிக்காமெ வேற யாரு கவனிக்கப் போறு?

பார்: சரி சரி! இந்த நல்ல சேதியை உங்கப்பா கிட்டியும் சொல்லிட்டு வர்ரேன். பாத்துக்கோ.

காட்சி 7

மரகதம், தாய் வீட்டை விட்டு வெளியேறி பலவித கஷ்டங்களனுபவித்தபின் பைத்தியம் என்று பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் சேர்க்கப்படுகிருள். அங்கே டாக்டர் குமாரிடம் தன் கதையைக் கூறுகிருள்.

குமா: சரி, இங்கே எப்படி வந்திங்க?

மர: வீட்டிலேருந்து புறப்பட்டு எங்கே செல்வது, என்ன செய்வது என்று தெரியாமல் வழிநெடுக நடந்தேன், அப்போது சில காலிப்பயல் கண்ணடித்தும் கைஜாடை செய்தும் என்னைப் பின் தொடர்ந்தனர். நான் எவ்வளவோ சொல்லியும் கேட்காமல் மீண்டும் அவர்கள் தொடரவே ஆத்திரத்தால் அவர்கள்மேல் கல்லை எடுத்து வீசினேன். அவர்கள் என்னை பைத்தியம் என்று கேலி செய்தனர். அதே சமயம் போலீஸார் வந்து என்னைப் பிடித்தனர். என்மனம நிம்மதியில்லாமல் நிலைகுலைந்து இருந்ததால் அவர்கள் கேட்ட கேள்விக்கு

நான் சரியான பதில் சொல்லவில்லே. ஆகவே முடிவில் நான இங்கு வரும் படி நேரிட்டது. ஆனல் உண்மையில் எனக்குப் பைத்தியமில்லே.

அப்போது ஆஸ்பத்திரி டாக்டர் வருகிருர்.

டாக்: வெல் டாக்டர். என்ன, விசாரிச்சிங்களா?

குமா: உம்... உம்.. இவுங்க சொல்றதிலியும் உண்மை இருக்கும்னு நெனேக்கிறேன்.

டாக்: அப்படியானல் போலீஸார் கொண்டுவர வேண்டிய அவசியம்?

குமா: அதுவும் யோசிக்க வேண்டிய விஷயம்தான். உம்... எதுக்கும்... இவுங்களே என் கண்காணிப்பிலே வச்சு பரிசிலனே செய்யலாம்னு நெனேக்கிறேன்.

டாக்: ஆஹா!

குமா: நான் போகும்போது கூட்டிகிட்டுப் போறேன்.

குமார் வீட்டுக்கு வந்த மரகதம் தன் கதை முழுவதையும் கூறுகிருள். அவர் அவளேத் தேற்றி அவள் கஷ்டங்களே தீர்த்து வைப்பதாகக் கூறுகிருர்.

* * *

குமார் டிஸ்பென்சரியிலிருக்கும் போது பெரியண்ணன் பிரசவ வேதனேப்படும் தன் மனேவி நளினிக்கு வைத்தியம் செய்ய அவரை அழைக்கிருன்.

பெரி: எனக்கு ஒங்களேத்தான் தெரியும். தயவு செய்து பொறப்படுங்க உடனே வந்திடலாம். இவ்வளவு நேரம் எப்படியிருக்கோ தெரியலே. வாரீங்களா, போகலாம்.

டாக்: ஏன், வேறே எத்தனேயோ பேர் இருக்காங்களே!

பெரி: ஐயய்யோ! அப்படி சொல்லாதிங்க ஸார். வேறே யாரையும் எனக்குத் தெரியாது. தயவு செய்யுங்க.

டாக்: பதருதிங்க. சொல்றதைக் கேளுங்க. பொதுவா பிரசவ கேசுக்கே ஆரம்பத்திலிருந்து கவனிச்சிக்கிட்டு வந்தவர்தான் இப்பவும் கவனிக்கணும். நான் இது வரைக்கும் பார்த்ததே இல்லேயே.

சர்க்: அதானே...!

பெரி: நாங்களும் இதுவரைக்கும் எந்த டாக்டர் கிட்டியும் காட்டவே இல்லியே.

சர்க்: அப்படியிருக்கலாமா அர்த்தமில்லாமெ?

பெரி: அதுக்காகத்தான் இவரை கூட்டிகிட்டுப் போகலாம்னு இவ்வளவு தூரத்திலிருந்து வந்திருக்கேன் டாக்டர்! கொஞ்சம் பெரிய மனசு பண்ணுங்க ரொம்ப புண்ணியம்.

சர்க்: புண்ணியமாவது பாவமாவது... அர்த்தமில்லாமெ.

டாக்: அதைப்பற்றி யெல்லாம் எனக்கு அக்கரையில்லே... உம் நான் வர்ரதின...

பெரி: பீஸ் ஜாஸ்தியாகுமேன்னு நெனேக்கிறீங்களா? எவ்வளவு ஆனலும் கட்டிட்ரேம்.

டாக்: நோ... நோ... அதெல்லாம் இல்லே... வந்து...

சர்க்: சரி.. ஒண்ணும் யோசிக்காதிங்க. அர்த்தமில்லாமெ இவ்வளவு தூரத்திலிருந்து வந்திருக்காரே. அதுக்காகவாவது போயிட்டுவாங்க.

பெரி: ஆமாம் சார். உங்க சம்சாரத்துக்கு இந்தமாதிரி இருந்தா உடனே போகமாட்டீங்களா?

டாக்: ஆ... உம்...... இதோ வந்துட்டேன்.

சர்க்: சுலோ!

சுலோ: என்ன?

சர்க்: உம்...பிரசவ கேசுக்கு வேண்டியதெல்லாம் ரெடி பண்ணிவை. நான் டிரைவரை கார் எடுக்கச் சொல்றேன்.

பெரி: எதுக்குங்க, என் கார்லியே போயிடலாமே!

பெரியண்ணன் வீடு சென்ற டாக்டர், தன் நர்ஸிங் ஹோமுக்கே நளினியை அழைத்துவரச் செய்து வைத்தியம் செய்கிறார். அவளுக்கு ஆண் குழந்தை பிறக்கிறது. பெரியண்ணன் ஓடிச் சென்று தாய், சகோதரியை அழைத்து வருகிறான். சிகாமணியும் தகப்பனாரைக் கூப்பிடப் போகிறான்.

விஜ: அம்மா! கொழந்தை எப்படி இருக்கு சொல்லு.

பார்: என் கொழந்தைக் கென்னடி, தங்கச்சிலை மாதிரிதான் இருக்கு.

விஜ: அதில்லேம்மா, யார் மாதிரி இருக்குன்னேன் .... ஏம்பா நீ சொலலு.

கண்: உம் ... எனக்கென்னமோ அவுங்க அப்பா மாதிரியும் இல்லே... அம்மா மாதிரியும் இல்லியே!

பெரி: அப்படீன்னு?

கண்: அவுங்க தாத்தா மாதிரி இருக்கூங்கறேன்.

விஜ: உம் ... ஆசை! அண்ணு மாதிரிதான் இருக்கு.

கண்: சரி, யார் மாதிரி இருந்தா என்ன? ஏதோ, இவ்வளவு கஷ்டப்பட்டதுக்கு வேறே எதுவும் ஆயிடாமெ, தாய் வேறே பிள்ளை வேறே ஆக்கி காப்பாத்தினரே கடவுள், அவரெக் கும்பிடுவியா?

சர்க்: ஏங்க? என்ன அநியாயமாப் பொய் சொல்றீங்களே ... அர்த்தமில்லாமே.

கண்: பொய் சொலறேனு?

சர்க்: பின்னே, எப்படியெல்லாமோ கஷ்டப்பட்டு இவ்வளவு தூரம் காப்பாத்தின எங்க டாக்டர் இருக்க, கடவுள் காப்பாத்தினார்னு அஞ்சாம பொய் சொல்றீங்களே அர்த்தமில்லாமெ.

விஜ: நீங்க சொல்றது கண் கண்ட கடவுள், அப்பா சொல்றது கண்காணாத கடவுள்.

சர்க்: சரி, எது முக்கியம்?

நளினிக்கு ரத்தம் செலுத்த வேண்டும் என்ற அவசியம் வந்த போது, தன்னையறியாமலேயே அவள் மீது பாசத்தால் உந்தப்பட்ட மரகதம் ரத்தம் கொடுத்து உதவுகிறாள். நளினியை நான்கைந்து நாட்கள் கழித்து வீட்டுக்கழைத்துச் செல்கிறார்கள். செல்வராஜா என்று பெயரிடப்படுகிறது அந்தக் குழந்தைக்கு. குழந்தையின் ஜாதகம் கணிக்கப்படுகிறது.

சுந்: சுப்பையா பிள்ளே! என்ன, பேசாமெ இருக்கீங்க? கொழந்தை பொறந்த நேரம் நல்ல நேரந்தானே?

ஜோசி: நீங்க ஒண்ணு, பொறந்த நேரம் நல்ல நேரந்தான்...

கண்: உம் ..அப்புறம்?

ஜோசி: ஹூம்...இதுவே சிம்ம லக்னமா இருந்தா, ராஜபோகத்திலே இருக்க வேண்டியது.

பெரி: அட, அதைப்பத்தி இப்ப என்னுங்க? உள்ள லக்னத்தை ஒழுங்கா கவனிச்சு சொல்வீங்களா?

ஜோ: நீங்க ஒண்ணு, சொல்ற மாதிரி எதுவும் இல்லையே!

பார்: ஏன்?

ஜோசி: நீங்க ஒண்ணு, அந்த மாதிரி அமைஞ்சிருக்கே கிரகமெல்லாம்...ஜென்மத்திலே குரு, அஷ்டமத்திலே சனி, போதாக்குறைக்கு பாதகாதிபதி பக்கத்திலேயே இருக்கான், இன்னும் என்ன வேணும்?

சுந்: சுப்பையா பிள்ளே! அதனாலெ ஒண்ணும் பயமில்லையே?

ஜோசி: நீங்க ஒண்ணு, பயப்பட வேண்டிய விஷயம்தான், இருந்தாலும் பயமில்லே.

கண்: எப்படி? சாதாரணமா?

ஜோசி: அதாவது இப்ப கிரகம் இருக்கிற இருப்பிலே அஞ்சு வருஷம் வரைக்கும் ஆபத்துதான், ஆமாம்!

பெரி: யாருக்கு? கொழந்

டைக்கா ?

ஜோசி : நீங்க ஒண்ணு! கொழந்தைக்கு, தாய்க்கு, இன்னும் சொன்ன குடும்பத்துக்கே ஆபத்துதான், ஆமாம்.

கண் : அய்யய்யோ, அப்புறம் சாதாரணமா ரொம்ப பயங்கரமால்லே சொல்றீங்க?

பெரி : ஏங்க, இதுக்கு ஒண்ணும் சாந்தியில்லையா ?

ஜோசி ; சாந்தியாவது, பூந்தியாவது? நீங்க ஒண்ணு! வேணும்னு ஒண்ணு செய்யலாம்.

சுந் : என்ன செய்யலாம்?

ஜோசி : இந்த அஞ்சு வயசு வரைக்கும் ஒருத்தர் முகத்தை ஒருத்தர் பார்க்காதபடி தாயும் குழந்தையும் தனித்தனியா பிரிச்சுவச்சா உயிருக்கு ஆபத்து வராது. இல்லே, டேஞ்சர்தான்.

பார் : அப்படியா? (எழுந்து போகிருள்)

கண் : இந்தாடி, எங்கே ஓட்றே?

பார் : இதோ வர்ரேன்...இருங்க.

காட்சி 8

குழந்தையை நளினி தொடக் கூடாதபடி வளர்க்கிருள் பார்வதி. அதன் பிறந்த நாளின்போது தன் குமாரி நளினி அதைப்பார்க்கக்கூட கொடுத்து வைக்காததற்காக வருந்துகிருர் சுந்தரலிங்கம் பிள்ளை. சிகாமணி தான் சொன்னபடியே சொல்லி விட்டதற்காக ஜோசியருக்கு நூறு ரூபாய் வெகுமான மளிக்கிருன். டாக்டர் குமார் குழந்தையைப் பார்க்க வருகிருர்.

பெரி : வாங்கசார், உட்காருங்க.

டாக் : ராஜா !...இந்தாங்க...

பெரி : அடேடே...நீங்க கூடவா இதெல்லாம்?

டாக் : பரவால்லே இருக்கட்டும்.

பார் : தம்பி! கொழந்தையை இப்படிக் கொடு.

பெரி : ஏம்மா ?

பார் : கொண்டாயேன் சொல்றேன்.

அவள் குழந்தையுடன் விரையும் போது நளினி மாடியிலிருந்து இறங்கி வருகிருள்.

நளி : ஆ...ராஜா...ராஜா......

பெரி : நளினி ! உன்னை இங்கே வரக் கூடாதுன்னு சொல்லல்லே ?

நளி : ஏன் வரக்கூடாது? நான் பெற்ற குழந்தையை நான் பார்க்கக் கூடாதா ? இதென்ன அக்ரமம் ?

பெரி : ஏய், அனுவசியமாப் பேசாதே. மரியாதையா உன் இடத்துக்குப் போயிடு.

நளி : முடியாது. உங்கள் அக்ரமத்தை சகித்துக் கொண்டு இனியும் என்னல் இருக்க முடியாது. எங்கே என் ராஜா எங்கே?

கண் : பதருதம்மா, சாதாரணமா எல்லாம் நம்ப குடும்ப நன்மைக்குத் தான் இப்படி செய்திருக்கு.

நளி : மாமா ! உங்களுக்குக் கூட ஈவு இரக்கம் இல்லையா? உங்கள் குடும்ப நலனுக்காகத் தாயையும் குழந்தையையும் பிரித்து என்னைத் தவிக்க வைக்க வேண்டுமா? அதை விட என் உயிரையும் உடலையும் பிரித்து விடுங்கள், உங்களுக்குக் கோடி புண்ணியம் உண்டு. ஆ... அப்பா ! உங்களுக்குக்கூட வாயடைத்து விட்டதா? எல்லாரும் சேர்ந்து என்னை இப்படி ஆட்டி வைக்கிருர்களே, இது நியாயமா? ஏன் மௌனமாக இருக்கிறீர்கள்? என் தாயார் இருந்தால் இப்படிப் பார்த்துக் கொண்டிருப்பாளா? தெய்வமே !

இருமுகிருள் அவள். அப்போது சில துளி ரத்தம் டாக்டர் நீட்டிய கையில் விழுகிறது.

டாக் : ஆ... ரத்தம் ச் ச்.

சிகா: அடடே, அப்படியா விஷயம்? கெட்ட சனியனுச்சே இது?

பெரி: என்ன இது?

சிகா: ஹூம். உனக்கு பிரைஸ் வாங்கிக் குடுத்துதே. அதுதான்.

கண்: அப்படின்னு. சாதாரணமா.

சிகா: டி. பி. க்ஷயரோகம்.

பெரி: டி. பி.யா?

சிகா: உம்.. ஒரு வீட்லே ஒருத்தருக்கு வந்தா போதுமே... அப்புறம் எல்லோருமே இருமிகிட்டுத் தான் இருக்கணும். பொல்லாத தொத்து நோயாச்சே.

பெரி: (டாக்டரிடம்) ஏன் ஸார், அப்படிங்களா?

டாக்: ஆமாம்... இருந்தாலும் இதைப்பத்தி பயமில்லே. இப்பத் தான் ஆரம்ப நிலே. ரெண்டொரு மாசத்திலே குணமாயிடும். அதுவும் என்னலே குணப்படுத்த முடியும். கவலைப்படாதிங்க.

சிகா: ஹூம், எப்பேர்ப்பட்ட டாக்டர் எல்லாம் வருஷக் கணக்கிலே வைத்தியம் செஞ்சுட்டு நம்ம கைக்காசு தீர்ந்ததும் கடைசியிலே கை விட்டுட்ருன், என்னமோ...

கண்: சரிதான் தம்பி. இருந்தாலும், சாதாரணமா இவராலே அது முடியும். நளினியைபபத்தி நரம்ப எல்லாருமே நம்பிக்கை இல்லாமே இருந்தோம். அதையே காப்பாத்தி விட்டாரே. இதுதானு முடியாது?

டாக்: மேலும் இது ஆரம்ப நிலே யாதலால் நிச்சயமாக என்னுல் குணப்படுத்த முடியும்.

பெரி: அது சரி... இது தொத்து நோயாச்சே .. கொஞ்சம் கொஞ்சமா நமக்கும் பிடிச்சுட்டா?

டாக்: அந்தச் சந்தேகம் இருந்தால் நம் வீட்டுக்கருகிலேயே காற்று வசதியோடு ஒரு குடிசைபோட்டு நளினியை தனியாக வைத்திருங்கள்.

தனியிடத்தில் வைக்கப்படும் நளினி மனமொடிந்து போகிருள். விஜயா அங்கு வந்து அவளுக்கு ஆறுதல் கூறுகிருள்.

விஜ: அண்ணி!

நளி: விஜயா!

விஜ: அண்ணி! அடிக்கடி இப்படி அழுதுகிட்டிருந்தா வியாதி அதிகமாயிடாதா?

நளி: ஆகட்டுமே! பத்து மாதம் சுமந்து பெற்ற பாலகனைப பார்க்கவும கொடுத்து வைக்காத பாவி உயிர் வாழ்வதைவிட ஒழிந்து விடுவது நல்லது.

விஜ: அப்படி நினைக்காதே அண்ணி! நான இருக்கிற வரைக்கும் குழந்தைக்கு ஒரு கெடுதலும வராது

நளி. அந்தச் சந்தேகமே எனக்கில்லே, ஆனல் எனக்காக நீ எத்தனை நாளைககுத்தான் உதவி செய்ய முடியும். சிக்கிரத்தில ஒருவனுக்கு மாலையிட்டு மறுவீடு போகவேண்டிய வள்தானே நீ.

விஜ: ஆமாம். இருந்தாலும் தற் சமயம உன குழந்தையை விட எனககுக் கல்யாணம முக்கியமல்ல.

நளி: விஜயா! எனக்காக நீ வேண்டுமானல் கல்யாணத்தை வெறுக்கலாம். உன் தாய், தந்தையரின் இஷ்டத்தைத் தடுக்க முடியுமா? அவர்கள் ஏறபாடு செய்தால் என்ன செய்வாய்?

விஜ: எதிர்த்துப் போராடுவேன். எவ்வளவு நாளானுலும் ஆகட்டும். எவ்வளவு துன்பம் வந்தாலும வரட்டும். கவலையில்லே, செல்வராஜனை உன்னுடன சேர்த்து வைககும் பொறுப்பு என்னைச் சேர்ந்தது. அது வரை எனககுக் கல்யாணமே தேவையில்லே. இது சத்தியம்.

டாக்: (வந்து கொண்டே) நளினி!

விஜ: வாங்க டாக்டர்.

டாக்: விஜயா, நீ இங்கே வரலாமா?

விஜ: ஏன் வரக்கூடாது?

டாக்: அண்ணியைப் பிடித்திருக்கும் வியாதி உன்னையும் பிடித்துக் கொள்ளுமே?

ரூ. 1000 ரொக்க இனாம்!

நீங்கள் நாடியதெல்லாம் கைகூடும்

எல்லா விதமான பிரயத்தனம் புரிந்து நீங்கள் மனம் சோர்ந்திருந்தாலும் சரி, இந்த மாயாஜால மோதிரத்தை வாங்கி அணிந்து கொள்ளுங்கள். இதை அணிந்தவுடனே நீங்கள் விரும்பிய நபர் ஆணாயிருந்தாலும், பெண்ணாயிருந்தாலும் தக்ஷணமே வசியமாய் விடுவார். அன்னவர் எவ்வளவு கல்லைப் போன்ற மனம் உடையவராய் இருந்தாலும், ஏழு சமுத்திரங்களுக்கு அப்பால் இருந்தாலும், எல்லாத் தடைகளையும் கடந்து வந்து உங்கள் பேச்சைக் கேட்டு நடப்பார். இஷ்டப்பட்டவரை நீங்கள் மணப்பீர்கள். இதனால் மலட்டு ஸ்திரீக்கும் புத்திர சந்தானம் உண்டாகும். இறந்தவர்களின் ஆத்மாவோடு பேசலாம். பூமியில் இருக்கும் புதையல் உங்கள் கனவில் தோன்றும். லாட்டரி, ஆட்டப் பந்தயம், சூதாட்டம், வழக்கு இவற்றில் ஜயம் உண்டாகி வெற்றி பெறுவீர்கள். பரீக்ஷையில் தேறுவீர்கள். வியாபாரத்தில் லாபம் உண்டாகும். துஷ்ட கிரகம் சாந்தம் அடையும். தரித்திரம் தூரமாகும். நல்ல அதிர்ஷ்டம் உண்டாகும். ஜீவிய காலம் சுகமாக-சந்தோஷமாக கழியும்.

மாந்திரீக மோதிரம் விலை ரூ. 1—15—0. ஸ்பெஷல் மோதிரம் ரூ. 3—0—0. ஸ்பெஷல் சக்தி மிகுந்தது ரூ. 3—15—0. மின்சார சக்தியைப்போல் உடனே இது பலன் தரும். இந்த மாய மோதிரம் கிரஹணம் போன்ற சமயங்களில் தயார் செய்யப்படுகிறது. சூரியன் தவறுதலாக மேற்கில் உதித்தாலும், இம் மோதிரத்தின் சக்தி தவற மாட்டாது. அப்படி பலன் இல்லையென்றால் இரட்டிப்பு சார்ஜ் வாபஸுக்குக் காரண்டி. பலனில்லை என்று நிரூபிப்பவருக்கு ரூ. 1000 இனாம்! ஒரு முறை பரீக்ஷித்துப் பாருங்கள். விவரங்களுக்கு எழுதவும். எமது விலாசம:

Principal

The Bengal Mesmerism House (P.P.M.)

JULLUNDUR CITY.

விஜ: அப்படி நினைக்கும் அடி முட்டாள் நானல்ல.

டாக். மத்தியானம் அந்த மாத்திரையைச் சாப்பிட்டாயா?

நளி: இல்லே.

டாக்: ஏன்?

நளி: ஏன் சாப்பிட வேண்டும்? இந்த மாத்திரைகளைச் சாப்பிடுவதால் என் மனக் கவலே தீர்ந்து விடுமா என்ன?

டாக்: நளினி! போனதை நினைத்துப் புலம்புவதால் பயனுண்டா? இனி ஆகவேண்டியதற்கு ஆவன செய்வதுதான். உன் போன்ற அறிவுள்ளவர்க்கு அழகு.

நளி: ஆகவேண்டியது ... நான் சாக வேண்டியதுதான். தாலி கட்டிய கணவனே என்னைத் தள்ளி வைத்துத் தனி மரமாக்கி விட்டார்.

டாக்: அதுவும் நன்மைக்குத் தான். பொதுவாக க்ஷயரோகத்திலிருந்து விடுதலே பெற்றுச் சந்தோஷமாக இருக்க வேண்டுமானுல் கணவனும் மனேவியும் கட்டுப்பாடான முறையில் சேராதிருக்க வேண்டியது முக்கியம். ஆண்களே அவசரப்பட்டாலும் பெண்கள்தான் பிடிவாதமாக இருக்க வேண்டும். இந்த நிலேயில் உன் கணவனே பிரிந்திருப்பது உனக்கு எவ்வளவு நல்லது தெரியுமா? இதனுல் விரைவில் வியாதி குணமாகி விடும். குணப்படுத்த வேண்டிய பொறுப்பு குமாருடையது ...வருந்தாதே.

விஜ: ஆமாம் அண்ணி! டாக்டர் கைவிட மாட்டார்.

நளி: இவ்வளவு தூரம் உதவி செய்யும் உஙகளுக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்?

டாக்: கடமையைச் செய்வதற்குக் கைம்மாறு தேவையில்லேயே. சரி நான் வரட்டுமா? விஜயா! இறக்கை ஒடிந்த பட்சியைப் பக்குவமாக பாது காக்க வேண்டியவள் நீ தான். மறககாதே! வரட்டுமா?

டாக்டர் நேரே சென்றதும் மரகதம் அவரது அன்பையும் பெருந்தன்மையையும் பாராட்டுகிருள். அதே சமயம் மனப் போராட்டத்தி லீடுபடும் பெரியண்ணன் தன் தவறுணர்ந்து நளினி இருக்கும் குடிசைக்குப் போகிருன்.

பெரி: நளினி!

நளி: ஆ ..நீங்களா?

பெரி: நான் தான். இவ்வளவு நாளா உன்னே எப்படியெல்லாமோ இம்சைப்படுத்தி விட்டேன். நீ க்ஷயரோகத்திலுலே சங்கடப் பட்றதுக்கே இந்தச் சண்டாளன் தான் காரணம்.

நளி: நீங்கள் நினைப்பது தவறு. என் விதி வியாதியின் வடிவத்தில் என்னே ஆட்டி வைக்கிறது நான அனுபவிக்கிறேன். இதறகு நீங்கள் என்ன செய்ய முடியும்?

பெரி: ஏன் முடியாது? நான் மட்டும் உன்னே நல்ல விதமா வச்சிருந்தா உனக்கு வியாதி வந்தே இருக்காது அல்லது இவ்வளவு நாளா அவஸதைப் பட வேண்டிய அவசியமும் இருக்காது.

நளி: உம்...அதெல்லாம் பேசி இனி ஆகப் போவது எனன?

பெரி: அப்படியில்லே! இன்னிக்கு உன்னே எங்கியாவது கூட்டிகிட்டுப் போகப் போறேன,

நளி: என்னேயா? அந்தப பாக்கியம் கூட இந்த அபலேககு இருக்கிறதா?

தாங்க முடியாத மனப்பாரத்தால் அழுகிருள் நளினி.

பெரி. அழாதே நளினி! சந்தோஷமா எங்கியாவது போயிட்டு வரலாம் வா!

பெ: சந்தோஷம் எனக்கா? சஞ்சலத்தின் தத்துப்பிள்ளேயான எனக்கா சந்தோஷம்? இல்லே. சாகும் வரையில் இல்லே.

பெரி: இந்தா நளினி! அதெல்லாம மறந்திடு. இன்னிக்கு என்னேட வந்து தான் ஆகணும். தயாராயிரு.

இரவில் தனியாக இருக்கும் போதுதான் பார்த்துக்கொள்ள வேண்டும்.

KOKSHASTRA

(Private)

கொக் சாஸ்திரம்

(இரகசியமானது)

284 படங்களுடன்

விளம்பரத்தினால் சரிவரக் கூற முடியாத விஷயங்கள் அடங்கியுள்ளன.

படிக்கிறவர்கள் நன்றாகவும், தெளிவாகவும் விஷயங்களைப் புரிந்து கொள்வார்கள். பலவித 284 படங்கள் இருப்பதால், மார்க்கெட்டில் எம்முடைய கொக் சாஸ்திரம்தான் வெகு நன்றாக இருக்கிறது எனக் கூறப்படுகிறது.

விலை ரூ. 0—8—0

BED ROOM PHOTOS

படுக்கை அறைப் படங்கள்

உங்களுக்கு படுக்கை அறை காட்சிகளையும் அழகு, வேறு உற்சாகமளிக்கும் காரியங்களையும் தெரிந்துகொள்ள விருப்பமிருந்தால் இன்றே 60 படங்கள் கொண்ட ஒரு ஸெட்டுக்கு ரூ. 1-4-0 அனுப்பிப் பெற்றுக் கொள்ளுங்கள். 25 படங்கள் கொண்ட சாம்பிள் ஸெட்டின் விலை அணு 0-12-0.

கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்திலேயே (இங்கிலீஷில்) இருக்க வேண்டும்.

French Photo Supply Co.,

(P. . M) Jullundur City.

காட்சி 9

சிகாமணியின் சூழ்ச்சி நிறைவேற உஷா நளினிக்கு உடல் நிலை மோசமாக இருப்பதாக விஜயா அழைப்பது போல் அழைக்க, டாக்டர் நளினியைக் காப்பாற்ற ஓடுகிறார். இதற்கிடையே குழந்தையின் அழுகுரல் கேட்டு வீட்டுக்கு ஓடிய நளினியைப் பார்வதி விரட்டிவிட, மனம் நொந்த நளினி கதறிக் கொண்டிருக்கிறாள். சதி திட்டப்படி அங்கே பெரியண்ணனுடன் வருகிறான் சிகாமணி.

டாக்: *ஆ... நளினி என்ன நடக்தது? எழுந்திரு... ச்... ச்... அட தெய்வமே!*

சிகா: *பேஷ், பேஷ்! அங்கே பாத்தியா?*

பெரி: *யாரு...? டாக்டரும் நளினியுமா?*

சிகா: *இல்லே, காதலனும் காதலியும்!*

டாக்: *ஆ...! சிகாமணி, என்ன உளறுகிறாய்?*

சிகா: *மாப்பிளே! இப்ப புரியுதா நீ சாயந்திரம் கூப்பிட்டியே, வந்தாளா? எப்படி வருவா? தினசரி இப்படி நடக்குதே!*

பெரி: *ஆ... உம்... ஏய்யா நீ ஒரு மனுஷனா? இப்படி எத்தனை குடும்பததைக் கெடுததிருக்கே!*

டாக்: *என்ன?*

நளி: *அய்யய்யோ!*

டாக்: *பெரியண்ணன்! அநாவசியமாகப் பேச வேண்டாம். சொந்த புத்தியோடு பேசுங்கள்.*

கண்ணுசாமி அப்போது அங்கே வருகிறார்.

கண்: *டேய்... சாதாரணமா, என்னடா இது கலாட்டா?*

பெரி: *கலாட்டாவா? கணாவி! நீங்கமட்டும் நேர்லே பாத்திருந்தா இந்நேரம் தூக்கு மாட்டிக்கிட்டிருப்பீங்க... டாக்டர்! என்னையா முழிக்கிறே. உங்க காதல் விளையாட்டு அம்பலமாயிடுத்தேன்னு பாக்கிறியா?*

கண்: என்னது? காதல் விளை யாட்டா?

பெரி: பின்னே என்ன? குடிசை யிலே இருக்கிறவளுக்கு இங்கே என்ன வேலே? அதுவும் யாரும் இல் லாத நேரத்திலே? உம்...இவன் எதுக்கு இங்கே வந்தான்?

கண்: உம்...ஏம்மா! எதுக்காக இங்கே வந்தே?

பெரி: என்னடி தயங்கறே? எல்லாம் முன்னேற்பாடா?

சிகா: மாப்பிளே! நானும் ரொம்ப நாளா மறைச்சி வந்திருக்தேன். இந்தச் சந்தர்ப்பத்திலேகூட சொல் லல்லேன்னு அப்புறம் உனக்கும் எனக்கும் மனசு கஷ்டம்தான் வரும்.

பெரி: ஆ...என்ன விஷயம்?

சிகா: இன்னும் புரியலியா? இதி லிருந்தாவது தெரிஞ்சிக்க. குழந்தை உனக்குப் பிறந்தது இல்லே. சந்தேக மில்லாமெ டாக்டருக்குப் பொறந்தது தான்!

கண்: அட. சும்மா ருடா, நீ வேறே! எரியற கொள்ளியிலே எண்ணெயை வாத்துக்கிட்டு...கொஞ் சங்கூட யோசிக்காமெ இப்படிச் சொல்லிட்டியே!

பெரி: இன்னும் என்ன யோசிக் கிறது. இவுங்க காதல் நாடகத்தெ கண்ணெதிரில் பாத்துக் கூடவா சந்தேகம்?

நளி: ஐயையோ...மாமா... இதை நம்பாதீர்கள்...என்ன நடந்ததென்று.

பெரி: எல்லாம் எனக்குத் தெரி யுண்டி விபசாரி!

நளி: ஆ...விபசாரி! நானு? ஒரு பாவமும் அறியாத எனக்கா இந்தப் பட்டம்?

பெரி: போதும் நிறுத்துடி. இந் தப் பாசாங்கெல்லாம் இனிமே நடக் காது. அப்பா...சாவிகுடுங்க.

கண்ணுசாமி சாவியைக் கொடுத் ததும் பெரியண்ணன் சென்று சில நோட்டுக் கத்தைகளைக் கொண்டு வந்து நளினியின் மேல் விசி யெறி கிருன்.

(அடுத்த இதழில் முடியும்)

ரூ. 3-க்கு கடிகாரம்



ரூ. 3க்கு உங்களுக்கு ஒரு கடிகாரம் கிடைக்கும். அழ கும் உறுதியும் 10 வருஷம் உத்திரவாதம்.

Johnson Watch Import Co., (P.P.M.)
Jullundur City

ரூ. 5க்கு ஒரு ரேடியோ

மின்சாரமோ, பேட்டரியோ இல்லா மலேயே தெளிவான ஒலியைக் கேட்கலாம். ரூ 5க்கு இது உங்க ளுடையதாகலாம் பிரபலப்படுத்து வதற்காக இச்சலுகை அளிக்கப் படுகிறது.

ஏமாறுமலிருக்க இன்றே எழுதுங்கள்

ஏனெனில் குறைந்த சரக்குகளே இருக்கின்றன.

AMERICAN TRAD NG CO.,
Radio House (P·P M.)
JULLUNDUR CITY

அமெரிக்காவிலே இந்திய சினிமா கோஷ்டி

எம். ஜி. எம், ஸ்டுடியோவில் நடிகர் வால்டர் பிட்கியாவுடன் ராஜ்கபூர், நர்கிஸ் உரையாடுகின்றனர்,

செப்டம்பர் மாதம் 12-ம் தேதியன்று டெல்லியிலிருந்து ஒரு சினிமா கோஷ்டி அமெரிக்காவுக்குப் பறந்து சென்றது. இந்தக் கோஷ்டியில் தென்னிந்தியாவின் சார்பில் டைரக்டர் கே சுப்ரமண்யம், நடிகை சூர்யகுமாரி இருவரும் சென்றிருந்தனர். அமெரிக்காவில் இவர்கள் சுமார் ஒரு மாத காலம் சுற்றுப் பிரயாணம்

எம். ஜி. எம்.மில் ஜீன ஸிம்மன்ஸிடம், வடஇந்திய நடிகர் டேவிட் ஏதோ தமாஷ் செய்கிறார் ஸிம்மன்ஸுக்குப் பக்கத்தில் இருப்பது நடிகர் ஸ்டீவர்ட் கிரேஞ்சர்.

செய்து விட்டுத் திரும்பியிருக்கின்றனர். ஹாலிவுட்டின பரபல ஸ்டுடியோக்கள், டெலிவிஷன் நிலையங்கள், மறறும் பல இடங்களுக்கும் தூது கோஷ்டி விஜயம் செய்தது. சென்ற மாதம் 24-ம் தேதியன்று சென்னை திரும்பிய டைரக்டர் கே. சுப்பிரமணியம், சூர்யகுமாரி இருவருக்கும் பிலிம் வர்த்தக சபை ஒரு தேநீர் விருந்தளித்து கௌரவித்தது. அமெரிக்காவில் இந்தியப் படங்களுக்கு நல்ல மார்க்கட் ஏற்பட வழியிருக்கிறதென்றும், அமெரிக்க இந்திய கூட்டுறவில் படங்கள் தயாரிக்க சிலர் அங்கிருந்து வரப்போவதாகவும், மறறும் அங்குள்ள ஸ்டுடியோக்களின் அமைப்பு, படப்பிடிப்பு தன்மை, முதலியவற்றை இருவரும் சொன்னார்கள்.



எம்.ஜி.எம். ஸ்டுடியோவில் சூர்யகுமாரி, நடிகை ஜீன் ஸிம்மன்ஸிடம் கையெழுத்து வாங்குகிறார்.

ஆர். ஸி. ஏ.யின உதவி தலைவரும், ஆர். ஸி. ஏ. சர்வதேச பகுதியின் நிர்வாக டைரக்டருமான மீட் புருனட் தூதுகோஷ்டிக்கு விருந்தளித்தார்.

ஸ்டூடியோ

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

படப்பிடிப்பு ஆரம்பமாகு முன் போடப்படும் 'ஸைலன்ஸ்!' என்பதுதான் அது என்பதைச் சொல்லி வைக்கிறேன். இந்த சட்டத்திறகு நானே, நண்பரோ கட்டுப்பட்டு 'கிண்டல்' வேலைகளை மூட்டை கட்டாமலிருக்க முடியுமா?

இனி அங்கு நடந்தவற்றைக் கவனிக்கலாம். அந்த செந்தாமரைத் தடாகம் ஒரு அழகிய பூங்காவில் அமைந்திருந்தது. பூத்துக் குலுங்கி, இனிய சுகம் தரும் பல்வேறு நறுமணம் வீசி உடலைப் புல்லரிக்கச் செய்து, புளகாங்கிதம் கொள்ளச் செயத அந்த நந்தவனத்தில் பசும் புல் தரை பச்சைக் கம்பளம் விரித்தாற் போல் கீழே படர்ந்திருந்தது. அந்த மரகதப் பச்சையின் ஊடே பவள நிறம் கொண்ட கெம்புக் கற்களை இழைத்தாபோல், செம்மண் பாதை யொன்று தடாகத்தின் ஓரமாகச் சென்று கொணடிருந்தது.

இன்பமாகப் பொழுதைப் போக்க இளம் காதலர்களுக்கு ஏற்ற இடம் என்று நான் மனதில் நினைத்துக் கொண்டிருந்த போதே ஒரு பருவ மங்கையின் வருகை என் கண்ணில் பட்டது. அவளுக்குப் பின்னால் சிறிது தூரத்தில் ஒரு யுவன் வந்து கொண்டிருந்தான். தனித்திருக்கும் ஏகாந்தமான இடத்திற்கு ஒரு காளையும், கட்டழகியும் வந்தார்களென்றால் அவர்கள் காதலர்களாக அன்றி வேறு எப்படி இருக்க முடியும்?

முன்னே ஓடிவந்த அந்த மங்கை, திடுதிடுமென்று செம்மண் பாதையின் வழியே ஓடி வந்து, ஒரு பூச்செடிக்குப் பின்னால் மறைந்து கொண்டாள்.

காதலியைப் பின் தொடர்ந்து வந்த அந்த வாலிபன், கண்ணெதிரே பறந்து கிடந்த பூங்காவில் தன் இதயத் துடிப்பைக் காணுததால் அச்சம் கொள்கிருன்.

"சாந்தினி! சாந்தினி!!" என்று கூவிக்கொண்டே ஒவ்வொரு செடியின் மலரையும், கிளையையும், வேலரயும் ஊடுருவிப் பார்க்கிருன்.

ஆஹா! சற்று முன் அவனிடம் காணப்பட்ட மருண்ட பார்வை மாறிப்போய் எப்படி மகிழ்ச்சி குடிகொண்டிருக்கிறது! அதற்குக் காரணம் அவனது காதலி மறைந்து கொண்டிருந்த பூஞ்செடி அவளைக் காட்டிக்கொடுத்து விட்டது. இதைத் கண்டு கொண்ட காதலன் அடிமேல் அடி வைத்து அவளிருப்பிடத்திறகு வந்து, மெள்ள அவள் கூந்தலைப் பிடித்திழுத்தான. தனது திருட்டுத்தனம் வெளிப்பட்டுவிட்டது கண்டு வெட்கித் தலை குனிந்தவாறே 'களுக்'கென்று சிரித்து விட்டு காதலனை கடைக் கண்ணால் பார்த்தாள் அந்தக் கன்னி. அவளது குறும்புத்தனததைக் கண்டு வியநத அவனும் அவளை மெல்ல அணைத்துக் கொண்டான.

"ஸ்வாமி!..." என்று பரவசத்தடன் மெள்ள அழைத்தாள் அவள். அவன் மெல்ல அவளது கூந்தலை வருடிக் கொடுத்தான.

"இயற்கை தேவியின் தெய்வீக சகதியில் பூரித்து நிற்கும் இந்த புஷ்பங்கள் எவ்வளவு அழகாயிருக்கின்றன" காதலி காதலனின் பரந்த மார்பில் சாய்ந்து கொண்டே மெல்ல உச்சரித்தாள இவ்வார்த்தைகளை.

அவளது காதலன் "நீ இயற்கை தேவியைப் டகழகிருய். நான் என் இதயப் பூங்காவில் வீற்றிருக்கும் உன்னைப் பார்க்கிறேன்" என்று சொல்லிக் கொண்டு அவள் முகவாய்க்கட்டையைப் பிடித்துச் செல்லமாகத் தட்டிக்கொடுத்தான்.

மனமொத்த இருகாதலர்கள் மனம் விட்டுப்பேசி, மலா வனத்தில் இவ்வாறு மகிழ்ந்திருக்கும போதுதான், மதமதவென்று அங்கே ஓடிவந்தனர் சிலர். பார்க்கும் போதே அவர்கள கள்ளர்கள் என்பது தெரிந்துவிட்டது.

திமுதிமுவென்று ஓடிவந்த அவர்கள் நேரே அந்த மங்கையிடம் சென்று நகைகளைக் கழற்றிக் கொடுக்கும்படிக் கேட்டனர். உதவிக்கு வராத வகையில் அவளது காதலனைத் தடுத்து நிறுத்தினர்.

அந்த மங்கை தைரியசாலி. கள்ளர்களை அமைதியாக இருக்கும்படிச்

சொல்லிவிட்டு, நகைகளை ஒவ்வொன்றாக அவர்களிடம் கழற்றிக் கொடுத்தாள். பின்னர் அவர்களிடம் இனி திருட்டுத் தொழிலை நடத்த வேண்டாம் என்றும், தான் கொடுக்கும் நகைகளை விற்று கண்ணியமான முறையில் தொழில் நடத்திப் பிழைக்கும்படியும், திருடுவது கேவலமானது என்றும் சொல்லுகிறாள். அவளது இதமான வார்த்தைகளினால் புத்தி திருந்திய அவர்கள் அம்மங்கையிடமே நகைகளைத் திருப்பிக் கொடுத்துவிட்டு, மன்னிப்பும் கோரி சென்று விடுகின்றனர்.

இந்தக் காட்சியின் ஆரம்பத்தில் அந்த இளம் காதலர்களைக் கண்டு எவ்வளவு மனம் மகிழ்ந்தேனோ, அதற்கு நேர்மாறாக அவர்கள் கொள்ளைக்காரர்களிடம் அகப்பட்டுத் தவித்தபோது மனம் புழுங்கினேன். 'இந்தக் காமிராவை தூக்கி எறிந்து விட்டு அவர்களை ஏன் காப்பாற்றக் கூடாது? என்று நினைத்தபோதுதான் "ஓகே! பிரமாதம்! கட்! கட்!" என்ற டைரக்டரின் வார்த்தைகள் எனக்கு இது ஒரு படப்பிடிப்பு என்பதை மீண்டும் நினைவுறுத்தின.

ஏவி. எம். ஸ்டுடியோவில் தயாராகி வரும் 'சோதனை' தமிழ்ப் படத்திற்காக இந்தச் சிறு காட்சி படமாக்கப்பட்டு வந்தது.

சாந்தினியாக இதில் பண்டரிபாய் நடித்து வருகிறார். நீண்ட நாட்களுக்குப் பின் தமிழ் ரஸிகர்கள் ஹொன்னப்ப பாகவதரை இதில சந்திக்கப் போகிறார்கள். சாந்தினியின் காதலன சத்தியசீலனாக இதில் அவர் நடித்து வருகிறார். ஸின்ஹா டைரக்ட் செயது வரும் இந்தப் படம் ஏவி. எம். குப்பி புரொடக்ஷன்ஸ் கூட்டுத் தயாரிப்பாகும். படம் அறுபது சதத்திற்கு வளர்ந்திருப்பதாக ஏவி எம் கதை இலாக்காவைச் சேர்ந்த பி. டி. சம்பந்தம் தெரிவித்தார். 'வாழ்க்கை'யில் சினியாக வந்த நடிகரை உங்களுக்கு நினைவிருக்கிறதா? சாக்ஷாத் அதே நடிகர் சினிதான் இந்த சமபந்தமும்.

நியூடோனில் 'சந்தேஹி' படப் பிடிப்புக்கு விஜயம் செய்திருந்த நமது ஆசிரியர் டி. வி. ராமநாத் அவர்களுடன் அளவளாவுகிறார் டைரகடர் எப. நாகூர்



'சந்தேஹி' நடிகர்கள்

கன்னடம், தமிழ் இரு பாஷைகளிலும் இப்படம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

* * *

சினிமா உலகம் வெகு முன்னேற்றமடைந்தது; மாயாஜால உலகம் என்றெல்லாம் சொல்கிறார்கள். இவர்கள் கூற்றில் உண்மையில்லாமலில்லை. ஆனால் என்னைக் கேட்டால் இவைகளுடன் 'படவுலகம் ஒரு தலை கீழ் உலகம்' என்பதையும் சேர்த்துக் கொள்ளலாம் என்று சொல்லுவேன். 'ஏன் உலகமே தலைகீழாகத்தானே நடக்கிறது' என்று கூறும் சில கர்நாடக குதர்க்கப் பேர்வழிகளின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நான் இதைச் சொல்லவில்லை. நான் சொல்ல வந்ததை சொல்லி விட்டால் நீங்களும் இதை ஒப்புக்கொண்டு தான் தீருவீர்கள். இதற்கு வேறு 'அப்பீலே' கிடையாது என்பதும் எனக்குத் தெரியும்!

சினிமா பார்க்கிறீர்கள். முதன் முதலில் அதன் தயாரிப்பில் பங்கெடுத்துக் கொண்ட கலை வல்லுநர்கள், நடிகர்கள் ஆகியோரின் விவரங்கள் தெரிவிக்கப்படுகின்றன. பின்னர் கதை ஆரம்பமாகும். காதலர் இருவர் சேருவார்கள். பிரிவார்கள். பலவாறு அல்லல் படுவார்கள். முடிவிலே ஒன்று சேருவார்கள்; அல்லது செத்து மடிவார்கள்!

இந்த கதைப் போக்கிலே முதலில் எந்தக் கட்டம் தெரியுமா படமாக்கப்பட்டிருக்கும்? அதன் இடைப் பாகமோ அல்லது இறுதிக் கட்டமோதான். நாம் பார்க்கும் தொடர்ச்சியில் படமாக்கப்படுவது என்பது சாத்தியமாகாது. ஏன் இந்தப் படப்பிடிப்பு எல்லாம் முடிந்த பின்னரே நாம் படத்தின் முதலில் பார்க்கும் நடிகர்கள் பட்டியல் முதலியவை ஒளிப்பதிவு செய்யப்படுகின்றன. ஆகவே இறுதியில ஆரம்பத்தை சுடுவது என்பது படவுலகின் பழமொழியாக இருக்கும்போது இதை 'தலைகீழ் உலகம்' என்று சொல்லுவதிலும் தவறு இருக்கிறதா? என் அப்பீலுக்குத்தான் மறுப்பே இருக்காது என்று முன்பே சொல்லியிருக்கிறேனே!

இந்த 'ராமாயண விளக்கத்திற்கும்' நான் அடுத்து சொல்ல விருக்கும் விஷயத்திற்கும் எவ்வளவு நெருங்கிய சம்பந்த முண்டோ, அவ்வளவு புதுமையும் இருக்கிறது. புதுமையென்றால் காமிரா இல்லாமலோ, கச்சா பிலிம் இல்லாமலோ இக்காட்சியைத் திணித்து விட்டார்கள் என்று நினைக்காதீர்கள். நான் சொல்லப் போகும் இந்தக் காட்சியைப் படித்து முடித்ததும் 'ஆகா! இதை நான் அப்போதே படத்திலும் பார்த்து விட்டேனே!' என்று அகமகிழ்வீர்கள். ஆமாம்; நான் சொல்லப் போகும் இந்தக் காட்சி வெளிவந்து தற்போது ஓடிக்கொண்டிருக்கும் பராசக்தி படத்திலிருந்தாகும்.

படத்தின் முற்பகுதியில் குசல குமாரி நடனமாடுகிருளே அந்தக் காட்சிதான் நான் ஏவி.எம். சென்றிருந்தபோது இறுதியாகச் சுடப்பட்டு வந்தது. படத்தின் முற்பகுதியில் வருவது இறுதியாகச் சுடப்பட்ட இக் காட்சியும் ஒரு தலைகீழ் விஷயம் தானே!

அன்றையதினம் குசலகுமாரியோடு பிரபல எஸ். பி. எல் தனலக்ஷ்மி. டி. எஸ். தமயந்தி முதலிய நக்ஷத்திரங்களும் வந்திருந்தனர். ஒரு இளம் நக்ஷத்திரத்தைப் பார்க்கப்போன இடத்தில 'மாஜி பிரபல' நக்ஷத்திரங்களைக் கண்ட என் காமிரா கண்ணை மூடிக்கொண்டிருக்குமா என்ன? அதன் கண்களை திறந்து மூடியதன் பலன்தான் இந்தப் பகுதியில் காணும் புகைப்படங்கள். ஹீராலால் இந்த நடனத்தை நல்ல முறையில் அமைத்துக் கொடுத்திருக்கிரு.

கிருஷ்ணன்–பஞ்சு டைரக்ஷனில் உருவாகி வரும் இந்தப்படத்தில் குசலாவின் நடனம் ஒரு அரங்க மேடையில் நடைபெறுவதாகக் காட்டப் படுகிறது. பச்சிளம் மரங்கள் தழைத்து வளர்ந்துள்ள பரந்த நில வெளியானது பின்னணியாகத் திகழ அதிலே ஆனந்த நடனமாடினுர் குசலா. இதன் பின்னணிப்பாட்டும் இனிமையாக இல்லையா?

டைரக்டர் கிருஷ்ணன்–பஞ்சுவின் கருத்து மிக்க டைரக்ஷனில், புதுமுகம் கணேசனது கச்சிதமான நடிப்புடன். நேஷனல் பிக்சர்ஸாரின் இந்தக் கன்னி முயற்சி உருவாகி வெளிவந்திருக்கிறது. இவர்களது அடுத்த தயாரிப்பு நாடக மேடையில் பிரபலமடைந்த ரத்தக் கண்ணீர் என்பதாம். எம். ஆர். ராதா இப்படத்தின் பிரதான நடிகர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

* * *

ரேவதியில் ஒரு 'டீ பார்டி' நடக்கிறது என்று பேச்சுவாக்கில் காற்றில் மிதந்து என்னிடம் வந்தது ஒரு செய்தி. இதைக் கேட்டதும் என் காமிரா துள்ளி குதித்தது. இந்த மாதிரி ஏதேனும் ஸ்டுடியோக்களில் விருந்து என்ருல் என்னை விட என் காமிராவுக்குத்தான் கனகுஷி. காரணம் என்ன தெரியுமோ?—விருந்து ஸ்டுடியோவில் நடைபெறுவதால பல நடிக நக்ஷத்திரங்கள் வருவார்கள். 'கலர் புல்லான' அந்தக் காட்சியை அப்படியே பிடித்துப் போட்டுக் கொள்ளலாம் என்பதுதான். "அட சரிதான் போமய்யா! விஷயத்தைக் கேட்டு, வயிற்றைத் தடவிப் பார்த்துக்கொண்டு நீர் குதித்த குதிப்பில் காமிரா குலுங்கியதற்கு வெகு சாமர்த்தியமாக— பகுத்தறிவற்ற — உயிரற்ற அந்த அப்பாவி காமிராவின் மீது பழியைப் போடுகிறீரே!' என்று குறும்பு பிடித்த நேயரொருவர் கேட்கிரு. நான் கேட்கிறேன், 'காமிரா குலுங்கிய குலுப்பில் என்னையும் ஏன் அது குதிக்கச் செய்திருக்கக்கூடாது?' நான என்ருல் நானே அல்ல; என் கற்பனை!

காமிரா விழுந்தடித்துக் கொண்டு ரேவதி ஸ்டுடியோவை நோக்கி ஓட அதனுடன் பிணைந்திருந்த நானும் கூடச் செல்ல ஒருவாறு அங்கு போய்ச் சேர்ந்தோம.

ஒரு அழகிய சின்னஞ்சிறு மேஜை. அதன மீது புஷ்பங்கள் செருகி

(98-ம் பக்கம் பார்க்க)

'சந்தேஹி'யில் நடிக்க வந்த டி. எஸ் துரைராஜ். சகரபாணி ஆகியோருடன் ஓம் பிலிம்ஸாரும் என் காமிராவில் அகப்பட்டனர்.

உங்கள் வீட்டைத்
தியேட்டராக்கலாம்

உங்கள் அபிமான நக்ஷத்திரங்களின் ஆடல் பாடல்களை வீட்டிலேயே கண்டு களிக்கலாம். எஃகினால் செய்யப் பட்ட இந்த புரொஜக்டரில் டார்ச் அல்லது மின்சார விளக்கை உபயோகிக்கலாம்.

விலை ரூ. 12-8-0 (ஒரு பிலிம் சுருணையுடன்)

அதிகப்படி பிலிம் கெஜம் 0-8-0. தபால் செலவு ரூ.2-8-0 தனி

American Trading Co., (P. P. M. 2)

JULLUNDURCITY

இனாம் ! இனாம் !! இனாம் !!!



எமது நெ. 501 கருப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லா விதமான ரோமமும் மைக் கருப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கருப்பாக வளரும். இது மயிர்கள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாகவும் வளரச் செய்கிறது.

புட்டி ஒன்றின் விலை ரூ. 1—15—0.

3 புட்டிகள் (பூரா முறை) ரூ. 5—0—0

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்ட் வாட்சும், மோதிரமும் (நியூகோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும், உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்திரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூகோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

AMRIT PHARMACY (P.P.M.)

Jullundur City.



ரஷ்யாவிலிருந்து வந்த உணவு தூது கோஷ்டிக்கு நாடகக் கழகம் சென்ற மாதம் 5-ம் தேதியன்று மியூசியம் தியேட்டரில் ஒரு வரவேற்பளித்தது. அது சமயம் என். எஸ். கிருஷ்ணன் 'ஐம்பதும் அறுபதும்' நாடகத்திலிருந்து ஒரு பகுதியையும், 'ஒளவையா'ரிலிருந்து ஒரு கட்டத்தை டி. கே. ஷண்முகமும், எஸ். டி. சுந்தரம் 'கனவான்களின் தீர்மானம்' என்றொரு பகுதியையும் நடித்துக் காண்பித்தனர்.

வைக்கப்பட்டிருந்த நாகரீகம் என்ற பெயரில் பல வன்வு. கோனல்களில் உருவாக்கப்பட்ட கண்ணடி கூஜா. ஆஹா! அந்தத் தட்டுகளில் தான என்ன. 'ஏ ஒன!' வயிறறுக்கு விருந் தான வஸ்துக்களாயிறறே!

எனக்கு அதைப் பார்ககப் பார்க்க நாக்கில் ஜலம் சொட்டியது. ஆனால் என் காமிராவின் கண்களிலோ கணணீர் சிந்திக கொணடிருந்தது. 'இன்னும் எந்த நக்ஷத்திரமும் வர வில்லையே நமது விஜயம இன்று வியர்த்தம் தானா?' என்ற கவலை அதற்கு. பாவம்!

சில நிமிஷங்கள் சென்றதும் மனோஹர் வந்தார். ஆசாமி, ஹாட்டும், கோட்டும், டையுமாக அசல் 'ஆங்கில மாடலில்' வந்தார். அவரைத் தொடர்ந்து அவரது உடை யமைப்பில் சற்றும் சளைக்காமல்–ஒரு பேர்வழி வந்தார். வந்த ஆசாமியை என்னால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. ஆசாமியைப் பற்றி பின்னர் விசாரித்துக் கொளள லாம் எனறெண்ணி அங்கேயே நின்று கொணடு நடப்பதைப் பார்த் கொண்டிருந்தேன்.

சில வினாடிகள் சென்றதும் கிரிஜா வந்தார். அவர் வந்து அரை மணிக்கு மேலாகியும எந்த நக்ஷத்திரமும் வர வில்லை. இந்த சமயத்தைப் பயன் படுத்திக்கொணடு மனோஹருக்கு அடுத்தபடியாக வந்த புது மனிதரைப் பற்றித் தெரிநது கொள்ளலாம் என் றெண்ணி, அருகில் யாரேனும் இருக் கிறார்களா என்று பார்த்தேன். எனக் குப் பரிச்சயமான முகம் ஒன்று சட் டென்று தோற்றமளித்தது. தயாரிப் பாளர் ராஜகோபால்தான் அவர்.

"வணக்கம் சார்!" என்றேன்.

"நமஸ்காரம். வாருங்க!" என்றார் அவர்.

"ஆமாம், இந்த டீ பார்டிக்கு வந் திருக்கிறாரே, அந்தப் புது ஆசாமி. யார் ஸார்!" என்றேன் 'புதுமுகம் பாலசந்தர்' என்று சொல்லி விட்டு "டீ பார்டியா? அப்படி யார் சொன்னது?" என்றார் அவர். "கேள்விப்பட்டேன்" என்றேன் நான்.

"அட நாராயணா! ஏனய்யா பட வுலகில் டீ பார்டி என்றால் உங்களுக் குத்தான் அழைப்பு வராமல் இருக் குமா அல்லது தெரியாமல நடக்குமா? இது எங்கள் 'மாமியார்' படத்திற் காக வரும் 'லஞ்ச்' கட்டம் சார். சொன்ன ஆசாமி உங்களுக்கு விஷ யததைச் சரியாகச் சொல்லியிருக்க கூடாதா?" என்றார்.

"ஓஹோ! மாமியார் படத்திற்கா? என்னடா எணணி மூன்று நக்ஷத் திரங்களுககு மேல் இந்தப் பார்டிக்கு வரவில்லையே என்று நினைத் துக்கொண்டிருந்தேன். விஷயம் இப் போதுதான் புரிந்தது!" என்று என் காமிரா மனதுக்குள்ளேயே முணுமுணுத்துக்கொண்டது. இருந் தும் சும்மா விடவில்லை. "எந்தப் படததில் வந்தால் என்ன. இதுவும் ஒரு பார்டி தானே?" எனறு பதிலுக் குச் சமாதானம் சொல்லிக்கொணடே இந்தக் காட்சியைப் பிடித்துப் போட்டுக்கொண்டு விட்டது. பொல்லாத காமிராய்யா அது!

நானும், கஜானனா புரொடக்ஷன்ஸ் ராஜகோபாலும் பேசிக் கொண் டிருந்தபோதே முண்டாசும் தானுமாக வந்தார் டைரக்டர் வேமபு. 'மாமியார் படத்தை டைரக்ட் செய்வ தோடு அதில் நடிக்கவும் செய்கிறாரா என்ன?' எனறு நான் மனதில் எண்ணிக் கொணடிருந்த போதே "வாங்க ஸார்! இன்றைக்கு மாமியா ரில் மனோஹர், பாலசந்திரன், கிரிஜா மூணுபேரும் நடிக்கும் காட்சி சுடப் பட விருக்கிறது" எனறு சொல்லிக் கொண்டே அருகில் வந்தார்.

பின்னர் விஷயம் தெரியவந்தது. டைரக்டர் வேம்பு ஒரு 'ஜாலி' மனு ஷர். 'ஸெட்'டில் ஒரு குஷிப் பேர்வழி யாகத் திகழ்வார். ஆகவே தமாஷுக் காக முண்டாசு கட்டிக் கொண்டு வந்தார் அவர். ஆனால அந்த முண் டாசை விரைவிலேயே அகற்றி விட் டார். அப்பொழுதுதான எனக் கிருந்த மறறொரு சந்தேகமும் நிவர்த்தி யாயிறறு. ஆசாமி திருப்பதி, பழனி இப்படி எங்கேனும் சென்று பிரார்த் தனை செய்து முடி இறக்கிவிட்டு வந் திருக்கிறாரோ என்ற சநதேகம்தான் அது. ஆனால் "ஏ' ஒன கிராப்புடன காட்சியளித்தார் வேம்பு.

பின்னர் நடக்கப் போகும் காட்சி விவரத்தைப்பற்றி ராஜகோபாலிடம் விசாரித்தேன்.

கோபாலனின் (பாலசந்திரன) மூத்த சகோதரன் சங்கர் (பனேஹர்). சுசிலா (கிரிஜா) கோபாலனது மனைவி, மேல் நாட்டு நாகரீக மோகதததிறகு அடிமைப்பட்டவள்.

கோபாலனும் சுசீலாவும் சேர்ந்து சங்கருக்கு ஒரு விருந்தளிக்கின்றனர். சங்கரும் விருந்துக்கு வருகிறன்.

'சந்தேஹி' படப்பிடிப்பின்போது

ஹிந்து பழக்க வழக்கங்களுக்கு மாருக ஸபோர்க்குகள். கத்தி, ஸ்பூன முதலிய மேல்நாட்டு உபகரணங்கள் உணவை எடுத்து உட்கொளள மேஜைமீது பரப்பப் பட்டிருப்பது கண்டதும் சங்கருக்கு ஆத்திரமாக வருகிறது. "இந்த 'ஸ்பூனும், 'ஸபோர்க்'கும் எதற்கப்பா? நமக்கு எதறகு இந்த மேல்நாட்டு சாமான்கள்?" என்று கேடகிருன்.

"இதுதான எங்கள் பழக்கம். இப்படிச் சாப்பிடுவதால் 'நீட்'டாகவும், 'கிளீ'னகவும் இருக்கும்" என்று பதில் கொடுக்கிருள் சுசீலா.

"அது சரி நம்ப அப்பா, அம்மா எல்லாம் சௌக்கியமா இருக்காங்களா?" என்று சகோதரனிடம் கேட்ட சங்கர், அவனது விபரீதமான பதில் கேட்டு கதிகலங்கி நிலைகுலைந்து விடுகிருன்.

"அதெல்லாம் இப்போது ஏதுக்கப்பா'?" என்று பட்டும், படாததுமாக வெறுப்பும், விரக்தியும் குரலில் தொனிக்க கோபால் சொன்ன பதில் சங்கரின் மனதில் சூருவளியைக் கிளப்பி விடுகிறது. அதே சமயம் அவனது உள்ளமும் தன் சகோதரன் அவனது மனைவி இருவரிடமும் சிறீ விழச் செய்கிறது.

விருந்தின் மத்தியிலேயே எழுந்து போய் விடுகிருன் சங்கர்.

"சகோதரனது உபதேசங்களினல் தன் தவறை அறிந்த கோபால அவனிடம் மனனிப்பு கேட்கிருன. சுசீலாவும் சென்றதை மறந்து விடும்படி கேட்டுக் கொள்கிருள்.

மாமியார் படத்தில் இந்தக் கட்டம் ஒரு 'டர்னிங் பாயிண்ட்' (கதைத் திருப்பம்).

* * *

"நம்ம ராமச்சந்திரனுடைய மொத்த பணமும் பறிபோய் விடுகிறது ஸார். எல்லாம் காதல் செய்யற வேலை!" என்றுர் அவர்.

"என்ன காதலா? கொஞ்சம் புரியும்படியாகத்தான் விஷயத்தைச் சொல்லுங்கள் ஐயா" என்றேன அவரிடம்.

'ராமச்சந்திரனை ஒரு பட்டிணத்து நாகரீக மங்கை வலை வீசி சிக்க வைத்து விட்டாள். அவளுடன் வந்த ஆசாமிகள் அசகாய சூரன்கள். ராமச்சந்திரன் ஆதியோடந்தமாகச்

N52 N4-11
N52-11.3

சேர்த்து வந்த ஆஸ்தியை அப்படியே அபகரிக்க திட்டம் போட்டு விட்டார்கள்.''

''முடிவிலே அவன் காதலியே அதை மீட்டுத்தந்து விடுகிறாள்.'' என்றுகூறி கடகடவென சிரித்தார் அந்த மனுஷன்.

''என்னயயா, காதலித்ததனால் பணம் பறிபோக இருந்தது என்று சொன்னீர்கள். பின்னர் காதலியே அதை தடுத்து நிறுத்தினாள் என்றும் சொல்கிறீர்' உங்கள் சிந்தனையை ஒரே முனையில் நிறுத்தி பதில் சொல்லுங்கள்'' என்றேன் சற்று படபடப்புடன்.

அவர் மீண்டும் கடகடவென்று சிரித்துத் தள்ளினார். பிறகு என்னிடம்' 'ராமச்சந்திரன் நாகரீக மங்கையை காதலித்தது போலவே. ஒரு பட்டிக்காட்டுப பெண் ராமச்சந்திரனைக் காதலித்து வருகிறாள். அவள்தான் பணம் பறிபோகாமல் காப்பாற்றியது. ஆகவே காதல் தானே அதையும் காப்பாற்றியது? நான் ஒரு முனையில் நின்றுதானே பதில் சொல்லியிருக்கிறேன்'' என்று சொல்லிவிட்டு மீணடும் 'கொல்' லென்று சிரித்துக் கொட்டினார்.

நேயர்களை திக்கு தெரியாத காட்டில் கண்கட்டி விட்டதுபோல் நானும் அந்த பொல்லாத மனுஷரும் பேசிக்கொண்டு வந்த விஷயம் இருந்திருக்கும். ஆகவே விஷயத்தைக் கூறிவிடுகிறேன.

89672

அந்த பொல்லாத மனுஷர் ஜெயந்தி புரொடக்ஷன்ஸ் மானேஜரான கிருஷ்ணமூர்த்தி. நாங்கள் பேசிக்கொணடிருந்த இடம் வாஹினி ஸ்டுடியோவில் போடப்பட்டிருந்த ஜெயந்தியின் படமான பொன வயல் 'ஸெட்'டில்.

இன்றைய தினம் யார் யாருக்கு படப்பிடிப்பு? இது என்ன கட்டம் என்று விசாரித்தபோதுதான் ஆரம்பத்தில் சொன்ன சம்பாஷணைகள் எங்களிருவரிடையே நடைபெற்றன.

செங்கோடன் ஒரு விவசாயி. வெளுத்ததெல்லாம் பால் என்று நினைக்கும் பரம சாதுவான ஜந்து. அவனைக் காதலித்து வருகிறாள் ஒரு பட்டிக்காட்டுப் பெண்.

சினிமாவில் சேர்க்கிறேன் என்பதாகப் பொய் சொல்லி பங்கஜவல்லியைக் கடத்தி வந்து விடுகிறார்கள், பங்காரு, எஸ்ராஜ் இருவரும். செங்கோடன் தனது செல்வத்தையெல்லாம் பூமியில் புதைத்து வைத்திருப்பதை அவர்கள் அறிந்து, அபகரிக்க திட்டம் போடுகினறனர். பங்கஜவல்லி இதற்கு ஒரு கருவியாக உபயோகப்படுத்தப்படுகிறாள்.

செங்கோடனின் குடிசைக்கு பங்கஜவல்லி. எஸ்ராஜ். பங்கா(ரு) மூவரும் வருகின்றனர்.

''வா போகலாம்!'' என்று பங்கஜவல்லியைப் பார்த்து கூப்பிட்டுக்கொண்டே அவர்களை அழைக்கிறான் செங்கோடன்.

மூவரும் அவனது குடிசை வாயிலில் வந்து நிற்கிறார்கள். பங்காருவும். எஸ்ராஜும் ஏதோ தீவிரமாக சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்கள் புகை பிடித்த தோரணை தெரிவித்தது.

ஆம்! அவர்களது சிந்தனையில் சிக்குண்ட பிரச்னை, செங்கோடனின் செல்வம் எங்கே வைக்கப் பட்டிருக்கிறது என்பதுதான.

இந்தக் காட்சியே அனறையதினம் நான சென்றபோது படமாக்கப் பட்டது.

பேசும் படம் மலர் 1952 விலை ரூ. 5/-

'பேசும் படம் மலர் 1952' கிடைக்காதவர்களுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் இனனும் சில பிரதிகள் கைவசமிருப்பதால் வாசக நேயர்களுக்கு அவைகளை விநியோகிக்க எண்ணியிருக்கிறோம். ரூ. 5 அனுப்புகிறவர்களுக்கு தபால் செலவின்றி மலர் அனுப்பி வைக்கப்படும்.

பேசும் படம் : : சென்னை-14

1953 காலண்டர்கள்

10"×15" அளவிலும், 11"×18" அளவிலும் ஏராளமான சினிமா நக்ஷத்திரங்களின் மூவர்ணப் படத்துடன் கிடைக்கும்.

- 500 காலண்டர்களுக்கு குறைந்து சப்ளை செய்ய இயலாது.
- முன்பணம் இல்லாமல் வரும் ஆர்டர்கள் கவனிக்கப்பட மாட்டாது.
- சாம்பிள் செட்டுக்கு ரூ. 2/8 மணியாடர் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

ராமநாத் பிரஸ்

சென்னை-14